## சுன்னாகம் - மயிலணி

# அருள்மிகு மயிலணிக் கந்தசுவாமி கோவில்



# மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர்

31.05.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# சுன்னாகம் – மயிலணி

## அருள் மிகு

# கந்தசுவாமி கோவில்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

தாரண வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள்

15-09-2004

வெளியீடு

மயிலணிக் கந்தசுவாமி கோவில் திருப்பணிச்சபை,

மயிலணி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை : மயிலணிக் கந்தசுவாமி கோவில்

அட்டைப்படம் :
அச்சுப்பதிப்பு : } கரிகணன் பிறிண்டேர்ஸ், காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம்.

## மலர் வெளியீட்டுக் குழு

01) பிரம்மஸ்ரீ ச.பிரணதார்த்திஹர சர்மா

02) பிரம்மஸ்ரீ கா.ஸ்ரீநிவாசன்

03) பிரம்மஸ்ரீ வ.உமாசுதசர்மா

04) திரு.சு.துரைசிங்கம்

05) திரு.அ.சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே.....


| | | |
|---|---|---|
| 1. | மயிலேறி வந்து மனச் சஞ்சலமகற்றும் மயிலணிக் கந்தன் | 01 |
| 2. | செல்வத்துட் செல்வம் திருமுறைச் செல்வம் | 03 |
| 3. | பெற்றும் உகந்தது கந்தனையே | 08 |
| 4. | இந்துமதத்தில் இயற்கை வழிபாடும் அன்பு நெறியும் | 11 |
| 5. | விதி – சில சிந்தனைகள் | 15 |
| 6. | வாழ்க்கையில் சைவமும் அதன் மேன்மையும் | 20 |
| 7. | ஈழத்து முருக வழிபாட்டின் தொன்மையும், தனித்துவமும் | 24 |
| 8. | சைவாலயங்களில் வேதம், ஆகமம், யாகம் | 37 |
| 9. | மறைந்தும் மறையாத மாணிக்கம் | 46 |
| 10. | மயிலணிக் கந்தசுவாமி கோவில் திருப்பணிச் சபை | 48 |
| 11. | திருப்பணிச் சபையினரின் குறிப்பு | 49 |
| 12. | திருப்பணி வேலைகள் குறித்து அன்பளிப்புச் செய்த முருகன் அடியார்கள் | 50 |
| 13. | ஆலய விஷேட உற்சவங்களும் உபயகாரர்களும் | 51 |
| 14. | எமது நன்றிக்குரியோர் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக பிரதம குருக்களின்

# ஆசியுரை



ஆலயம் என்ற சொற்பதம் ஆன்மாலயப்படுகின்ற, நிம்மதியடைகின்ற இடமாகக் கருதப்படுகின்றது. இந்தவகையில் மானிடராகப் பிறந்தவர்கள் சிவதர்மம் என்று சொல்லப்படுகின்ற ஆலயங்களைக் கட்டுதல், புதுப்பித்தல் போன்ற சிறந்த கைங்கரியங்களைச் செய்து வருகின்றனர். மயிலணி முருகன் ஆலயமும் இவ்வாறே அமைகின்றது. பன்னெடுங் காலமாகக் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் முருகன் ஆலயமும் இன்று புதுப்பொலிவுடன் அழகுமிக்க ஆலயமாகக் காட்சி, தருகின்றதென்றால் அடியார்களின் அபார பக்தியின் மேன்மை என்றே கூறலாம்.

முருகு என்றால் அழகு, இளமை, மணம், தெய்வம் எனப் பல பொருள்பட இன்று அழகு தெய்வமாக, அருளும் தெய்வமாக, மணம் கமழும் இளமைத் தெய்வமாக மயிலணிப் பதியில் முருகப் பெருமான் காட்சி கொடுக்கின்றார். சிவபிரானின் நெற்றிக்கண்ணில் வெளிப்பட்ட ஒளியானது தனக்கு மேல் வேறு பரம் பொருள் இல்லை என்ற நிலையின் ஊடாகச் சுப்பிரமணியம் என்ற நாமம் கொண்டு மாயைச் சக்திகளை ஊடறுத்து நான் என்ற அகந்தையைக் களைந்து பெரும் சக்தியாகத் திகழ்கின்றதென்றால் என்னே முருகன் பெருமை. இதனைத் தான் கச்சியப்ப சுவாமிகளும் "உலகம் உய்வடைவதற்காக ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன்" என்று பெருமைப்படுத்திக் கூறுகின்றார். சோமாஸ்கந்த மூர்த்தத்திலும் சிவன், உமை, முருகன் சேர்ந்து பிரிக்க முடியாத சச்சிதானந்தமாக விளங்குகின்ற பெருமையும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இச்சா சக்தியாக வள்ளிநாயகியும் கிரியா சக்தியாகத் தெய்வ நாயகியும் ஞானாசக்தியாக வீரவேலும் சேர்ந்து மூன்று சக்திகளையுடைய பெருமைக்குரியவன். மற்ற தெய்வங்களுக்கு இல்லாத ஆயுதமாக வேல் உடையவன். தமிழ் மொழியில் ஆய்த எழுத்து சிறப்பாக அமைந்தது போல் தமிழ் தெய்வமாகிய முருகனுக்கும் வேல் சிறந்த ஆயுதப்படையாக அமைந்துள்ளது. இதனையே நக்கீரப்பெருமான் பாடலாக

"வீரவேல், தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேல் , திருக்கைவேல், வாரிகுளித்த வேல், கொற்றவேல், சூர் மார்புங் குன்றும் துளைத்தவேல் என்று கூறுகின்றார்.

இப்படியாக முருகனின் பெருமையைக் கூறும் இம்மலரானது இந்த கும்பாபிஷேக நன்நாளில் வெளிவருவதையிட்டுக் கருணைக் கடல் வள்ளல் கலியுகக் கந்தன் முருகப் பெருமானைப் போற்றிப் பணிந்து நல்லாசி கூறுகின்றோம்.

"வேலை வணங்குவதே வேலை"

சிவஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்கள்,
கும்பாபிஷேக பிரதமசிவாச்சாரியார்,
மயிலணி, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை ஆதீன கர்த்தா அவர்களின்

# அருளாசியுரை



இப்போது கலியுகம் நடைபெறுகிறது. இந்த யுகத்தில் முருகப்பெருமானை நினைந்து வழிபடுதலே சிறப்புடையது. எங்கெல்லாம் முருகஸ்தலங்கள் உளதோ அங்கெல்லாம் கலியுகவரதனது பூசைகள் விழாக்கள் யாவும் உன்னதமாக நிகழ்த்துதல் அவசியம். அதன் மூலம் பிரபஞ்சத்தையே தர்ம உலகாக மாற்ற இயலும்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஸ்கந்தர் என ஸ்கந்தபுராணம் வலியுறுத்துகிறது அவரே பிரணவ ஸ்வரூபி, சங்கர சம்ஹிதையும் இதனை உறுதி செய்கிறது. சிவன் பார்வதிக்கு ஸ்கந்தருடைய விபூதிகளைக் கூறுமிடத்தில்,

"ஸர்வதேவாத்ம கஹ-ஸ்கந்தஹ ஸர்வலோ காத்மக ஸ்ததா
ஸர்வ பூதாத் மகாசைவ ஸாக்ஷத் பிரம்ஹ ஸனாதனம்" எனக்

கூறியவாறு வியாச மஹிரிஷிக்கும் கூறப்பட்டது. இதனையே கந்தபுராணத்திலும்,

"ஆதலினமது சக்தி யறுமுகவைனும் யாமும்
பேத மன்றானம் போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல் வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"

எனப் பேசப்பட்டுள்ளது.

விஸ்வரூப தரிசனங்களின் வாயிலாக முருகப் பெருமான் தனக்குள் யாவும் அடக்கம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். தனது பெருமை, வலிமை, திருவருட்திறன் என்பவற்றை இந்திராதி தேவர்களுக்குக் காட்டுவதற்காக எடுக்கப்பட்டதே முதலாவது விஸ்வரூபம்.

சூரபன்மனது பெருந்தவத்தை உணர்ந்து நல்வினையை அவன் மேற்கொள்ள வைப்பதற்காக அவனுக்குக் காட்டிய விஸ்வரூபம் இரண்டாவதாகும். மூன்றாவது விஸ்வரூபம் தன்மீது காதலாகி கசிந்துருகி எல்லையற்ற பக்தி, விசுவாசம் கொண்ட வீரவாகுதேவர்களுக்குக் காட்டியதேயாம்.

முருகனே பரப்பிரம்மம் இதையுணர்ந்தோருக்கு ஸ்கந்த சாயுச்சியம் கிடைக்கும். முக்தியும் பெறலாம். நினைத்த காரியங்கள் எதிலும் வெற்றியைப் பெறலாம்.

முருகனது தரிசனம் பற்றி ஞானியர்கள்,

"வேதா ஏவமயூரஹ – ஸ்யாத் ப்ரணவஹ ஷண்முகஸ்ததா
ப்ரம்ம வித்யா பிசக்திஹி ஸ்யாத் முக்திஹி தத்தர்சனாத் ஸ்மிருதாஹ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறியவாறு, மயில்தான் வேதஸ்வரூபம் – வேதஸ்வரூபமே எதனையும் வழங்கும் என்ற ஹோதாவில் முருகன் தானே வேதசாரமாக " சண்முகனாகக் காட்சி தருகிறார். திருக்கரத்தில் விளங்கும் வேல் ஞானசக்தி இதுவே ப்ரும்ம வித்யை இத்தகையஅம்சங்களோடு முருகனைத் தரிசித்தால் வேண்டிய வரங்களும் சித்திகளும் பெறமுடியுமெனக் குமார தந்திரம் தரவுகள் தருகின்றது.

வாக்களிக்கும் இறைவனாக முருகன் தோன்றுவதால் அவரை சுப்பிரமணியன் என்றும் துதிசெய்யப்படுகின்றது.

முருகப் பெருமானை கார்த்திகை நட்சத்திரங்களிலும், செவ்வாய் வெள்ளி வாரங்களிலும் வழிபாடு செய்பவர்களுக்கும் தீப சாதனங்கள், மணி என்பன அர்ப்பணம் செய்வோருக்கும் வாக்குச் சித்திகளையும் வெற்றிகளையும் முருகப்பெருமான் தந்துதவுவார். எனச் சகல நூல்களும் கூறும்.

இக்கலியுகம் பல திக்குகளிலிருந்தும் பல்வேறு இடர்களை இவ்வுலகத்திற்குத் தந்து கொண்டிருக்கின்றது. இந்த ஈழ மண்டலம் ஆதியிலிருந்தே தெய்வீக சகாயங்களைப் பெற்று உயிர் கொண்டதென இதிகாச புராணங்கள் குறிப்பிடுகின்றன.

ஆனால் மக்கள் தெய்வீக சகாயங்களைப் பெறும் மார்க்கங்களை விலத்தி, வேறு எதனையோ நாடி நிற்பதால் தான் கலியுகத்தின் அளவற்ற இடர்களுக்கு ஆளாகுகின்றனர்.



எனவே கலியுக வரதனை நம்பி துதி செய்து அவர்தம் விழாக்களை மேம்படுத்தி யாம் வாழ்வோமானால் நிச்சயம் நாம் இருக்கும் நாடு நமதே என்ற பலனை மிக விரைவாக எளிதிற் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

முருகஸ்தலங்கள் ஏராளமாக இருப்பினும் சில ஸ்தலங்களே அருள்தரும் ஸ்தலங்களாக அமைந்திருக்கின்றன. மயிலணி கந்தசுவாமி கோவிலும் ஆதியிலிருந்து இன்றுவரை அளவற்ற திருச்செல்வங்களைத் தந்து நிற்கின்றது. இப்போ பூரணத்துவங்கொண்ட ஸ்தலமாக அமையப்பெற்றுக் கும்பாபிஷேகமும் ஏற்று பக்தர்களது இஷ்டகாம்ய சித்திகளை இன்னும் அதிக அளவிலே தரும் வாய்ப்பினையும் பெற்று அமைகிறது. பூசை, வழிபாடு, உற்சவங்கள் மூலம் பக்தர்கள் இத்தலத்திற்குக் காந்த சக்தியூட்டி இந்த ஈழமண்டலம் உய்வுபெற அனைவரும் பிரார்த்திப்போமாக.

மஹாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்.
மாவை ஆதீன கர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் மயிலணிப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் ஆலயத்தில் திருப்பணிகள் நிறைவேறி முருகப்பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேக வைபவத்தைக் காணும் பேறு அவ்வூர் மக்களுக்குக் கிட்டியுள்ளமை அவர்கள் செய்த தவப்பயன் எனில் மிகையில்லை. சைவமும் தமிழும் காலந்தோறும் மேன்மையடைந்து வரும் இக்கிராமத்தில் மக்களுக்கு இக்கும்பாபிஷேகத் திருவருட்பேறு கிட்டவிருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகப்பெருமான் எமக்கு நல்லருள் பாலிக்கும் முருகப்பெருமானின் தெய்வீகப் புகழ் கூறும் கந்தபுராணத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்துவரும் மரபு பன்னெடுங் காலமாக இப்பிரதேசத்தில் இருந்து வருகின்றது. அதன் பயனாய் 1830ஆம் ஆண்டு முருகப்பெருமானுக்கு அரியதோர் ஆலயம் அமைக்கப்பெற்று வழிபாடு இடம்பெற்று வந்துள்ளது. ஆரம்பத்தில் எழுந்த மஹாவிஷ்ணு கோயிலை அடித்தளமாகக் கொண்டு இந்த ஆலயம் உருவாகியுள்ளது. 1918, 1950, 1955, 1976 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களைத் தொடர்ந்து வைகாசி மாதம் 18ஆம் நாள் (31.05.2004) திங்கட்கிழமை ஐந்தாவது மகாகும்பாபிஷேகம் கந்தன் அருளால் நிறைவேறியுள்ளது. இவ்வரிய பெருஞ் சாந்தியினால் தெய்வீக சாந்நித்தியம் மிகுந்து ஆலயமும், ஊரும் பொலிவு பெற்று விளங்குவது போன்று அடியார்களது உள்ளங்களும் தூய தெய்வீக சிந்தனைகளால் பொலிவு பெற்று வாழ்வு சிறக்க எம்பெருமானது திருவருட் கடாட்சம் கிடைக்க வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.' இந்த ஆலய சிவாச்சாரியாரதும் பரிபாலன சபையினதும், திருப்பணிச் சபையினரதும் அயராத முயற்சியினால் இத்தகைய சிவபுண்ணிய கைங்கர்யம் கைகூடியுள்ளது.

இத்தகைய சீரிய பணியில் தம்மை ஈடுபடுத்திய அனைவருக்கும் முருகப் பெருமானின் திருவருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, இக்கும்பாபிஷேகத்தின் பயனாய் எங்கும் சாந்தியும், சமாதானமும் இன்பமயமான வாழ்வும் சிறக்க வேண்டுமென வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

குருவருளும் திருவருளும் அனைவருக்கும் கிட்டுவதாகுக! கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எம்பெருமானின் நித்திய நைமித்தியங்கள் குறைவின்றி நிறைவேற அனைவரும் பக்தி உணர்வுடன் தம்மை ஈடுபடுத்தி நல்லருளுக்குப் பாத்திரராக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்,
கலைப்பீடாதிபதி,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை



தேவாலயங்களிலே 12 வருடத்திற்கு ஒருமுறை மஹா கும்பாபிஷேகம் நடைபெற ஆகமம் விதித்திருக்கிறது. அதற்கு பல காரணங்கள் உண்டு. ஸ்தூபிகள் விமானங்களின் வர்ணங்கள் 12 வருடத்தில் மங்கக்கூடும். அஷ்டபந்தன மருந்தும் பலம் கெட்டிருக்கும். கும்பாபிஷேகத்திற்கு உரிய தெய்வசாந்நித்திய மந்திரங்களை ஆலயத்தில் உச்சரிக்கும் போது அதனுடைய சக்தி வியாபித்து கிராமத்திற்கு நன்மை ஏற்பட வழிசெய்யும். எல்லாவற்றையும் விட முக்கியமாக கிராம மக்களுக்கு 12 வருடத்திற்கு ஒருமுறை மூர்த்திகளை தங்கள் கையினால் தீண்டி எண்ணைக்காப்பு சாத்த சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தொடர்ந்து 48 நாட்கள் மண்டல அபிஷேகம் நடைபெற்று தெய்வ சாந்நித்தியம் ஸ்திரப்படுத்தப்படுகின்றது. யந்திரத்திலும் தெய்வ சாந்நித்தியம் புனரமைக்கப்படுகின்றது. இப்படியாகப் பல காரணங்கள் புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்ய வலியுறுத்தப்படுகின்றது.

மயிலணி கந்தசாமி கோவில் மஹாகும்பாபிஷேகம் அடியார்கள் பக்தர்கள் முயற்சியாலும் ஆலயத்தைச் சேர்ந்த அந்தணப் பெருமக்களின் ஒத்துழைப்பாலும் முருகப் பெருமான் திருவருளாலும் இனிது நிறைவேறி மஹோற்சவமும் சுபமாக நிறைவேறியிருக்கிறது. ஆலயத்தைச் சேர்ந்த அந்தணப் பெருமக்கள் தர்ம பரிபாலகர்கள், திருப்பணி செய்தவர்கள், முருகப்பெருமான் அடியார்கள் எல்லோரும் வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமண்யேஸ்வரப்பெருமான் திருவருள் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

"சாதகரத்னாகர" "சிவாகம ஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுல அதிபர் ,
காயத்திரீபீடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# வாழ்த்துரை



"எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலம் ஆனவை தீர்த்தருள்வாய்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குகனே மறை நாயகனே"

நமது மண்ணில் ஆங்காங்கு அமைந்த ஆலயங்கள் தோறும் குடமுழுக்கு விழா நடைபெற்று வரும் மகிழ்ச்சியை இன்று அனுபவிக்கின்றோம். சுன்னாகம் பதியிலே மயிலணி என்ற கிராமத்துக்கு தனி மதிப்புண்டு. ஆலயங்களாலும், அறநெறிச் சான்றோர்களாலும், அந்தணப் பெருமக்களாலும் பெருமையடைகின்ற கிராமம் இதுவாகும். இங்கு வாழும் மக்கள் சைவ வாழ்வு வாழ்ந்து எம்மவர்க்கு பெருமை ஊட்டித் தருகின்றனர்.




மயிலணியில் அமைந்த கந்தனுடைய ஆலயம் அற்புதமும், கீர்த்தியும் வாய்ந்தது. சமீபத்தில் இங்கு நடைபெற்ற குடமுழுக்கு விழாவை ஒவ்வொருவரும் போற்றிப் புகழ்ந்தனர். அந்தணர்களின் ஒழுக்க சீலமும், பயபக்தியும் இதற்கு முதற் காரணமாகும். இந்த மண்ணிலும் பிறநாட்டு மண்ணிலும் வாழ்ந்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் அன்பர்கள் பலரின் ஒருமுகப்பட்ட பக்தி உணர்வுக்கு எமது பாராட்டுகள் உரித்தாகுக. கந்தப் பெருமானின் திருவருளை முன்னிட்டு மேலும் மேலும் இவ்வூர் மக்கள் சைவ எழுச்சி பெற்று ஆலயங்களை உயிராக மதித்து வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி .
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.
ஸ்ரீ லங்கா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது ஆலய பிரதமகுரு

அமரர். ச. வரதராஜேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலேறி வந்து மனச் சஞ்சலமகற்றும் மயிலணிக் கந்தன்

எங்கள் ஈழமணித் திரு நாட்டிலே சைவமும் செந்தமிழும் செழிப்புற்றோங்கும் இடங்களுள் ஒன்றாகத் திகழ்வது யாழ்ப்பாணத்து சுன்னாகத்தைச் சேர்ந்த மயிலணி என்னும் சிற்றூர். இங்குள்ள மக்கள் அனைவரும் சமய வழிபாடு களிலும், சமய வாழ்க்கையிலும் பேரார்வம் உடையவர்கள். இம் மக்களது சமய ஈடுபாட்டையும் நம்பிக்கைகளையும் வளர்த்து வரும் ஆலயங்களுள் மயிலணிக் கந்தசுவாமி ஆலயம் குறிப்பிடத் தக்கது.

இந்த ஆலயம் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டு காலப் பழமை மிக்கது. 1830 ஆம் ஆண்டளவில் முருக பக்தர் ஒருவரால் முருகனுக்கெனச் சிறிய கோயில் ஒன்று அமைக்கப்பெற்று முருகனுக்கு விசேட பூசைகள், வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. விரைவில் ஆகம விதிப்படி புனருத்தாரணம் செய்யப்பட்டது. 1840 ஆம் ஆண்டில் ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 12 நாள் மஹோற்சவம் நடைபெறத் தொடங்கி யது. முருகன் ஆலயம் வளர்ச்சியடைய இவ்வாலயத்திற்கு அருகிலிருந்த பழமை வாய்ந்த மஹாவிஷ்ணு,. நரசிங்க வைரவர் சந்நிதிகள் பரிவார மூர்த்தி சந்நிதிகளாயின. காலப் போக்கில் பிள்ளையார், சிவன், அம்பாள், மஹாலஷ்மி, சனீஸ்வரர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். 1918, 1950,1955, 1976 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கும்பாபிஷேகங்கள் விஷேடமாகக் குறிப்பிடத்தக்கவை.

தென்னிந்தியாவிலுள்ள கும்ப கோணத்தில் இருந்து, பல்லாண்டுகளின் முன்னர் வந்து மயிலணியிற் குடியேறிய இராமஐயர் என்பவரின் வழித்தோன்றல்களே இக்கோயிலின் பரம்பரைப் பூசகர்களாக இன்றும் பணியாற்றி வருகின்றனர். ஆரம்பத்திலே சிவஸ்ரீ கார்த்திகேயஐயர் அவர்களும், 1880 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீநிவாசக் குருக்கள் அவர்களும் 1920 ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களும், 1955 ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் அவர்களும், 1971 ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ வரதராஜேஸ்வரக் குருக்கள் அவர்களும் பிரதம குருவாக கோயிலின் நித்திய நைமித்தியக் கிரியைகளைச் சிறப்பாக ஆற்றி வந்துள்ளனர்.

ஆனி மாதத்தில் நடைபெறும் 12 நாள் மஹோற்சவம், கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை, மாதாந்தக் கார்த்திகைத் திருவிழா, திருவெம்பாவை என்பன விசேட விழாக்களாகும்.

ஆலயத்தின் சிறப்பையும், மயிலேறி வந்து மனச்சஞ்சலம் அகற்றும் முருகனின் அருட் பிரவாகத்தையும், மகிமைகளையும் எடுத்துக் காட்டும் வண்ணம் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்களின் மகன் கு.முத்துக்குமார சாமிப்பிள்ளை அவர்கள் மயிலணி அந்தாதி, மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை ஆகியவற்றையும் பாடியுள்ளனர்.

அத்தியாவசியத் திருப்பணிகளை மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்காக 2000ஆம் ஆண்டு ஆவணியில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. எனினும் சென்ற 2003 ஆம் ஆண்டு இறுதிவரை திருப்பணி வேலைகள் மிகவும் மந்தகதியி லேயே நடைபெற்று வந்தன. இதனால் கும்பாபிஷேகம் தாமத மாவதை உணர்ந்த கோயிலின் முன்னாள் தர்மகர்த்தா வைத்திய கலாநிதி இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் சி.யோகநாதன் அவர்கள் மேற்கொண்ட முயற்சி யின் விளைவாக ஆலயத்திருப் பணிச்சபை அமைக்கப்பட்டது. 24.01.2004 இல் உருவாக்கப்பட்ட இச்சபை, உபயகாரர்கள் அடியார்கள் போன்றவர்களின் பூரண ஒத்துழைப்புடன் திருப்தி கரமான முறையிலே திருப்பணி வேலைகளைப் பூர்த்தி செய்து 2004ஆம் ஆண்டு வைகாசி 18ஆம் நாள் (31.05.2004) திங்கட்கிழமையும் துவாதசித்தி தியும். சுவாதி நட்சத்திரமும் சிந்தாமிர்த யோகமும் கூடிய முற்பகல் 11.45 மணிமுதல் 1.00 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேக மங்கல வைபவம் நடைபெற்று மயிலணி கந்தப்பெருமான் அடியார்களுக்கு வேண்டும் வரங்களை வழங்கி அருள் பாலிக்கின்ற அருங்காட்சியைக் கண் குளிரக் காண்கின்றோம்.

நல்ல ஆலோசனைகள், நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி போன்றவற்றை நல்கியும், வேறு பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியும் இத்திருப்பணியின் வெற்றிக்கு வழிவகுத்த ஒவ்வொருவருக்கும் பக்தி பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். அடியார்கள் அனைவரதும் மனச்சஞ்சலம் அனைத்தும் அகன்று பேரானந்த வாழ்வு வாழ மயிலணிக்கந்தப் பெருமான் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*திருப்பணிச்சபை,*
*மயிலணி கந்தசுவாமி கோவில்.*

## கந்த சஷ்டி

ஐப்பசி மாத அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக வரும் 6 நாட்களும் முருகனை நினைத்து அனுட்டிக்கும் விரதம் கந்தசஷ்டி ஆகும். அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு சூரபத்மனை சங்காரம் செய்த நாளும் இதுவாகும். இவ் ஆறு நாட்களும் காலையில் நீராடி முருகப் பெருமானை வழிபட்டு நீர் மட்டும் அருந்தி உபவாசமிருந்து ஏழாம் நாள் பாரணை செய்து விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும். முருகப்பெருமானின் விரதங்களில் இவ்விரதம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மேலானதாகவும் அமைகிறது. இவ் விரத காலத்தில் கந்தர் சஷ்டி கவசம் பாராயணம் செய்வதோடு 6வருடங்கள் அனுட்டிக்க வேண்டும். இதனை முறைப்படி அனுட்டித்தால் குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் குழந்தைச் செல்வம் கிடைக்கப் பெறுவர். மு- என்றால் முகுந்தன். ரு -என்றால் ருத்திரன். கா - என்றால் பிரம்மா இதனால் "முருகா" என்ற நாமத்தை சொல்வதனால் மூவரது பெயரை சொல்லும் புண்ணியம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வத்துட் செல்வம் திருமுறைச் செல்வம்

சைவசமய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து அவனருளாலே அவன் தாள் வணங்கிய பெருமையு டைய நாயன்மார்களால் சிவ னாரின் தொன்மை, பெருமை முதலியன கூறும் தெய்வத்தன்மை பொருந்தி யவை திருமுறைச் செல்வங்களாகும்.

வேத சிவாகமங்களை எப்படிப் போற்றிப் பாதுகாக்கின்றோமோ அப்படியே திருமுறைச் செல்வங் களையும் கண்ணின் மணிபோலப் போற்றிப்பாதுகாக்க வேண்டும். ஞானப்பாலூட்டியும், சூலைநோய் கொடுத்தும், திருமணப் பந்தலில் தடுத்தாண்டும் திருப்பெருந்துறை யில் பொருளுடன் ஆட்கொண்டு இறைவன் நல்ல குருவாக அடியார்களை ஆட்கொண்டு அவர்கள் வாயினாலே செந்தமிழ்ப் பாக்களைப் பாடுவித்தார்.

இப்படியே பெரியோர்களால் இறைவன் வாக்குப்படி பாடப்பட்ட திருமுறைகள் ஏட்டுப் பிரதிகளில் ஒரு காலத்தில் சிதம்பரத்தில் ஒரு திருவறையில் திருக்காப்புச் செய்தபடி இருந்தன. சோழமன்னராகிய அபயகுலசேகர மகாராஜா ஆலயங்களில் ஓதப்பட்ட சில திருமுறைகளைக் கேட்டு மனமகிழ்ந்து மக்கள் யாவரும் திருமுறை களை அறிய வேண்டுமென விரும்பினார்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளை யாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியை அவர் வேண்ட அவர்களும் தில்லைவாழ் அந்தணர்களை அணுகினர். அந்தணர்களோ திருமுறை பாடிய நால்வர் வந்தால் தான் திருக்கதவம் திறக்கும் என்றனர். மஹாராஜாவும் யுக்தியுடன் நால்வர் திருவுருவங்களைச் செய்வித்து ஊர்வலமாக எடுத்துவந்து, 'நால்வர் வந்துவிட்டனர் திருக்கதவம் திறந்தருள வேண்டும்' என விண்ணப்பிக்க அவர்களும் மகிழ்வுடன் கதவு திறந்தனர்.

அங்கே பல ஏட்டுப்பிரதிகளும் கறையான் மூடி அழிந்துகிடக்கக் கண்டு மனம் வருந்தி நிற்கும் போது 'இக்காலத்துக்கு வேண்டியவை யாவும் அழியாது, இருக்கின்றன. தேவையற்றவையே அழிந்தன என்று அசரீரி வாக்கினால் இறைவன் உணர்த்தியதும் கவலை ஒழிந்தனர்.

அதன்பின் திருமுறைகளை ஆராய்ந்து முதல் மூன்று திருமுறைகள் திருஞான சம்பந்தர் தேவாரமாகவும், அடுத்த மூன்று திருமுறைகள் திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களாகவும் ஏழாந்திருமுறை சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரமாகவும், எட்டாந்திருமுறை மாணிக்க வாசகரின் திருவாசகம், திருக்கோவையார் என்பன ஆகவும் வகுத்தனர்.

பின்னர் ஒன்பதாம் திருமுறையிலே திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மரின் திருவிசைப்பா மற்றும் சேந்தனார் அருளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு என்பனவும் பத்தாந் திருமுறையாக திருமூலரின் திருமந்திரமும், பதினோராம் திருமுறையிலே திருவால்வாயுடை யார் முதலி யோர் பாடிய நாற்பது பிரபந்தங் களும் பன்னிரண்டாம் திருமுறை யிலே சேக்கிழார் அருளிய பெரிய புராணமும் சேர்க்கப்பட்டன.

சோழமஹாராஜா திருமுறை களைப் புனிதமாகப் பேணி பண்முறைகள் வகுக்கச் செய்து ஆலயங்களிலே சிறப்பான இடம் கொடுத்து ஓதிவரச் செய்தார். பன்னிரு திருமுறைகளும் பண் ணோடு ஓதப்பட்டன. பிற் காலத்தில் பஞ்சபுராணம் என தேவாரம், திருவாசகம் , திரு விசைப்பா, திருப்பால்லாண்டு, திருப்புராணம் என்பன ஓதப்பட்டு வ்ருகின்றன. சில சந்தர்ப்பங்களில் தேவாரம் , புராணம் மட்டும் ஓதப்பட்டு வரும் வழக்கமும் உண்டு.

ஆலயங்களில் பல்வேறு கிரியைகளின் போது தேவாரப் பதிகங்களை ஓதுகின்ற வழக்கமும் உண்டு. செல்வத்துட்செல்வமாகிய திருமுறைகளிலே வினைகளைக் கெடுத்து வீட்டின்பம் நல்கும் இயல்பும், உண்மைத் தன்மையும், இறைவனின் தத்துவம், திருவிளையாடல்கள், விபூதிமகிமை, திருவைந் தெழுத்து மகிமை முதலியவற்றை விளக்கும் சிறப்பும் காணப்படுகின்றன. இவற்றைப் பாடிய ஞானவான்கள் அன்பும், அருளும், அருள்வழி செலுத்தும் இயல்பும் உடையவர்கள்.

இத்திருமுறைகளை நான்கு வருணத்த வரும் ஓதலாம். சமயதீட்சை பெற்றவராகவும், சிவபக்தி உடையவராகவும், சிவசின்னங்கள் அணிந்தவராகவும், ஆசாரசீலராகவும், பெரியோர், சிவனடியார், குரு, சிவசின்னங்கள் இவற்றைப் போற்றுபவராகவும், பண்முறைகள் தெரிந்தவராகவும் இருத்தல் அவசியம்.

வள்ளுவனார். பொருட்செல்வம் பூரியரிட த்தும் இருப்பதனால் அருட்செல்வமே செல்வங்களுள் எல்லாம் மேலான செல்வம் என்பர். மானிட வாழ்க்கையில் இலௌகீக வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டு வனவற்றையெல்லாம் நாம் செல்வங்கள் என்று எடுத்து ஏத்துகிறோம். கல்விச்செல்வம் பொருட்செல்வம், மக்கட்செல்வம் என்று இவற்றையெல்லாம் செல்வங்களாகப் போற்றுகி றோம். ஒரு வழியில் நமக்கு அவை மகிழ்ச் சியைத் தருவதால் அவைகளை நாம் செல்வங்க ளாகப் போற்றுகிறோம். ஆனால் அவை நிலைத்திருப்பதில்லை நிலைத்திருப்பினும் ஓர் வழி நமக்குப் பயன்படுவதில்லை

அழகிய மனைவியைச் செல்வமாகக் கொள்ளும் போது அழகற்றவிடத்துச் செல்வம் சீரழிந்துவிடுகிறது. வறுமை வந்துற்றபோது செல்வத்தைப் பற்றிப் பேசுவதால் பயனில்லை. இன்னோரன்னவற்றை நாம் ஆழமாக உற்று நோக்கும் போது செல்வமோ, செல்வத்தால் கிடைக்கும் இன்பமோ நிலையானதல்ல அதனால் தான் இன்பங்களைத் தரவல்ல எல்லாச் செல்வங்களையும் விடமேலான செல்வம் செல்வத்துட் செல்வம் திருமுறைச் செல்வம் என்று போற்றுகிறோம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்து அமுத ஞானசம்பந்தருடைய மெய்வாக்கும் அவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.

'இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே' 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' 'சூலப் படை யானைச் சொன்ன தமிழ்மாலை கோலத்தாற் பாடவல்லார் நல்லாரே' என்றெல்லாம் முத்தமிழ் விரகர் இத்தலத்தோருக்கு வித்தகத் தமிழால் எடுத்து விளம்புவார்.

திருமுறைச் செல்வத்தை வாய் உள்ளவர்கள் எல்லோரும் வாழ்த்த லாம். செவி உள்ளவர்கள் எல்லாம் கேட்கலாம். மனம் உள்ளவர்கள் எல்லாம் உள் மகிழலாம். மீண்டும் மீண்டும் திருமுறைகளைப் பாராயணம் பண்ணப் பண்ணக், காதாரக் கேட்கக் கேட்க, மனதார நினைக்க நினைக்க ஊருணி நீர்போலத் திருவருள் பெருக்கு ஊற்றெடுக்கும். அதன் பேறாக நலம் விளையும். தீமை குன்றும் செல்வம் பெருகும் வானம் வற்றாது வழங்கும். வயல் விளைச்சல் தப்பாது களவு கன்னக்கோல் கரக்கும் நாடு நலம் பெறும் அல்லல் அகலும். தொல்லை தூரப் போகும் இல்லம் இன்புற்று ஓங்கும்

இவ்வாறான அடைய முடியாத அனைத்துப் பேற்றையும் அள்ளிச்சொரியும் ஆற்றல் திருமுறைகளை முறையாக ஓதுவதால் ஏற்படும். இது முக்காலும் உண்மை.

வயதிற் குறைந்த குழந்தை முதல் வயோதிபர் வரை எவரும் திருமுறைகளை ஓதத் துணியலாம். ஏனைய செல்வங்கள் உருவாக்கும் இன்பங்கள் யாவும் துன்பத்தில் முடிவுறும் திருமுறை ஓதுவதால் இன்பம், கேட்பதால் இன்பம், வீட்டின்பம் தருவதால் இன்பம், நோய்வாய்ப்பட்டிருப்பினும் உயிர் பிரியும் போதிலும் உயிர் பிரிந்த பின்னரும் ஓதுவதாலும் இன்பம் ! இன்பம் !! இன்பம் !!! எந்நாளிலும், எந்த வேளையிலும் ஓதினாலும் இன்பமேயன்றித் துன்பமில்லை. இந்தத் தனியான சிறப்புத் திருமுறை ஒன்றிற்கே அன்றிப் பிறிதொரு பனுவலுக்கு இன்றாகும். அதனால் செல்வங் களுட் தலையாய செல்வம் திருமுறைச் செல்வ மாகும்.

கிரகப்பகை, செல்வஆக்கம், நோய் நீக்கம், இடர்களைதல், இயமன் தூதர் அஞ்ச, சிவலோக வாழ்வு சித்திக்க, நன்மக்கட்பேறு, பகை நீங்க, நல்லோர் தொடர்பு கைவர, ஆதிதைவிகம், ஆதி, ஆத்மிகம், ஆதி பௌதிகம் எதுவாக இருந்தாலும் அவற்றில் எல்லா வற்றையும் பகை களைந்து நட்பை வளர்க்கும் திருவருள் வல்ல திருமுறைப் பாராயணம் தரவல்லது 'ஓ' என்று (தோடுடைய) தொடங்கி 'ம்' என்று நிறைவு பெறுகிறது. திருமுறை ஓம் என்ற மந்திர மறை பொருளாய் நின்று ஒலிப்பது.

ஈசனுடைய இருக்கையாகவும், ஏனைய வர்களுடைய தோற்றத்துக்கு வசமாகவும் உள்ளது ஓம். பிரணவப்பொருள் உணராது பிரமதேவன் மயங்கியதால் அல்லவா நான்கு முடிகளும் குலுங்கக் குமரப் பெருமான் திருக்கரத்தால் குட்டு வாங்கினார்.

பாவமும் பழி பற்றற வேண்டுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவில் அஞ்சுகந் தாடும் அரன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்ளுருகுமின்
காவலாளன் கலந்தருள் செய்யுமே

என்னும் தேவாரம் ஐந்தாம் திருமுறையிலுள்ளது. ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகை களின் தொகுப்பாகும். திருநாவுக்க ரசரால் பாடப் பெற்றது. மேலே காட்டப் பெற்ற தேவாரம் விளங்கும் திருப்பதிகத்திற்குப் 'பாவநாசத் திருக்குறுந் தொகை' என்று பெயர். தேவாரமும் 'பாவமும் பழி' எனத் தொடங்குவது ஈண்டு நோக் கற்பாலது.

அதேபோலப் 'பற்றாற்றார் சேர் பழம்பதியை' எனத் தொடங்கும் பதிகத்திற்கும் பாவநாசத் திருப் பதிகம் என்று பெயர். இறை வனுக்கும் 'பாபநாசர்' என ஒரு நாமம் உண்டு. பிறவிதொறும் நாம் செய்யும் பாவங்களை நீக்குபவர் எனப் பொருள் தரும்.

பாவபுண்ணிய இருவினைகளே நமது பிறவிக்கு ஏதுக்கள். பாவபுண்ணியச் சமநிலை நமக்கு ஏற்படுமாயின். இருவினை ஒப்பு நிகழும் இருவினை ஒப்பு ஏற்படின். சத்திநிபாதர் ஆவர். அந்நிலை வாய்க்கப் பெறாதவர் அந்நிலை வரும்வரையில் பிறவி என்னும் சாகரத்தில் துன்னுவர் எத்தனையோ பிறவிகளில் சேகரித்துக் கொண்ட பாவபுண்ணியங்கள் நமக்கு இன்பமும் துன்பமுமான அனுபவத்திற்கு வரும் ஒவ்வொரு பிறவியிலும் அவரவர் அனுபவிக்கத் தகுந்த பாவ புண்ணியங்களை இறைவனே நமக்கு அளந்து தருவார். அதனால் அதன் தார்ப்பரியத்தை நாம் அறியமாட்டோம். கண்டதே காட்சியாகக் கொண்டாடும் நாம் அவ்வுண்மையை உணராது மதிமயங்கி ஒருவரைப் பார்த்து "மிதித்த இடத்துப் புல்லும் சாகாத இருவருக்கு இப்படிப்பட்ட பெருந் துன்பம் வந்ததே" என்று எண்ணி ஏங்கி இரங்குகிறோம்.

எப்படிப்பட்ட இன்பமாக இருந்தால் என்ன அல்லது அதற்கு இரட்டிப்பான துன்பமாக இருந்தால் என்ன அவையாவும். " தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்பது ஆன்றோர் வாக்கு. இன்ப துன்பங்கள் பிறரால் நமக்குத் தரமுடியாதவை நாமாகவே தேடிக்கொண்டவை. நாம் இறைவனுக்குச் செய்யும் அர்ச்சனை வழி பாடுகளால் சிறுகச்சிறுகத் தேய்ந்தாலும் எஞ்சியவற்றை நாம் அனுபவிப்பதில் இருந்து விலகமுடியாது. அதனால் தான் முத்தமிழ்விரகர் தமது வித்தக வாக்கால் "பிரமாபுரத்து மறைஞான முனிவன் தானுறு கோளுநாளு மடியாரை வந்து நலியாத வண்ணமுரைசெய் ஆனசொன் மாலையோது மடியார்கள்" என்று அருளிச் செய்தார். "வண்ணம் "என்று நலியாத" "அடியாரை வந்து நலியாத என்று அழுத்தம் கொடுத்தமை ஈண்டு சிந்திக் கற்பாலது. வாய்மை திறம்பா வாகீசனாரும் "கொடுமை பல செய்தன நானறியேன்" என்கிறார் நான் பல தீமைகள் செய்து அறியேன் அப்படியிருக்க என்னால் ஆற்றாது தோற்றா தென் வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட எப்படி வந்தது? என்று இறை வனிடத்தில் ஆசங்கிக்கிறார். திருநாவுக்கரசரு டைய நிலைமையே அவ்வாறாயின் நாம் ஒருவரைப் பார்த்து வராத நோய் இவருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராமல் வந்தவாறு ஏதோ என்று ஆராதிக்க லாமா?

இந்த உண்மையை உணர்ந்தே சமயாசாரியார்கள் பாவநாசத் திருப்பதிகங்களை நமக்குப் பாடித் தந்தார்கள். அப்பதிகங்களை நாள் தோறும் ஓயாது ஓதிவர "விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் உண்ணிய புகலிவை ஒன்றுமில்லையாம் பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றறுப்பது நமச்சி வாயவே" என்பது போலப் பாவம் நாசமாகும்.

"துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச் சூழுலகி லூழ்வினை வந்துற்றலென்னே... பவனாகி என்னுள்ளத் துள்ளே நின்று பண்டை வினையறுப்பா யென்றேன் நானே"

" தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே திருவையாறகலாத செம் பொற்சோதி"

"நாடவல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் மறையுமே" போன்ற அமுத வாக்குகள் எல்லாம் விஞ்ஞான உலகில் எமது அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானத்தை மிளிரச்செய்யும் . தேனினும் இன்சுவை பயக்கும் தெவிட்டாத அமுத வாக்குகள் சிந்திப்பார்க்குத் தெய்வவாக்குகள் எனலாம்.

*நன்றி : விவித வித்யா*

*சிவஸ்ரீ.ச.வரதராஜேஸ்வரக்குருக்கள்,*
*மயிலணி.*

---

## கார்த்திகைத் தீபம் [விளக்கீடு]

இது கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரமும் பூரணையும் கூடிய தினமாகும். சிவன் முப்புரங்களை எரித்தது இத் தினமே ஆகும். பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்குமாக திருவண்ணாமலையிலே சிவன்சோதிப்பிழம்பாக காட்சியளித்ததும் இந்நாளே. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு கார்த்திகேயன் என்ற பெயர் பெற்ற ஆறுமுகனுக்கு உகந்த திருக்கார்த்திகை தினத்திலே நம்பிக்கையுடனும் உணர்வு பூர்வமான பயபக்தியுடனும் விரதமிருந்து தீபமேற்றி பூசை வழிபாடு செய்பவருக்கு அக இருள் போய் இக - பரசுகம் கிட்டும். கார்த்திகை விரதம் அனுட்டித்து திரிசங்கு மன்னன் பேரரசன் ஆனான். பகீரதன் இழந்த நாட்டைப் பெற்றான். திருக்கார்த்திகை தினத்தன்று வீடுகளிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடுவார்கள்.

ஆலயங்களில் அமைக்கப்படும் சொக்கப் பானை தீபசோதி, சகல ஜீவராசி, மரம், செடி யாவற்றுக்கும் ஈசனின் அருள் கிடைக்க வழி வகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றும் உகந்தது கந்தனையே

"பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே"

என்பது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவாக்கு. "உற்றுமை சேர்வது மெய்யினையே" என்ற சொற்றொடரோடு தொடங்கும் தேவாரத்தில் வரும் அருள்வாக்கு.

பிரமபுரத்தை விரும்பி வீற்றிருந் தருளும் சிவபெருமான் கந்தசுவாமிக் கடவுளைப் பெற்று உவப்புற்றார் என்று முத்தமிழ் விரகருடைய சித்தம் தெவிட்டித் தித்திக்கும் தேவார வரிக்குப் பொருள் கொள்ளலாம்.

முருகக் கடவுள் தமிழ்த் தெய்வம், முன்னின்று காப்பவன். குறிஞ்சி நிலத்துக் குமரன்.

இடைச் சங்கத் தலைமைப் புலவராகத் திகழ்ந்தவர் குன்றம் எறிந்த குமரவேள் சைவத் திருமுறைகள் முருகப் பெருமானைப் பலபடப் பாராட்டும் போற்றிப் புகழும் எடுத்துக் காட்டாக ஒரு சிலவற்றைக் கட்டுரைப்பாம்.

"கோழிக் கொடியோன் தாதை போலும்"
"குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள்"
"வள்ளிமுலை தோய் குமரன்"
"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்"
"முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி"
"தேவி நற்றலைவன் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவி நற்பீலி மாமயிலூருஞ்
சுப்பிர மணியன் தானே"
"மாயச்சூர் அன்றறுத்த மைந்தன் தாதை"
"சமரசூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன்"
"நஞ் செந்தின் மேய வள்ளி மணாளற்குத்
தாதை கண்டாய்."

முருகப் பெருமானை நினைவூட்டும் சிறப்புகள் அனேகம் அனேகமாகச் சைவத் திருமுறை களில் பரக்கக் காணலாம்.

முத்தமிழ் விரகராம் ஞானப் பிள்ளையார் பிரமாபுரத்துச் சிவபெருமான் கந்தனைப் பெற்றுக் களிப்புற்றார் என்பார்.

கந்தனை எதற்காகப் பெற்றார்.? கண்ணுதல் கடவுள் களிப்புற்றமை எதன் பொருட்டு என்பதனையும் பிறிதோர் தேவாரத்தில் விளக்கிப் பாடுகின்றார்.

"இளங்குமரன் றன்னைப் பெற்றிமையவர்
தம் பகையெறி வித்திறைவனூரே.

"பகைகளையும் வகையின் அறு
முகஇறையை மிக அருள நிகரிலிமையோர்.

என்பன போற்ற திருவாக்குகளினால் பிரமாபுர மேவிய பெம்மான் தேவர்கள் இடர்களையும் பொருட்டு வெற்றிவேற் பெருமானைப் பெற்றார் என்பது பெற்றாம்.

இளங்குமரன் சூரனாதியோரை அழித்து இமையவர்கள் இன்னலை இழிச்சி இந்திரனை மீட்டும் அமரலோகத்திற்கு அதிபதியாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூட்டி வைத்தமையாமல் பிரமாபுரப் பெம்மான் உகந்தார் என்றும் கொள்ளலாம். சிவபெருமானிடத்தில் இந்திரனாதியோர் தமது பகைகளைய ஒரு பிள்ளையைப் பெற்றுத் தரும்படி கேட்டனர். அந்தப் பிள்ளையும் சிவபிரானை நிகர்க்க இருக்க வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள்.

"..........

வேதமுங் கடந்து நின்ற விமல ஓர் குமரன் தன்னை நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்" என்பது கந்த புராணம்.

போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன் ஈசனாம் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோயாதம், அதோ முகம் என்னும் ஆறுமுகங்கள் கொண்டருளினார்.

அந்நிகழ்ச்சியை குமரகுருபர சுவாமிகள்

" பூங்கயிலை வைப்பிற் புனைமலர்ப் பூங்
கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி – யாங்
கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர்
முறைக்கிரங்கி
யைந்து முகத்தோட தோமுகமுன் – தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு
மொரு முகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப

என்று எடுத்தியம்புவர்.

இக்கூற்றுக்களால் சிவபெருமானே சரவணபவன் ஆனார் என்னும் உண்மை போதரும்.

கச்சியப்ப சிவாச்சாரியாரும் கந்த புராணத்தில் அவ்வுண்மையை விளக்கிப் பாடுவார்.

"........ அறிஞராயோர்,
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங் கொண்டான்,

சிவபிரான் உருவமற்றதும் உருவமுடையதும் அனாதியும், பலபொருளாகியும் ஒரு பொருளாகியும் பிரமம் என்று பெயர் பெற்றும் சோதிப் பிழம்பே ஒரு திருமேனியும் கருணை மிக்க திருமுகங்கள் ஆறும் திருக்கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உலகம் உய்வடையும் பொருட்டு ஒரு திருமுருகனாக வந்து உதித்தனர்.

தந்தையான தாமே தனயனாகத் தோற்றியமையால் உவப்பு வருவது இயல்பே. அதனால் அன்றோ ஆருடைய பிள்ளையாரும் பெற்றும் உகந்தது கந்தனையே என்று கழறினார்.

ஏகனாக,வாக்கும் மனமும் எட்ட முடியாத அந்த முழு முதற் பரம் பொருளே முருகன் ஆனதனால் சிவபிரானுக்கும் முருகப் பெருமானுக்கும் வேறுபாடு இன்மையைச் சிவபிரானே சிவப் பிராட்டிக்கு உணர்த்தும் பான்மையால் உய்த்து உணரலாம்.

"முருகவேள் எம்முடைய சக்தியேயாம். அவனும் யானும் வேறுபாடில்லோம். எம்மைப்போலப் பிரிவின்றி எங்கும் எதிலும் வியாபித்து விளங்குபவன். எல்லாவற்றையும் அறிந்தவன். மெய்யடியவருக்குச் சிறப்பினையும் ஞானத்தினையும் வீட்டின்பத்தையும் உதவ வல்லான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தை வேரோடு வீழ்த்த வல்லவர் ஆறுமுகன். அதனால் அன்றோ சூரசங்காரம் நிகழ்ந்த பின்பு தேவர்கள் போற்றுகின்றார்கள்.

"முருகப் பெருமானே! தேவரீர் சூரபன்மனை அழிக்க வில்லை. தொழும் அடியவர்களுடைய வல்வினையின் வேரை வெட்டிவிட்டீர்கள். எமக்கு வேறோர் குறையுளதோ.

இலங்கையில் கதிர்காமம் முதலாகச் செல்வச்சந்நிதி வரையிலாக அளவிறந்த முருகப் பெருமானுக்குரிய ஆலயங்கள் உண்டு. அவை யாவும் திருவருள் நிறைப்பெற்றன. பெரும்பாலான ஊன்றிய வெற்றிவேலிலிருந்து திருவருள் வெளிப்பாட்டால் பெருந்திருக்குக் கோவில்களாக படிப்படியாக வளர்ச்சியுற்றன.

ஆரம்பகாலத்தில் மூலஸ்தானம் வேலாகத் திகழ்ந்த ஆலயங்கள் நாகரீக வளர்ச்சி காரண மாகவோ, அறிவு விளக்கத்திற்குப் பொருத்த மாகவோ, வேல் விளங்கும் மூலாலயத்தில் திருவுருவத் திருமேனியோடு திகழ்வது கண்கூடு. திருவுருவத் திருமேனிக் கோவில் திருவருள் வெளிப்பாட்டிற்கு வேற்கோவில் திருவருள் சளைத்ததல்ல என்னும் உண்மை உற்றுணர்வார்க்குத் தெற்றெனத் தெளிவாகும்.

வீரவாகு முதலான வீரர்களே வெற்றிவேலை முருகப்பெருமானாக வழிபட்டார்கள் என்றால் வேல் முருகன் என்பதற்குப் பிறிதும் ஓர்சான்று வேண்டுமோதான்"

"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால் எந்தைகணின்றும் வந்த வியற்கையால் சக்தியாம் பேர் தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான் கந்தனே யென்ன நினைக் கண்டுள கவலை நீத்தோம். என்னும் செய்யுள் கந்தபுராணச் சான்று.

முருகப்பெருமானுக்குரிய முக்கிய விரதங்கள் மூன்று. மூன்று விரதங்களுள் எந்த விரதமாக இருந்தாலும் சொல்லிய முறை தவறாமல் யாவராக இருப்பினும் அனுட்டித்தால் இட்ட சித்தி எய்தப் பெற்று இன்புறுவர்.

வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை நோன்பு, சட்டித் தவம் என்பனவே அம் மூன்று விரதங்களாகும்.

இவ்வாறு பக்குவ ஆன்மா பரகதி பெறுவதற்கும் நெறிப்படாத ஆன்மாவைப் பக்குவப்படுத்துவதற்குமாகச் சிவபிரான் முருகப்பெருமான் ஆனார்.

ஆகையால் அயன் அறியா வருமறை
மூலந் தெரிந்த வேகநாயகன் விரதமெவரேனும்
போற்றியிடின் ஒகையால் நினைந்தவெலா
மொல்லை தனிற் பெற்றிடுவர் மாகமே
லிமையவரும் வந்தவரை வணங்குவரே .

(கந்தபுராணம்.)

சிவ சண்முகவடிவேல்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பணிச் சபை உறுப்பினர்கள்



ஆலய தொண்டர்சபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தில் இயற்கை வழிபாடும் அன்பு நெறியும்

இந்து சமயமானது தொன்மைக் காலத்தில் இயற்கை சார்ந்த பொருட்களையே வழி பாட்டு அம்சங்களாகக் கொண்டிருந்தது. இது வேதாகமம், இதிகாச புராண வரலாறுகள் காட்டும் புராதன பண்பாட்டு நிலையாகும். ஐம்பூதங்களான பிருதுவி,அப்பு, தேயு, வாயு, ஆகாயம் உட்பட சாதாரண இயற்கைப் பொருட்களான மரம், செடி, கொடி, கல், மலை, நதி, பறவை, விலங்குகள் அனைத்தும் மக்களால் கடவுள்த் தன்மை படைத்தவையாகப் போற்றப்பட்டன. இருக்கு வேதத்திலே முப்பத்துமூன்று கடவுளரில் பெரும்பாலானவை இயற்கை சார்ந்த பொருட்களா கும். இடி, மின்னல், மழை, காற்று, வானம், சூரியன், சந்திரன், அக்கினி, இருள் மருந்துக் களாகவுள்ள மூலிகைகள் இவைகளே ரிக்வேத பாடல்களில் பெருமளவு இடம் பெற்றிருக் கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் தேவர்களாக, தேவதைகளாக உருவகித்து வழிபாடு செய்யப்பட்டன. அவை இயற்கைத் 'தெய்வங்கள்' எனவும், கடவுளர்கள் எனவும் கொண்டு புராதன காலங்களில் போற்றித் துதிசெய்து வந்தனர்.

இவ்வாறே தென்னாட்டிலும் ஐவகை நிலமும் நிலம் சார்ந்ததாக ஒவ்வோர் கடவுளையும் பெயர் சொல்லிப் போற்றியமையினைத் 'தொல்காப் பியம்' என்னும் காலத்தால் முற்பட்ட இலக்கண நூல் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்தமிழ் இலக்கியங்கள் அகத்திணை புறத்திணை எனப் பொருள் சார்ந்த வாழ்வினை அகப்பொருள் அகத்துறை சார்ந்ததாகவும் புறப்பொருள் (போர்த்) தொழில் சார்ந்ததாகவும் வகுத்துக் கொண்டனர். அங்கு பொருளானது முதற் பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என மூன்று வகையில் போற்றப்பட்டது. பிற்காலம் சைவசித்தாந்த தத்துவத்திலும் முப்பொருட் தத்துவம் பதி, பசு, பாசம் என உருவகிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

இயற்கை சக்திகளை ஏன் வழிபடு பொருளாக மக்கள் வரித்துக் கொண்டனர் என்ற கேள்வி எழும்போது ஆரம்பத்திலே 'பய உணர்வு' காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் 'பயம்' மட்டுமல்ல, இயற்கையின் எல்லையற்ற ஆற்றல் சக்தியைப் புரிந்து கொண்டதுமாகும். ஆரம்பத்தில் இடிக்கும் மின்னலுக்கும், வெள்ளப்பெருக்கு புயற்காற்று, பூகம்பங்களி னாலும் இயற்கை ஆற்றல்களுடன் மோதி தனது அறிவு வளர்ந்து சென்றமையினையும் அந்த மனித அறிவுக்கும் இயற்கை ஆற்றலுக் குமிடையே நடந்த போட்டிகளினாலும் இயற்கையினை வெல்வதை விட இயற்கைக்குப் பணிந்து போவதால் அதனைப் பயன்படுத்து வதனால் மனிதன் உலகிலே பல காரியங்களைச் சாதிக்க முடியுமென உணர்ந்து கொண்டான். அதன் விளைவே இயற்கையின் சக்திகளை அவன் வழிபடக் கற்றுக்கொண்ட நிலையாகும்.

ஆரம்ப காலங்களில் இடி, மின்னல், அக்கினி முதலியவற்றால் தமக்கு துன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரக்கூடாது எனமனிதன் பிரார்த்தனை செய்தான். எல்லா சக்திகளும் ஒரே விதமான ஆற்றல் வாய்ந்தவை என உணர்ந்து கொண்டதும் 33 கடவுளர்கட்குப் பின்னால் ஒரே ஆற்றல் சக்தி உறைகிறது எனவும் கண்டு கொண்டான். 'தேவா' என்ற நாமம் கொடுத்து அவற்றினைத் தனித் தனியாகவும் வழிபட்டான் 'நான் உனக்குப் பால்பழம் தருகிறேன்' நீ எனக்குப் புத்திரர்களையும், செல்வங்களையும் தருவாய் என்பதில் ஆரம்பித்த வழிபாடு யாகபூசை வேதாகம பூசை, அஷ்டோத்தர, சகஸ்ரநாம அர்ச்சனை வழிபாடுகளாகவும் ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளாகவும் இன்று பூரணத்துவமான வழிபாட்டு நெறியாகவும் பெருவளர்ச்சி கண்டுள்ளது. வேதகால வழிபாட்டு நெறி வெறும் பண்ட மாற்றுமுறை எனக் கருதப்படுவதல்ல. அது பொருளியல் உற்பத்தியின் ஒருகூறாக விளங்கிய அதேசமயம் அன்பினுடைய எல்லையற்ற வெளிப்பாடாகவும். மனிதர்கள் இயற்கையின் வளங்களைப் பெற்றுக்கொண்டு அனுபவித்தற்குப் பதிலாகச் செலுத்தும் 'நன்றிக்கடன்' என்னும் வழிபாட்டின் அடையாள மாகவுமே கொள்ளப்பட்டதாகும்.

உணவு உற்பத்தி முதல் மனிதவாழ்வின் தேவைகள் அனைத்தையும் உயிர் வாழ்தற்குத் தேவையான காற்று, உணவு, நெருப்பு, வாழ்விடம், குடிமனைகள், விவசாய பொருளாதார வளர்ச்சிக்கான நீர்நிலைகள், நதிகள், கடல் வாழ் உயிரினங்களின் வர்த்தக, வாணிப பொருளாதாரம் அனைத்துக்கும் இயற்கையே அளவற்ற செல்வத்தை, மூல வளத்தை வாரி வழங்கியது. அவற்றிற்கு மனிதனால் செய்யக்கூடிய ஒரேயொரு பிரதியுபகாரம் தம்மை வாழவைக்கும் இயற்கையை – அதன் தூய்மையைப் – புனிதத்தைப் பேணிப் – பாதுகாப்பதன்றி வேறென்ன செய்யக்கூடும். அதனால்தான் இயற்கையைப் பேணு அல்லது இயற்கையால் அழிவாய் என இன்று உலக நாடுகளின் சுகாதார நிறுவனங்கள் அறைகூவல் விடுகின்றன. நீ எதை (பிறருக்குச் செய்கிறாயோ) நினைக்கிறாயோ அதுவே ஆகிறாய். **'யத்பாவ தத் பவதி'** என்பது உபநிடத பகவத்கீதையின் ஒரு மணிமுடிவாசகமாகும். இதன் தாற்பரியத்தை அன்றே உணர்ந்த இந்துக்கள் புராதன காலம் முதலேஇயற்கையை வழிபாடு செய்து நன்மை அடையலாம் என்பதனை விஞ்ஞானமாகிய அறிவுபூர்வமாகச் சொன்னால் பலர் உதாசீனப் படுத்துவர். ஆதலால், அதன் ஆற்றல்களின் அதீத சக்திகளை வழிபாட்டு நெறிகொண்டு ஆராதனை செய்யுங்கள் என அறிவுறுத்தினர். நதி வழிபாடு. சூரிய வழிபாடு, சந்திர வழிபாடு, (அமாவாசை, பௌர்ணமி) தரைத்தெய்வ வழிபாடு. மரவழிபாடு, ஆலமரம், அரசமரம், வன்னி என மூலிகைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தாவர வழிபாடு, மருந்துகள், வீட்டுக்கும் நாட்டுக்கும் பலம் தரும் விலங்கு வழிபாடு அதற்கென விலங்குகள் காப்பகங்கள் (மிருதக்காட்சி சாலைகள்) என பல இன்று பல்கிப் பெருகியுள்ளன.

"பூமி நமது தாய் நாம் பூமித்தாயின் குழந்தைகள் வானம் நமது தந்தை அவை நம்மைப் புனிதமாக்கி நமக்குத் தென்பளிக்கின்றன"

என்ற வேத பாடல்களில் இயற்கை சக்திகளைப் பெற்றோராகப் பேணி சமத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டை உணர்த்தும் பொதுவுடமைப் பொருளாதாரம் பேணப்பட்டமை புலனாகின்றது.

இயற்கை அனைத்து மக்கட்கும் சமமாக பொதுவாகவே யாவற்றையும் அள்ளித் தருகின் றது. ஆனால் அறிவு படைத்த மனிதனே நிலத்துக்கு எல்லைகள் வகுத்து, மனித சமுதாயத்துக்கு சாதி என்னும் கோடுகள் போட்டு குடும்பங்களைத் தனிமைப்படுத்தி தனிச் சொத்துரிமைக்கு முன் னேறினான். இது மனிதனின் தவறே அன்றி இந்து மதத்தின் தவறல்லவாம். மாமரம் பழம் தருகின்றது. வாழை கனி தருகின்றது. தென்னை தேங்காய், ஆடு மாடு பால் என்றும் மரங்கள் வீடுகட்டி வாழ மரங்களையும் பூமி பலமான பொருள் வளம் மேம்பாட்டிற்கான உலோகங்களை தங்கம், வெள்ளி, இரும்பு என வாரி வழங்கியது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளிலும், இலச்சினைகளிலும் காணும் அரச மர வழிபாடும். இலிங்கக்கல் வழிபாடும் பாம்பு வழிபாடு, எருது வழிபாடு போன்றனவும் இயற்கையினதும் உயிரியங்களதும் அன்புணர் வைப் பிரதிபலிக்கும் அடையாளங் களாகவே விளங்கின. ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதனோ அனைத்தையுமே தமக்குரியதாக்க நினைத்து அனைத்தையும் விற்பனைசெய்து பணம் பெற்றுப் பொருளீட்டி செல்வந்தனா னான். ஆனால் அவற்றினைத் தமக்களித்த இயற்கையை உதாசீனம் செய்தான். நன்றிக் கடனை மறந்தான். மரத்தை, விலங்கை, நிலத்தை, செம்பை வழிபடுவது அஞ்ஞானம் எனத் தூற்றினான்.

இன்றோ உலகநாடுகளின் அறிவியற் சிந்தனையின் பரிமாணமாக ஒலிப்பது மரம் நடுகை இயக்கம். வளியைச் சுத்தமாக்குங்கள். காடுவளர்ப்புத் திட்டம், நீர் மாசடைதலைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உயிரினங்களைப் பேணிச் செல்லப் பிராணிகளாக்குங்கள், பச்சை வீட்டு விளைவு (Green House Effect) என்னும் உலகினைப் பசுமையாக்கி பசுமைப் புரட்சி செய்யுங்கள் என்பன போன்ற வாசகங்கள் உலகின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இயற்கை மனிதனிடம் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காது உயிர்கள் அனைத்தையும் சமமெனக் கருதித் தனது வளங்கள் அனைத்தையும் வாரிவழங்கி மனித குலத்திற்குக் காட்டிய பேரன்பினை பேரறத்தை – பலன்கருதாத கடமையை – பற்றற்றுப் பண்புடன் பெருவினையாற்றும் அதன் மெய்ஞானப் பண்பினை இகழ்வது மட்டுமல்ல அவற்றினை விற்பனை செய்து பொருளீட்டி மனிதகுலம் இன்று அவற்றின் இழப்பினாலேயே பெரும் உயிரிழப்புக்களை தீராத நோய்களை, பசிப்பிணியை, நாடற்றவர் கள் வீடற்றவர்கள், என்றும் மக்களை நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கியுள்ளது என்பதனை உணர ஆரம்பித்திருப்பது – இந்து தருமம் என்றும் பேரன்பு நெறி – சனாதன தருமம் மீண்டும் மறுமலர்ச்சியடையும் என்னும் நம்பிக்கையைத் தருவதாக இருக்கின்றது.

பிரதிபலன் எதிர்பாராது அனைத்து ஜீவராசிகளையும் தனது பரிவினாலும், அன்பினாலும் அரவணைத்துப் போஷிக்கும் இயற்கையின் ஆற்றல் சக்திகள் புராதன காலம் ரிஷிகளாலும் ஞானியராலும் போற்றப்பட்டதன் அவசியம் சனாதன தருமநெறி மூலம் உணர்த்தப்பட்டதை வேதசிவாகமம், இதிகாச புராணங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரபஞ்சத்தின் தந்தையான இறைவனை நாம் இரவும் பகலும் துதிப்பாடல்களால் போற்று வோமாக" எனவும்

"இந்திரனே ஒளி, :ஒளியே இந்திரன்
அக்கினியே ஒளி : ஒளியே அக்கினி
சூரியனே ஒளி : ஒளியே சூரியன்"

எனவும் வேத உபநிடதங்கள் இதன் அடிப்படை உண்மைகளை அன்றே எடுத்தியம்பின. மாமழை போற்றும், திங்களைப் போற்றுதும் எனச் சிலம்பும் யாவார்க்குமாம் பசுவிற்கோர் வாயுறை, காகம் கரைந்துண்ணும் காலம் அறிமின், எனத் திருமந்திரமும் இயற்கையின் அன்பு நெறி பற்றியும் பிராணி களின் அன்புணர்வு பற்றியும் பேசியுள்ளவை ஏராளமாகும். இவ்வாறு

"பயன் கருதாது பணி செய்யும்போது உனது செயல்கள் உன்னைப் பற்றமாட்டாது ஒருவன் ஆன்ம விடுதலை அடைதற்கு இதுவே சிறந்த வழி"


என்ற கீதாவாக்கியம் இயற்கைத் தாவரங்கட்கும், உயிரினங்கட்கும் பொருந்துவது போல மனிதனுக்கு ஏன் பொருந்துவதில்லை என எண்ணிப் பார்த்தால் – நமது அறிவீனமும் இயற்கையின் எல்லையற்ற பற்றற்ற பணியும் பேரானந்தமும் நிச்சயமாக மனுக்குலத்திற்குப் புரியாமற் போகாது.

மனித மேம்பாடு பற்றி இன்று உலகெங்கும் ஒரே பேச்சாக இருக்கின்றது. சமய வாழ்வே தனிமனித ஒழுக்கமான வாழ்வு என்பதனை இயற்கை சக்திகளினூடாக இந்து இலக்கியங்கள் அன்றே பிரபஞ்ச ஒழுக்கம், மனித வாழ்வின் ஒழுங்கு என்பன பற்றியும் கற்றுத் தந்தவற்றினை மீண்டும் வாழ்விலே பயிற்றிக்கொண்டு வருவது ஒவ்வொரு இந்துவின் தனிப்பட்ட கடமையாகும். இந்துமதம் தனிமனித ஒழுங்கு வாழ்க்கை ஒழுங்கு, உலக ஒழுங்கு என்ற வரிசையில் "ரிதம்" என்னும் கோட்பாட்டினை அன்றே உணர்த்திவிட்டது மட்டுமன்றி, சகல ஜீவராசிகளும் ஒரே "பரம்பொருளின் அம்சம்". ஆதலால் அனைவரையும் நேசித்து அன்பு செலுத்துங்கள் என உபநிடதங்கள் வாயிலாக எடுத்துக் கூறவும் தவறவில்லை. இன்று மனிதர்கள் மனிதர்களிடம் மனிதநேயப்பணிகளை மீட்டெடுக்க வேண்டும் என்று கேட்கப்படுகின்றது. ஆனால் சகல ஜீவராசிகளிலும் அன்புபூணுங்கள் – சேவைசெய்யுங்கள் என்ற அறைகூவலை – ஆன்மநேயப் பணிகளை உபநிடத இலக்கியங்களில்தான் துல்லியமாகக் காணமுடியும். 'சிவம் என்றால் அன்பு நெறி' என உணரமுடியாதவர்கள் சைவம் நெறி சார்ந்தவர்களாக முடியாது. ஏனெனில் "அன்பும் சிவமும் ஒன்றென" அறியும் அறிவுபெற்றவரே அறிவுடையவர் – அல்லார் அறிவிருந்தும் அன்புணர்வினை உணரமுடியாதவர்கள் என்ற திருமூலர் நெறியே "இயற்கையே இறைவன் – இறைவனே இயற்கை" என்னும் பேரன்பு நெறிக்குப் பிரதான சான்றாக விளங்கும் உண்மையாகும்.

திருமதி. கலைவாணி இராமநாதன்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக சிவாச்சாரியார்கள் கடஸ்தாபனம் செய்யும் காட்சி




தீபஸ்தாபனத்தின் போது சுமங்கலிப் பெண்கள் தீபபூசை செய்யும் காட்சி



மூலவரின் கும்பாபிஷேகக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகளின் போது
விக்னேஸ்வர பூசைக்காட்சி



பிரதான தூபி கும்பாபிஷேகக்காட்சி



அழகிய திருத்தேரில் ஆறுமுகனின் அருட்பவனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி – சில சிந்தனைகள்

விதி என்பதை மிகவும் சக்தி வாய்ந்ததாகச் சைவ சமயத்த வர்கள் கருதுகின்றனர். விதி வலிது; விதியை வெல்ல முடியாது; விதி வழியே எல்லாம் நடக்கும்; எல்லாம் அவனவன் தலை யெழுத்து; அன்று அவன் எழுதிய எழுத்தை அழிக்கவே முடியாது. மக்கள் விதி சம்பந்தமாகக் கொண்டுள்ள கருத்துக்களை நம்பிக்கையை இவை பிரதிபலிக் கின்றன. நல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த கருத்துக் களைக் கூறிய வள்ளுவப் பெருந் தகையும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

எனக் கூறியுள்ளார்.

விதி என்கின்ற ஊழினை விட வலிமை மிக்கது ஒன்றுமில்லை. விதியை வெல்லும் நோக்குடன் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டாலும், அவை அனைத்தையும் முறியடித்து விட்டு, விதி தன் வலிமையை நிலைநாட்டிக் கொள்ளும் என்பதே இக்குறளின் கருத்து.

இத்துணை சக்தி வாய்ந்த விதி என்பது என்ன?

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வரும் சமயம் சைவ சமயம். இச் சமயத்தின் அடிப்படை; ஆதார நூல்களாக விளங்குபவை வேதங்கள். இவை மனிதர்களால் ஆக்கப்பட்டவையன்று; சிவபெருமானால், சிவானுபூதி பெற்ற ஞானிகள் வாயிலாக இவை உலகுக்கு அருளப்பட்டவை. சிவபெருமான் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர். எல்லாம் வல்லவர். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களை அவர் செய்கின்றார்.

பிரம்மாவாகி அவர் படைப்புத் தொழிலை மேற்கொள்கின்றார். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், கல்வி, தொழில், திருமணம், சந்ததி விருத்தி, வெற்றி, தோல்வி, நோய், விபத்து, மரணம் போன்றவை எப்போது நடைபெறும், எவ்வாறு நடைபெறும் என்பன, அவரவர்கள் படைக்கப்படும்போதே பிரமாவால் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. இதற்கு அமைவாகவே அவரவர் வாழ்க்கை அமையும். இதையே விதி என்றும் ஊழ் என்றும் சொல்வர். ஒருவருடைய சாதகத்திலுள்ள கிரக நிலைப்படி சில சம்பவங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாமாயினும் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியாது.

எல்லாமே விதிப்படிதான் நடைபெறும் என்றால் முன்கூட்டியே இறைவனால் தீர்மானிக் கப்பட்டபடிதான் நடைபெறும் என்றால், நாங்கள் ஏன் இறைவனை வணங்க வேண்டும்? நேரத்தையும் பொருளையும் செலவிட்டு சமய அனுஷ்டானங்களை நாம் ஏன் கைக்கொள்ள வேண்டும்? நாங்கள் எவ்வித முயற்சிலும் ஈடுபடாமல், சும்மா இருக்கலாமல்லவா?

இன்று, நேற்று மட்டுமல்ல, பல்லாண்டு காலமாகப் பலர் கேட்டு வரும் கேள்விகள் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி என்பது ஒன்றில்லை. அது வெறும் கற்பனை; மூட நம்பிக்கை. விதியை நம்பினால், எல்லாமே விதியின்படிதான் நடைபெறும் என்றிருந்தால் நாம் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது என்று சொல்பவர்களும் பலர்.

இரு வேறுபட்ட இக்கருத்துக் களின் பின்னணியில் விதி சம்பந்தமான சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

தமிழ் மக்களுக்கே சிறப்பாக உரிய சமய தத்துவம், சைவ சித்தாந்தம். இதற்கும் மூலமாக இருப்பது வேதங்கள் தாம். இத்தத்துவத்தின்படி பதி,பசு,பாசம் என்கின்ற மூன்றும் அநாதி யானவை. பதி என்பது இறைவனாகிய சிவபெரு மானைக் குறிப்பது; பசு என்பது ஆன்மா; பாசம் என்றால் ஆணவம் முதலிய மலங்களாகும்.

ஆணவம் என்பது, சிலர் கருதுவதைப் போல், "நான்" என்ற ஆங்காரம் மட்டுமன்று. நல்லறிவை மயக்குகின்ற மோகம், உலக இன்பங்களை மேலாக மதிக்கச் செய்கின்ற மதம், உலக இன்பங்களில் ஆசையை உண் டாக்கும் ராகம், அனுபவித்த இன்பம், பின்னர் கிடைக்காத போது ஏற்படும் வருத்தமாகிய விஷாதம், பற்றுள்ளவர்களிடமிருந்து பிரிய வேண்டிய காலத்தில் வருத்தி, உடம்பை மெலியச் செய்யும் சோஷம், தன்னிலுள்ள குற்றங்களைக் கடவுள் மேல் ஏற்றி தன் பெருமையை வியக்கச் செய்யும் வைசித்திரியம், உலக இன்பங்களை அனுபவிக்கும்போது தனக்கு ஒரு குறையு மேயில்லை என நினைக்கச் செய்யும் அரிசம் ஆகியவையும் ஆணவத்தின் இயல்புகள்.

பசு ஆகிய ஆன்மா, எப்போதும் இத்தகைய ஆணவத்தாற் பீடிக்கப்பட்டிருக் கின்றது; அப்படிப் பீடிக்கப்பட்டிருப்பதை உணரா மலும் இருக்கின்றது. எல்லையில்லாக் கருணை யுடையவராகிய இறைவன், ஆணவத்தி லிருந்து ஆன்மாவை மீட்டெடுத்து, "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற முத்தி நிலையில் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் செயல்களைச் செய்கின் றார். ஆன்மாவுக்கு உடம்பையும், கண், மூக்கு, வாய், செவி போன்ற புறக் கருவி களையும், மனம் முதலிய உட் கருவிகளையும் கொடுத்து, ஆன்மா அனுபவிக்கக் கூடிய பொருள்கள் நிறைந்த உலகத்தையும் படைக்கின்றார். இதையே, இறைவன் தனு, கரண, புவன, போகங்களைப் படைக்கின்றார் எனச் சொல்வர். ஆன்மா, அனுபவிக்கும் பொருள்களுள் நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு. எவை நல்லவை, எவை தீயவை என்ற அறிவும் ஆன்மாவுக்கு அளிக்கப்படுகின்றது. நல்லவற்றைச் செய்தால் புண்ணியமும் தீயவற்றைச் செய்தால், பாவமும் ஏற்படும் என் பதையும் ஆன்மா அறியும். எனினும் ஆண வத்தின் வலிமையால், ஆன்மாவுக்குத் தீய செயல்களிலேயே அதிக நாட்டம் ஏற்படுகின்றது. அதனால் இறைவனைச் சேரும் பக்குவ நிலையை ஆன்மா அடைவதற்கு எண்ணற்ற பிறவிகள் தேவைப்படுகின்றன. ஒரு பிறவியிற் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்பவே, அடுத்த பிறவி அமைகின்றது.

ஆன்மாவுக்குப் பிறவியைக் கொடுக்கும் போதே, அந்தப் பிறவியில் என்னென்ன, எப்போது நடக்கும் என்பதும் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது. இதுவே விதி என ஆரம்பத்தில் குறிக்கப்பட்டதை மீண்டும் சிந்தித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம்.

படைப்புக் கடவுள், தான் நினைத்த படியோ தன்விருப்பு வெறுப்பின் அடிப்படை யிலோ எதையும் தீர்மானிப்பதில்லை; ஒரு பிறவியில் ஆன்மா செய்த வினைகளின் அடிப்படையிலேயே, படைப்புக் கடவுள், எல்லா வற்றையும் தீர்மானிக்கின்றார்.

இறந்த பிறப்பிற் தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக –பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப் பிறந்து
எய்தும் வினையின் பயன்.

என்ற பழம் பாடல் ஒன்று, இந்த உண்மையை விளக்குவதுடன், எமக்கு நம்பிக்கை ஒளியைக் காட்டியும் நிற்கின்றது. இந்தப் பிறவியில் எமக்கு எவ்வாறான வாழ்க்கை அமைந்திருக்கின்றது என்பதை வைத்துக் கொண்டு, முந்திய பிறவியில் நாம் என்ன செய்தோம் என்பதை அறியலாம் அதேபோல், இந்தப் பிறவியில் நாம் என்ன செய்கின்றோம் என்பதை வைத்துக் கொண்டு, அடுத்த பிறவி எவ்வாறு அமையும் எப்பதையும் தெரிந்து கொள்ளலாம். இந்தப் பிறவியில் நாம் நல்ல செயல்களைச் செய்தால் இனி வரும் பிறவி நன்றாக அமையும் என்பது நிச்சயம். முந்திய பிறவியில் நாம் செய்த செயல்களை மாற்றியமைக்கும் சக்தி எமக் கில்லை. ஆகவே, அவற்றின் விளைவான இப் பிறவி, எமது கட்டுப்பாட்டில் இல்லை. இது உண்மையேயாயினும், இதனால் நாம் விரக்தியோ சோர்வோ அடையத் தேவை யில்லை. பூரணமான நம்பிக்கையுடன், உறுதியு டன், "நீயே தஞ்சம்" என இறைவனைச் சரணாகதி அடைந்தால், மனம் மொழி மெய்யால் அவனை எஞ்ஞான்றும் வணங்கினால் ஏற்கனவே தான் விதித்த விதியை இறைவனே மாற்றியமைப்பான் என்பதற்கு மார்க்கண்டே யரின் வரலாறு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

"சேல் பட் டழிந்தது செந்தூர் வயற் பொழில் தேங்கடம்பின்
மால் பட்டழிந்தது பூங்கொடியார் மன மாமயிலோன்
வேல் பட்டழிந்தன வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால் பட்டழிந்த திங் கென்றலை மேலயன் கையெழுத்தே

எனக் கந்தரலங்காரத்திற் கூறுகின்றார்.

அருணகிரிநாத சுவாமிகள். என் தலையிலே அயன் ஆகிய பிரம்மா எழுதிய எழுத்து (விதி) முருகனின் திருப்பாதங்கள் பட்டு அழிந்தது என்பது இறுதி அடியின் பொருள். கந்தக் கடவுளைச் சிந்தையில் வைத்து, அவனுடைய செம்மலர்ப் பாதங்களிற் சிரம் வைத்து வணங்கியதால், தன் பொல்லா விதி அழிக்கப்பட்டதென்கின்றார் அருணகிரியார்.

சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்
கபாய மொரு நாளு மில்லை – உபாயம்
இது வே மதி யாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

என்று ஔவையார் " நல்வழி" யிற் கூறியதும் சிந்தித்தற்குரியது. "சிவாய நம" எனச் சொல்லிக் கொண்டு, சிவனடிகளைச் சிந்தித்திருப்பதே விதியை வெல்லும். உபாயம் என்கின்றார் ஔவையார். அப்படிச் செய்யாவிட்டால் விதியின் வழியே மதி செல்லும் என்றும் சொல்கின்றார்.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, சிறிது நேரம் இறைவனை வணங்கினாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், விதியை வென்றுவிடலாம் எனத் தோன்றக் கூடும். ஆனால்...?

கோவிலுக்குச் செல்வதோ, மந்திரங்களையும் தேவார திருவாசகங்களையும் வெறுமனே முணுமுணுப்பதோ உண்மையான வழிபாடாகா.

மார்க்கண்டேயரிடமிருந்த பக்தி வைராக்கியம், இறைவனுடைய அருளாற்றலில் அவர் வைத்திருந்த அதீத நம்பிக்கை, பூரண சரணா கதி, இடைவிடாது இறைவனைப் பிரார்த்தித்தபடியே இருந்த பாங்கு முதலியவை எங்களிடம் உள்ளனவா?

“அம்மா, அப்பா” என்று எல்லாக் குழந்தைகளுமே கதறுகின்றன. ஞானசம்பந்தக் குழந்தை கதறி அழுதபோது மட்டும் ஏன் உமாதேவியார் சகிதம் சிவபெருமான் தோன்றினார்.? மூன்றே வயதான அந்தக் குழந்தையின் மனநிலையைக் கற்பனை பண்ணிப் பார்க்க வேண்டும். குழந்தையின் கண்களுக்கு, முன்னாலிருந்த குளம், மகா சமுத்திரமாகத் தெரிந்திருக்கும்; அப்பாவை மூழ்கடித்ததைப் போல், தன்னையும் அந்தச் சமுத்திரம் மூழ்கடிக்கும் எனப் பயந்திருக்கும். யாருமே தனக்குத் துணையாக இல்லையே என ஏங்கியிருக்கும். இந்த நிலையில், ஊனையும் உள்ளத்தையும் உயிரை யும் உருக்கும் வகையில் அந்தக் குழந்தை “அப்பா, அப்பா” என்று அலறியபடியாலேதான் பரமபிதாவாகிய சிவபெருமானே தன் தேவியுடன் அந்தக் குழந்தை முன் தோன்றியருளினார்.!
இத்தகைய மனநிலை எங்களுக்கு வருமா?

உள்ளத்தை எங்கோ வைத்துவிட்டு, வெறும் உடம்பினாலே செய்யும் வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொள்வாரா?

“நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா” என அழைத்து இறைவனை வழிபட வேண்டிய முறைகளை நெஞ்சுக்குத் தான் திருநாவுக்கரசு நாயனார் கூறுகின்றார். “உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்பது சுவாமி விபுலானந்தரின் கருத்து.

எமது உள்ளத்திலுள்ள பேராசை, காமம், கோபம், பொறாமை, வஞ்சகம் முதலிய அழுக்குகளை நீக்கி அதைப் புனிதமாக்கி, இறைவனை அதிற் பிரதிஷ்டை செய்ய வேண்டும். “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி” திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதவேண்டும். எம்மைப் பூரணமாக இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். நின்றும் இருந்தும் கிடந்தும், நடந்தும் என்றும் அவன் தாளிணையைப் பற்ற வேண்டும். எமது வாழ்க்கையில் என்ன நடக்கும் என்பது தெரியாத நிலையில் நல்லவையே நடக்க வேண்டும் என்று நெஞ்சாரப் பிரார்த்திக்க வேண்டும். நல்ல செயல்கள் எவை, தீயவை எவை என்பதைச் சான்றோர்களிடமிருந்து, வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களிலிருந்து தேர்ந்து தெளிந்து நல்லவற்றை மட்டும் செய்வோம்; அல்லவற்றைத் தவிர்ப்போம்.

நமது வாழ்க்கையில் நடைபெறும் நன்மைகளும் தீமைகளும் நமது செயல்களின் விளைவே. பிறர் எவ்விதத்திலும் காரணர் அல்லர் “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்பது புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் கருத்தாழம் மிக்க கூற்று.

“கடவுள் எமக்கு இச்சரீரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்தது, தன்னை வணங்கி நாம் முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்ற நாவலர் பெருமானின் நற்சிந்த னையை நெஞ்சில் நிலை நிறுத்திச் செயற்படுவோம்.

விதி வலிதுதான்; அதை வெல்ல முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது தான்; அந்த வழிகளைப் பின் பற்றுவது கடினம்தான். என்றாலும் நாம் முயற்சி செய்யலாமல்லவா? எமது விதி எவ்வாறு அமைந்துள்ளது என்பது எமக்குத் தெரியாத நிலையில், உள்ளன்புடன் கூடிய வழிபாட்டால், பிரார்த்தனையால், அதன் தீய தாக்கங்களை ஓரளவாவது வலுவிழக்கச் செய்ய லாமல்லவா?

இரவும் பகலும் இதயத்துனையே
பரவும் அறிவும் பணியும் அருள்வாய்
புரியும் செயல் யாவையும் பூசனையாய்
புரியும்படி செய் பரிபூரணனே.

குகமந்திரம்

அவன் அருளாலே அவன் தாள் வணங்குவோம்.

சி.சிவசரவணபவன் M.A,
இளைப்பாறிய அதிபர்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி,

## பங்குனித் திங்கள்

இது அம்மனின் வழிபாட்டுக்குரிய தினமாகும். குறிப்பாக கண்ணகி அம்மனை வழிபட வேண்டிய காலம். இந்த நாளில் பொங்கல் வைத்து குளிர்த்தியிட்டு வேப்பிலை மாலை சாத்தி வழிபட்டு விரதம் அனுட்டித்தால் அம்மை போன்ற நோய்கள் நீங்கி சுப வாழ்வு கிட்டும்.

இவை தவிர ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறை சதுர்த்தி விநாயக வழிபாட்டுக்கும் ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற கார்த்திகை நட்சத்திரமும் முருகப்பெருமானின் வழிபாட்டுக்கும் சிறந்த காலமாகும். இதைத்தவிர ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறை, தேய்பிறை இரண்டிலும் வருகின்ற திரியோதசி திதி அன்று மாலை நான்கு மணி முதல் 6 மணி வரையுள்ள காலம் பிரதோஷ காலமாகும். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது கொடிய ஆலகால விஷம் தோன்றியது. தேவர்கள் பயந்து சிவ பெருமானிடம் ஓடிவந்து அமுதத்தைக் கொடுத்து தேவர்களைக் காத்தருளிய காலம் இதுவாகும். பெருமான் விஷத்தை அருந்தியதால் நீல கண்டன் எனப் பெயர் பெற்றார். பிரதோஷ காலத்தில் விரதம் அனுஷ்டிப்போர் சிவாலயத்தில் தரிசனம் செய்து வழிபட வேண்டும். அப்படி வழிபடும் போது நந்தி தேவருடைய இரண்டு கொம்புகளுக்கிடையில் சிவதரிசனம் செய்ய வேண்டும்.

இதைத்தவிர மாதத்தில் வருகின்ற பூரணை, அமாவசை தினங்களும் விரத தினங்களாகும். பூரணை தாயை இழந்தவர்களும் அமாவாசை தந்தையை இழந்தவர்களும் அனுட்டிக்க வேண்டும். இதனால் பிதிர் தோஷங்கள் நீங்கும்.

பூரணை தினத்தன்று அம்பாள் ஆலயங்களில் நடைபெறும் திருவிளக்கு பூசையில் கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும் கலந்து வழிபட்டு விளக்குப் பூசை செய்வதால் கன்னிப் பெண்களுக்கு மாங்கல நிகழ்வுகளும் சுமங்கலிப் பெண்களுக்கு நீண்ட மாங்கல்ய பலனையும் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் சைவமும் அதன் மேன்மையும்

அகில புவனங்களையும் படைத்தும், காத்தும் வரும் மேலாம் சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டு மலர்ந்த சமயம் சைவசமயம் "சைவம்" என்னும் சொல்லின் பொருளே சிவசம்பந்தமுடையது என்ப தாகும். சிவம் எனும் செம்பொருள், அம்மெய்ப்பொருள், அதுவே பண்டும் இன்றும் என்றென்றும் நிலைத்து நிற்கும் அழியாப் பெரும் பொருளாகும். நாம் இவ்வுலகின் கண் எம்புலன்களால் அறிகின்ற உணர்கின்ற அனைத்துப் பொருட்களும் மாறும் தன்மையும் அழியும் தன்மையும் உடையன. காலம் எனும் சுழலில் அனைத்தும் மாறிக் கொண்டிருக்கின்றன. இக்கணத்தில் இருப்பது மறுகணத்தில் இறந்த காலமாகி மாறுகிறது அல்லது இல்லா தொழிகிறது. ஆனால் இக்கணத்திலும் எப்பொழுதும் பழமைக்குப் பழமையாகவும் புதுமையிற் புதுமையாகவும் என்றென்றும் நித்தியப் பொருளாகவிருப்பது "சிவம்" எனும் செம்பொருளே. அத்தகைய மேலாம் பரம் பொருளின் வடிவாக, அளப்பரும் கருணையின் வடிவாக இவ்வுலகம் உள்ளது. இயற்கையின் இனிய கொடைகளாகிய சூரியனின் சுடரொளி, வானின்று வரையாது வரும் மழை, தண்மை சேர்க்கும் தென்றலும், சுற்றிச் சுழலும் சூறாவளிப் பெருங்காற்றும், விண்ணைமுட்டும் மலைகளும், சூழநின்றார்ப்பரிக்கும் விரிந்து பட்ட சமுத்திரங்களும் இவை அனைத்தின் பயன்பாடுகளையும் கண்டு களிக்கிறோம். அனுபவித்து ஆனந்திக்கிறோம். அப்பரம் பொருளின் கருணைக்கு எல்லையே இல்லையெனும் வகையில் அற்புதமான விளையாடல்களைக் காண்கிறோம் அத்தகைய எல்லையற்ற கருணை வெள்ளமாகிய சிவபரம் பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தவர்களாக வாழ நாம் என்ன புண்ணியம் செய்தோம் என்று நினைக்கும் தோறும் உள்ளம் பரவசமடைந்து வியப்படைகிறது.

சைவத்தின் மேன்மையும் தொன்மையும் வரையறைகட்கப்பாற்பட்டது. தொன்மையை நோக்கும் போது சிந்துவெளி, ஹரப்பா போன்ற இடங்களில் நடாத்தப்பட்ட தொல்லாராய்வுகள் அதற்குச் சான்று பகருகின்றன. காலத்தின் தோற்றமே சிவபரம் பொருளின் ஆடல் என்றால் மிகையாகாது தொன்மையின் மேன்மை போன்று சைவம் தன்னகத்தே கொண்டொளிரும் கோட்பாடுகள், கொள்கைகள், அதன் உயர் பண்புகள் என்பன சைவத்தின் மேன்மைகள் எடுத்துக்கூறுகின்றன.

சைவசமயத்தை இன்று வரை தாங்கி நிற்கும் மூலவேராக விளங்குவது வேதங்களாகும். அதன் தண்டுகளாகவும் கிளைகளாகவும் இருப்பன ஆகமங்களும் உபநிடதங்களுமாகும். சைவத்தின் ஆணிவேராக விளங்கும் வேதங்கள் இறைவனாலேயே உருவாக்கப்பட்டவை. வேதங்களைக் கொண்டே சைவ சமயமெனும் சனாதனதர்மம் நன்கு வேரூன்றி இன்று உலகமெல்லாம் நிலைபெற்று விளங்கும் சமயமாக நிலைத்திருக்கிறது. மாபெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவசிரேஷ்டர்களாகிய ரிஷிகளும், முனிவர்களும் குரு சீஷ்ய முறையிலேயே வேதங்களையும் ஆகமங்களையும் உபநிஷதங்களையும் இன்று வரை பேணிப்பாதுகாத்து வைத்துள்ளனர் எனும் போது சைவசமயத்தின் கட்டுக்கோப்பை வியக்காமல் இருக்க முடியாது.

அடுத்து சைவசமயம் கூறும் வாழ்க்கைப் பண்புகளை நோக்கும் போது அதன் மகத்துவம் தெற்றெனத் தெரிகிறது. சைவ சமயம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகூறுகிறது. தனியே துறவறத்தையோ, வானப்பிரஸ்த்த நிலையையோ எடுத்துக் கூறவில்லை. மண்ணிற் பிறந்தால் வாழ்வு என்பது உண்டு என்ற கொள்கையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் தலை என்பதனை தெளிவாக எடுத்துரைக்கிறது. அதற்கமைய பற்பல நெறிமுறைகளை வகுத்து வைத்துள்ளது.

வாழ்வின் முதற்படி பிறப்பு என்றால் இறுதிப்படி மரணம் என்பதே நியதி. இதன் இடைப்பட்ட காலம் என்பது மிகக் குறுகியது. இதில் உண்டு உடுத்துக்களித்து, உறங்கி நாட்களைப் போக்காது மண்ணிற் பிறந்ததின் பெரும்பயனை அடைதல் வேண்டும் என்பது சைவசமயக் கோட்பாடாகும். "எமக்கு இவ்வுடல் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே" என்பது நாவலர் பெருமானின் திருவாக்கு நாயன்மார்களும் தம் வாழ்க்கையையே முன்னுதாரணமாக்கி எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளனர். ஆலயதரிசனமும், அன்னதானப் பணிகளும் கருணை மனத்தினராய் மற்றவர்க்குச் சேவைசெய்தலும் அவர்கள் வாழ்வில் இடம் பெற்ற நிகழ்ச்சிகளாக அவற்றை நாம் எமக்கு எடுத்து அதன் வண்ணம் வாழ முயலவேண்டும். அறுபத்து மூன்று நாயன்மார்களும் அவர்களுள் சமயகுரவர் எனப் போற்றப்படும் நால்வரின் தேவார திருவாசகப் பாடல்களும் எமக்கு வாழும்வழியைத் தெளிவாக எடுத்துக்கூறி எம்மை நல்லாற்றுப் படுத்துகின்றன. "தலையே நீ வணங்காய்" எனும் நாவுக்கரசரின் திருவங்க மாலைப் பாடல்களே எமக்குப் போதிய தெளிவை தரவல்லது. மணிவாசகரின் திருவாசகம் எம்மை முத்தி நிலைக்கு இட்டுச் செல்லும் ஏணிப்படிகளாக இருக்கிறது. அருணகிரிநாதரின் திருப்புகழ் எம்மை என்றென்றும் பக்தியின் எல்லைக்கு எடுத்துச் செல்ல வல்லதாகிறது. இத்தகைய அற்புதமான கருவூலங்கள் எல்லாம் எம்மை இடர்களைந்து இன்பமெய்த வைக்கிறது.

"பிறவி எடுத்ததின் பயன் யாது?" என்று நாம் எம்முள் சிந்திப்பதில்லை. வந்தோம். வாழ்கிறோம் என்று இருக்கிறோம் "அரிதினும் அரிது மானுடராதல் அரிது" என்றபடி கிடைத்த மானுட வாழ்வை மேன்மைப்படுத்துகிறோம் இல்லை. இத்தகைய அரிய மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் பலவற்றை எமது சமயம் எமக்குச் சுட்டிக் காட்டி நிற்கிறது பிரமச்சரியம், இல்லறம், சந்நியாசம், வானப்பிரஸ்த்தம் எனும் நான்கு நிலைகளில் மானுட வாழ்வை வரையறை செய்து வாழும் வழியைக் கூறிநிற்கிறது. கல்வியின் மேன்மை சொல்ல முடியாதது. அதுவும் இளமையிற் கல்வியென்பது அதனிலும் மேலானது. கல்விகள் எவ்வளவு பயனளிக்கிறது? பண்டைநாளில் குருசிஷ்ய கல்வி முறையில் மாணவன் ஒருவன் நன்நெறிகளையும், நற்பண்புகளையும் பெற்று அத்துடன் மற்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமுறைமைகளையும் அறிந்து கொள்கிறான் இதனால் பண்பாடு பேணப்படுகிறது. ஒழுக்கம் வரையறை செய்யப்படுகிறது. இதுவே பிரமச் சரியநிலை அடுத்து இல்லறம். பொருள் தேடுதல், வளம் பெருக்கு தல், விருந்தோம்பல், முதலான இல்லறக்கடமைகளைப் பூர்த்தி செய்யும் ஒருவன் சந்நியாச மனப்பக்குவம் பெறுகிறான். இதனால் அவள் பிறவிப்பயன் பெறும் பொருட்டு வானப்பிரஸ்த நிலைக்கேகிறான். இவ்வாழ்க்கை முறைமையினால் மனிதவாழ்வு பூரணமடைகிறது.

இத்தகைய வாழ்வின் போது சைவசமயம் கூறும் சிறப்புப்பண்புகளை ஆராய்வோ மானால் அன்புடமை, முதன்மை யானதாக அமைந்திருக்கக் காணக் கூடியதாக உள்ளது. ஒன்றாய் உடனாய், வேறாய் எங்கும் நிறைந்த அப்பரம் பொருள் சகல ஜீவர்களிடமும் நிறைந்து விளங்குகிறார். உலகின் அனைத்துப் படைப்புக்களும் இறைவனின் வடிவே. அனைத்தும் இறை வனின் அம்சமெனின் அனைத்து உயிரினங் களையும் இறையாகப் பாவித்து அன்பு செலுத்துதல் வேண்டும் அல்லவா? அன்பு என்பது விரிந்து பட்டிருப்பது. இறைவனின் கருணைக்கு எல்லையே இல்லையெனும் வகையில் எளியராய்ப் பன்றிக் குட்டிகளுக்கும் பாலூட்டினார் அன்புக்கு ஆட்பட்ட இறைபரம் பொருள் கண்ணப்பரையும் ஏற்றுக் கொண்டார் கூலியாளராய் வந்து மன்னன் பிரம்படியையும் பெற்றுக்கொண்டார் அன்புக்கு அடிமையாகிய வள்ளல் முருகன் குறமகள் வள்ளியை மணம்புரிந்தார். இறைவன் அன்பின் இருப்பிடம் அன்புமயமானவன் என்பதனை எடுத்துக்காட்ட எத்தனை திருவிளையாடல்கள் உள்ளன. பெரிய புராணத்தையும் கந்தபுராணத்தையும் படிக்கும் போதும் கேட்கும் போதும் நாமும் அன்புமயமாய் மாறிவிடுகிறோம் அன்பே இறையின் வடிவம் என்பதனை உற்று நோக்கும் போது "அன்பே சிவம்" என்று திருமூலர் உரைத்தது உற்றுநோக்கத்தக்கது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாகும் அறிகிலார்
அன்பே சிவமாவதாகும் அறிந்தவின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

உண்மை அறிவற்றோர் அன்பு வேறு சிவன் வேறு என்றிருந்தாலும் மெய்யறிவு பெற்றவர் அன்புடமையே சிவ தொண்டு என்று நினைந்து அன்புடையராய் வாழ்வர் எனும் போது அன்புக்கு வேறு வரைவிலக்கணம் வேண்டுமா? சிவவாழ்வுக்கு அதாவது சைவ வாழ்விற்கு அன்புடமை எத்னை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை எம்சமயம் வலியுறுத்தி நிற்கிறது. இதனால் அன்புடமையை சைவசமயம் முதன்மைப்படுத்தும் சமயமாக உள்ளது என்றால், அது எம்வாழ்விற்கு எத்தனை அரியபடிப்பினை யைத் தந்திருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமா? அன்பு என்பது கொடுத்தால் வளர்வது பொருள் என்பது கொடுத்தால் குறைவது. அன்புடமையினாற் சுயநலம் குறைகிறது. பொதுநலம் பெருகுகிறது. இதனாற்றான் "அன்புடையார் என்பும் உடையர் பிறர்க்கு" என்று வள்ளுவர் விதந்து கூறிஇருக்கிறார்.

அன்புடமை வரை வளர அருளுடமை வளர்கிறது. அருளுடையார்க்கு அவ்வுலகம் எளிதாகிறது. அன்பின் அடிப்படையில் விளையும் அருளானது, சமூகம், நாடு எனப் பரந்து விரிந்து செல்லும்போது பேதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகின்றன, ஒற்றுமை மலர்கிறது இதனால் நாடு செழிக்கிறது. சிறக்கிறது. இத்தகைய மேலான அன்புடைமையை மையக் கருத்தாக வைத்து மிளிர்கின்ற எம்சமயம் எத்தனை மேன்மையானது.

அடுத்து சைவம் காட்டும் அரிய பண்புயாது? என நோக்குவோமாயின் ஒழுக்கப் பண்பை அது மிகமிக வலியுறுத்தி நிற்கிறது. ஒழுக்கம் எனும் போது அதனுள் உண்மை, நேர்மை, சத்தியம் எனும் தன்மைகளும் அதனுள் அடங்குகிறது. ஒழுக்கம் மிக்கோரைச் சான்றோர் எனப் போற்றி ஏத்தும் தன்மையும் காணப்படுகிறது. இதனை எல்லாம் மிகச்சிறப்பாக அதே வேளை மிகச் சுருக்கமாக "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று கூறப்பட்டுள்ளது. உயிரின் மகத்துவம் மேலானது. உயிரற்ற ஒருவருக்கு இவ்வுலகில் வாழ்வே அற்றுப் போகிறது. வாழ்வு என்பதே உயிர் இருந்தாற்றான் அமைகிறது. வாழ்வே முடிந்து விடும் நிலை உயிர் போனபின் ஏற்படுகிறது. உயிரின் மகத்துவம் அவ்வாறாயின் உயிர் நிலைத்திருப்பதும் இறைவனின் பெருங் கருணையே. மேலான உயிர் எமக்குக் கிடைத் திருப்பதற்கும் நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும். அதுவுமன்றி அதனை ஒன்பது துவாரங்கள் உள்ள உடலில் தங்க வைத்திருப்பது என்பது இன்னும் அந்த அற்புதமல்லவா? அத்தகைய அற்புதமான இறை வனின் பெருங்கருணையால் கிடைக்கப்பெற்ற உயிரிலும் ஒழுக்கம் உயர்ந்தது எனும் போது ஒழுக்கத்தின் சிறப்பை எவ்வாறு இயம்புவது? அத்தகைய ஒழுக்கத்தை நாம் பேணிப் பாதுகாக்க எமக்கு உதவுவது எமது சமயச் சிந்தனைகளே. ஒழுக்கத்தை பேணி உயர் வடையச் செய்யும் சமயம் சைவசமயம் எனும் போது நாம் பெருமைப்படவேண்டும் அல்லவா?

சைவசமயம் தன்னகத்தே கொண்டு மிளிரும் பண்புகள் அனந்தம் அறத்தைப் போதிக்கிறது எமக்கு வீரத்தைப் போற்றுகிறது. நுண்கலைகளாகிய மனதுக்கு இன்பமூட்டக் கூடிய அருங்கலைகளைப் போதிக்கிறது இதிகாச புராணங்கள் இவற்றை எல்லாம் கதைவடிவில் எமக்குதவும் வகையில் எடுத்துக்கூறி எம்மைச் செம்மையுற வைக்கிறது வாழ்க்கையை வளமாக்கி முடிவில் பயனுள்ள தாக்க வழி செய்கிறது வாழ்வின் பயனை வாழும் போது பெற்றுக் கொள்ளச் செய்கிறது.

இத்தகைய மேன்மையான சைவசமயத் தவராகிய நாம் இன்று துன்பப்படும் நிலையில் வாழ்கிறோம் ஏன்? என்பது எமக்குப் புரிவதில்லை. எமது மேன்மையான சமயப் பண்பாடும் சிறந்த ஒழுக்கப் பண்பாடுகளும், பாரம்பரியமான சம்பிரதாய நடைமுறைகளும் மீறப்படுகின்றன. நடைமுறைப்படுத்தப்படாது போகின்றன. இளம் சமுதாயத்தினரிடையே சைவத்தின் உண்மைகளையும் உயர்வுகளையும் எடுத்துக் கூறி சமயப்பற்றை வளர்த்து எமது சமயத்தை என்றென்றும் அழியாது காப்பாற்றி அதன் மூலம் மேன்மையான வாழ்வு எமக்குக் கிடைக்க வேண்டும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவானந்தவாரிதி சிவத்திரு.வ.குமாரசாமிஐயா
பொது நூலகம்,
வலி வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முருக வழிபாட்டின் தொன்மையும், தனித்துவமும்

தென்னாசியாவில் காலத்திற்கு காலம் தோன்றிய மதங்களும், தத்துவங்களும், சமய நம்பிக்கைகளும் காலப்போக்கில் ஒன்றிணைந்து தோன்றியதே இந்து மதமாகும். இந்துமதம் என்ற பெயர் இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களிலிருந்து இந்தியாவின் ஏனைய மதங்களை வேறுபடுத்திக்காட்ட பிரித்தானியர் பயன்படுத்திய சொல்லாகும். இதனால் இலங்கை உட்பட பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த புராண வழிபாட்டு மரபுகளை இந்துமதம் என்ற பெயரால் அழைப்பது தவறு எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆயினும் இப்புராண வழிபாட்டிற்குரிய மரபுகள் இந்து மதத்திற்குரிய அம்சங்களைக் கொண்டிருப்பதாலும், பிரித்தானியரால் இந்து மதத்திற்குள் ஒன்றடக்கப்பட்ட பௌத்தம் தனியொரு மதத்திற்குரிய பெயராக வரலாற்று ரீதியில் பயன்படுத்தப்படுவதாலும் புராண வழிபாட்டு மரபுகளின் பொருள் விளக்கத்திற்காக அதை இந்துமதம் என்ற பெயரால் அழைத்துக் கொள்ளலாம்.

இலங்கை மதங்களுள் இந்து மதத்திற்கு மிகத் தொன்மையான வரலாறு உண்டு. இதன் தொடக்ககாலச் சான்றாகக் கி.மு.800இல் இருந்து கிடைக்கும் திராவிட மக்களுக்குரிய பெருங்கற் காலப் பண்பாட்டு (Megalithic Culture) மட்பாண்டங்களில் பெறப்பட்ட குறியீடுகள் சுடுமண் பாவைகள், மனித, மிருக வடிவங்கள் உலோகச் சின்னங்கள் விளங்குகின்றன. கி.மு.3 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பௌத்த மதத்தின் அறிமுகம் அம்மதம் அரச ஆதரவுடன் மிகக் குறுகிய காலத்தில் இலங்கையில் வளர்ச்சியடையக் காரண மாகியது. அதனால் இந்துமதம் தனது தனித்துவத்தை இழந்ததெனக் கூறமுடியாது. இந்து மதத்திற்கு எதிராகப் பௌத்த மத வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் கூட இக்காலத்தில் இலங்கையில் இருந்த இந்து ஆலயங்கள் பற்றியும், அம்மதத்திற்கும் ஈழத்து மன்னர்களுக்கும் இடையிலான உறவு பற்றியும் சில இடங்களில் எடுத்துக் கூறுகின்றன. (Maha vamsa. X : 102, XIX: 37, XXI: 1-21, XXII: 3-4). இலங்கையின் முதல் வரலாற்றுப்பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் தேவநம்பிய தீஸன், துட்டகாமினி போன்ற சிங்கள மன்னர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த பிராமணக் குடியிருப்புகள் பற்றியும் அவர்கள் அரச சபைகளிலும், அரச திருமணங்களிலும் புரோகிதராகக் கடமை யாற்றியது பற்றியும், சிலர் ஆசிரியராக, வைத்தியராகத் தொழில் புரிந்தது பற்றியும் கூறுகிறது. (Mahavamsa. X:102, XIX:37, XXXI:1-21, XXII: 3-4, XXIII: 24 - 26, XIX:37, XVX:102). இதைச் சமகாலத்திற்குரிய 21 பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. (Paranavithana 1970 LXVIII - IXIX) இச்சான்றாதாரங்கள் பௌத்தம் செல்வாக்குடைய மதமாக இலங்கையில் வளர்ந்து சென்ற காலகட்டத்தில் இந்து மதத்தைத் தமிழர்கள் மட்டுமன்றிப் பிறமதத்திற்குரியவர்களும் பின்பற்றியிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. இப்பாளி இலக்கியச் சான்றாதாரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் சமகாலக் கல்வெட்டா தாரங்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது இந்த உண்மை மேலும் தெளிவாகிறது.

ஈழ்த்தமிழரிடையே இந்து மதத்தின் இரு பெரும் பிரிவுகளான சைவ, வைஷ்ணவ வழிபாட்டு மரபு பண்டுதொட்டு இருந்து வந்ததற் கான தொல்லியல், இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன அவற்றுள் முருக வழிபாட்டிற்கு மிகத் தொன்மையான வரலாறு உண்டு என்பதற்கு பல சான்றுகள் காணப்படுகின்றன. இவ் வழி பாட்டை தமிழருக்குரிய தனித்து வமான வழிபாடுகளில் ஒன்றாகக் கொள்ளும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகின்றது. சங்க இலக்கியத்தில் வரும் "முருகு" (அகநாநூறு : 22–11, புறநானூறு 56:11, நற்றிணை 47:10,) "செவ் வேள்" (மதுரைக் காஞ்சி 611, நற்றிணை 34, குறுந்தொகை 53:3), "மஞ்சையன்" (திருமுருகாற்றுப்படை 210), "விரைமயில் மேல் ஞாயிறு" (பரிபாடல் 18:26) என்ற சொற்றொடர்கள் முருக வழிபாட்டு டன் தொடர்புடையன. இம்முருக வழிபாடே வடஇந்திய வழிபாட்டுடன் இணைந்து காலப் போக்கில் "குமரக்" கடவுள் வழிபாடாயிற்று.

தமிழகத்தில் முருக வழிபாட்டின் தொடக்க காலச் சான்றுகளாக ஆதிச்ச நல்லூர் பெருங்கற் காலப் பண்பாட்டில் பெறப்பட்ட வேல், சேவல் என்பவற்றிற்குரிய சின்னங்கள் சுட்டிக் காட்டப் படுகின்றன. ஈழத்திலும் பொம்பரிப்பு, அநுராதபுரம், பின்வேவ, கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் அடையாளம் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் முருக வழிபாட்டை நினைவுபடுத்தும் வேல் குறியீடாகவும், சின்னமாகவும் பெறப் பட்டுள்ளன. (சிற்றம்பலம் 1995:182, புஷ்பரட்ணம் 1991:38)

பிராமிக் கல்வெட்டுகளிலும், சமகாலப் பாளி இலக்கியங்களிலும் வரும் தனிநபர் பெயர்களில் சில முருக வழிபாட்டுடன் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுவதாக உள்ளன. அவற்றுள் வேல, வேலா, வேலு போன்ற பெயர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. (Paranavithana 1970) சங்ககாலத் தமிழ் இலக்கியத்தில் முருகனுடைய பூசாரி வேலன் என்று குறிப்பிடப்படுகிறான். மேலும் இது முருகனைக் குறிக்கும் பெயராக மதுரைக் காஞ்சி, அகநாநூறு முதலான தமிழ் நூல்களில் குறிப்பிடப்படுகிறது. குறுந்தொகையில் (சுகசு : 1–2) "மெல்லிய தோளை மெலியச் செய்த துன்பம் வெற்றியையுடைய முருகக் கடவுளால் வந்ததென்று வேலன் சொல்வான்" எனக் கூறப்பட்டுள்ளது. பட்டினப் பாலையில் (154 – 8) முருகன் செவ்வேள் என்று குறிப்பிடப் படுகிறான். சமகாலத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் வேள் என்ற சொல்லப்பட்ட பெயராகவும், தனிநபர் பெயராகவும் பயன் படுத்தப்பட்டுள்ளது. இதில் தனிநபருக்குரிய பெயர் முருகனுடன் தொடர்புடையதெனக் கருதப்படுகிறது. ஈழத்தில் கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 21 கல்வெட்டுகளில் வேள் என்ற சொல் காணப்படுகிறது. அவற்றுள் பெரும்பாலான கல்வெட்டுக்களில் வரும் இச்சொல் வடமொழியில் "ராஜா" என்ற பட்டத்திற்குச் சமனாக கருத்தில் பயன்படுத்தப் பட்டாலும், சில கல்வெட்டுக்களில் இச்சொல் தனிநபருக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. இதைச் சமகாலத்துப் பாளி இலக்கியங்களில் வரும் வேலு – சுமண போன்ற பெயர்களும் உறுதிப்படுத்துகின்றன. இவை சங்க இலக்கியத்தில் முருகனைக் குறிக்கும் வேலா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள் போன்ற பெயர்களுடன் ஒப்பிடத்தக்கன.

தமிழகத்திற்கும் வட இந்தியா வுக்கும் இடையிலான பண்பாட்டுக் கலப்பால் தமிழ் கடவுளான முருகன் காலப்போக்கில் குமரன், கார்த்திகேயன் போன்ற பெயர் களைப் பெற்றான். அதேபோல் பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்ட இலங்கை, வடஇந்தியத் தொடர்பால் முருக வழிபாட்டிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டதைப் பிராமிக் கல்வெட்டு களிலும், பாளி இலக்கியங்களிலும் வரும் குமார, மகாசேனன், விசாக போன்ற பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதில் "விசாக" என்ற பெயர் தமிழ் வணிகர்களுக் குரிய பெயராக வட இலங்கையில் பெரிய புளியங் குளம் என்ற இடத்தில் உள்ள கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய இரு கல் வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (Paranavithana 1970: nos. 356 – 357) இதை யொத்த பெயர் தமிழகத்தில் கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பெருங்கற்கால மட்பாண்டத்தால் பெறப் பட்டுள்ளது (Rajan 1994:82) பேராசிரியர் பரண விதான இப்பெயருக்குரியவர்களை முருக (ஸ்கந்த) வழிபாட்டுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறுகிறார். (Paranavithana 1970: CX XII).

கல்வெட்டுக்களைப் போல் ஈழத் தமிழர் வெளியிட்ட நாணயங்களும் முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதில் முக்கிய சான்றாக விளங்குகின்றன புராதன காலத்தில் வெளியிடப்பட்ட இந்திய நாணயங்களில் குறிப்பாக வடஇந்திய நாணயங்களில் முருகனுக் குரிய சின்னங்களுடன் முருகனுக்குரிய பெயர்களும் இடம் பெற்றுள்ளன. (Gupta 1969:187). இம்மரபு ஈழத்தில் வெளியிடப்பட்ட தமிழர் நாணயங்களிலும் உண்டு என்பதற்குரிய சான்றுகள் அண்மைக்காலத்தில் கிடைத்துள் ளன. தென்னிலங் கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த கி.பி.2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணயமொன்றின் முற்புறத்தில் மயில் சின்னமும், பின்புறத்தில் தமிழ்ப் பிராமி எழுத்தில் மகாசாத் தன் என்ற பெயரும் காணப் படுகின்றது. (Bopearachchi 1999:54). இந் நாணயம் இலங்கைத் தமிழரின் புராதன முருக வழிபாட்டுத் தலமான கதிர்காமக் கந்தன் ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தில் இருந்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மரபு சமகாலத்தில் வட இலங்கையிலும் இருந்திருக்கலாம் என்பதற்கு கந்தரோடையில் கிடைத்த (Seyone 1998) நாணயங்கள் சான்றாகும். கி.மு. 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நாணயத்தின் முற்புறத்தில் ஸ்ரீவத்ஸாவும், பின்புறத்தில் மயில் சின்னத்து டன் தமிழ்ப் பிராமி எழுத்தில் உதி(ஹ)பன் என்ற பெயரும் காணப்படுகின்றன. (Pushparatham 2001)

வரலாற்று ரீதியாக தென்னாசியாவில் வெளியிடப்பட்ட ஒவ்வொரு காலப் பகுதிக்கு முரிய நாணயங்களிலும் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு சின்னமும் ஏதோ ஒரு கருத்தின் அடிப்படையில் பொறிக்கப்பட்டிருப் பதைக் காணமுடிகிறது. இதில் சமய முக்கியத்துவமே மேலோங்கியிருந்ததை நாணய ஆதாரங்களுடன் அவ்வக்காலகட்டத்துக்குரிய பிற ஆதாரங்களை ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் அடையாளம் காணமுடிகிறது (Sarma). இதே போல் இந்திய நாணயங்களில் மயிலை ஒரு சின்னமாகப் பயன்படுத்தும் மரபு பண்டு தொட்டுக் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. கி.மு.4ஆம், 3ஆம், நூற்றாண்டில் வட இந்தியாவில் மௌரிய மன்னர் வெளியிட்ட முத்திரை நாணயங்களில் மயிலும் ஒரு சின்னமாக இடம்பெற்றுள் ளது (Gupta 1969:187) பிற் காலங்க ளில் குசாணரும், கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டில் குப்தரும் தாம் வெளியிட்ட நாணயங்களில் மயிலை ஒரு சின்னமாகப் பயன் படுத்தியுள்ளனர். (Gupta 1969:201). குப்த வம்சத்தவர் மயிலோடு முருகனைக் குறிக்கும் வேலையும், முருகனைக் குறிக்கும் கார்த்திகேய, குமார போன்ற பெயர்களையும் பொறித்துள்ளனர். ஆயினும் வட இந்தியாவின் பண் டைய நாணயங்களில் மயிற் சின்னம் அரசன், காளை, அம்மன் போன்ற பிற சின்னங்களுடன் சேர்ந்து வருகின்றதே தவிர தனியொரு சின்னமாக இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரை தமிழ் நாடு தவிர்ந்த ஏனைய திராவிட மாநிலங்களில் மயிலை நாணயங்களில் பொறிக்கும் மரபு கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் ஏற்பட்டுள்ளது. இதற்கு 1098இல் கல்யாணிச் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தியன் (திருபுவனமல்ல) வெளியிட்ட செப்பு நாணயங் கள் சான்றாகும் (Girijapathy 1999:82-3). தமிழ் நாட்டில் சங்ககால மலையமான் மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் மயிலுக்குப் பதிலாக வேல் சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது. தென்னிந்தியாவில் புராதன காலம் தொட்டு முருக வழிபாட்டில் முதன் பெற்ற இடமாக தமிழ் நாட்டிலுள்ள பாண்டி நாடு கொள்ளப்பட்டாலும் சங்க காலப் பாண்டியர் வெளியிட்ட நாணயங் களில் முருக வழிபாட்டிற் குரிய சின்னங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகக் கூறு வதற்கு சான்றுகள் இருப்பதாகத் தெரிய வில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் வெளியிட்ட நாணயங்களில் முற்புறம் காளையுரு வமும், அதன் மேற்புறத்தில் பல்லவர் கால எழுத்தில் "தம்" என்ற சொல்லும், பின்புறத்தில் இடப்புறம் நோக்கி நிற்கும் மயில் சின்னமும் இடம் பெற்றுள்ளன.

இவற்றின் அடிப்படையில் ஈழத்தில் கிடைத்த மேற்கூறப்பட்ட நாணயங்களில் வரும் மயில் சின்னத்தை நோக்கும் போது அந்நாணயங் களை வெளியிடக் காரணமாக இருந்த தமிழ் சிற்றரசர்கள் அல்லது குறுநிலத் தலைவர்கள் முருக வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டி ருந்தனர் எனக் கூறுவதில் ஐயமில்லை. பண்டு தொட்டு மயில் முருகனுடைய வாகனங்களில் ஒன்றாக இருந்ததற்கு புறநானூறு (65:7–8), திருமுருகாற்றுப்படை (210), பரிபாடல் (18:26) கந்தபுராணம் (4:13,376 – 381) போன்ற தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. சங்க காலத்தில் மூவேந்தரும் மலையமான் போன்ற குறுநில மன்னர்களும் வெளியிட்ட நாணயங் களில் சமயச் சின்னங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் முருகனுக் குரிய சின்னங்களுக்கு அதிலும் குறிப்பாக மயில் சின்னத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்கு இது வரை சான்றுகள் கிடைக்கவில்லை. அதிலும் மலையமான் வெளியிட்ட நாணயத்தில் வரும் வேல் சின்னத்தைத் தவிர பிற சின்னங்கள் சங்ககால மன்னர் வெளியிட்ட நாணயங்களில் இருப்ப தாகத் தெரியவில்லை. இந்நிலையில் ஈழத் தமிழர் வெளியிட்ட சங்க காலத்தை ஒத்த நாணயங்களில் சிவனுக்குரிய சின்னங்களைப் போல், முருகனுக்குரிய வாகனமான மயிற் சின்னம் நாணயங்களில் முக்கிய சின்னமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றிருப்பது பண்டைய ஈழத்தில் முருக வழிபாடு பெற்றிருந்த முக்கியத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதற்கு மேலும் சான்றாக கி.மு.3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.5–6ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த நீள்சதுர நாணயங்களில் வரும் சின்னங் களை எடுத்துக்காட்டலாம்.

இந்நாணயங்களில் ஸ்ரீவத்ஸம், யானை, தாமரை, சூலம், காளை சிவலிங்கம் போன்ற பிற தெய்வங் களுக்குரிய சின்னங்களுடன் முருகனுக்குரிய மயில், வேல், சேவல் போன்ற சின்னங்களும் இடம் பெற்றுள்ளன. (Parkar 1981:461 - 482, Peries 1919: 40-67, Boearachchi 1999:Sitrampalam 1992:151-158. சிவசாமி 1970:26 – 36, கிருஷ்ண ராஜா 1983:71–84, புஷ்பரட்ணம் 2001:90 – 100). இதில் மயில் சின்னத் துடன் வரும் வேல், சேவல் போன்ற சின்னங்கள் ஈழத்தில் முருகவழிபாடு பெற்றிருந்த முக்கியத்து வத்தை மேலும் தெளிவாக எடுத்துக்காட்டு கின்றன. இவற்றில் வரும் வேல் சின்னம் வெற்றிக்கடவுளான முருகனை "வடிவேலன்" (சிலப்பதிகாரம் 1:2, 49–50), "வெல்வேலான்" (கலித் தொகை.மருதக்கல்லி 28:26), எனத் தமிழ் இலக்கியங்கள் கூறுவதை அப்படியே நினைவு படுத்துகிறது. சேவலை முருகனுடன் தொடர்பு படுத்துவது ஆரியக் கலப்பால் ஏற்பட்ட ஒன்று என்ற கருத்துக் காணப்படுகிறது. ஆயினும் அது பண்டுதொட்டு முருக வழிபாட்டுக்குரிய அடை யாளச் சின்னமாகப் பார்க்கப்படுகிறது (காந்தி தாசன் 1988:120) சங்க இலக்கியத்தில் முருக வழிபாட்டுடன் இணைந்த ஒன்றாக கடம்பமர வழிபாடு கூறப்படுகிறது. இதன் காரணமாக முருகன் "கடம்பமர்ந்த செல்வன்" எனப் பரிபாடலில் (8:126) விளிக்கப்படுகிறான். மேற்கூறப்பட்ட நீள் சதுர நாணயங்களின் பின்புறத்தில் பெரும்பாலும் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா காணப்பட்டாலும், பூநகரி, நிந்தவூர் ஆகிய இடங்களில் கிடைத்த சில நாணயங் களின் பின்புறத்தில் சுவஸ்திகாவுக்குப் பதிலாக வேலியிடப்பட்ட மரம் காணப்படுகின்றது. இம் மரத்தைச் சங்க இலக்கியத்தில் வரும் முருகனுக்குரிய கடம்ப மரத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கலாம்.

கி.பி. 7க்கும் கி.பி. 13க்கும் இடைப்பட்ட காலத்தில் ஈழத்தில் முருக வழிபாடு அடைந்த வளர்ச்சியை அறிவதற்குரிய தொல்லியற் சான்றுகள் அதிகம் கிடைத்ததாகத் தெரிய வில்லை. ஆனால் ஈழத்துப் பாளி நூலான சூளவம்சத்தில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் மானவர்மன் என்ற இளவரசன் திருகோண மலையில் உருத்திராக்க மாலை ஒன்றைக் கையிலேந்தி மந்திரம் ஒன்றை உச்சரித்த தாகவும், அப்போது ஸ்கந்தகுமாரன் மயிலேறி வந்து வரமளித்ததாகவும் கூறுகிறது. (Culavamsa LVII: 4-13). இச்செய்தி இக் காலத்தில் வழக்கிலிருந்த முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் கருத இடமளிக்கிறது. வன்னியில் செழியாவில் காட்டுப்பகுதியில் இருந்து செம்பினால் வார்க்கப்பட்ட மயில் விக்கிரகம் ஒன்று கிடைத்துள்ளது. இது நான்கு அங்குல நீளமும், மூன்றங்குல உயரமும், நூறு கிராம் எடையும் உடையது. இவ்விக்கிரகம் பிற்காலத்திலும் முருக வழிபாடு தொடர்ந்து செல்வாக்குடன் இருந்ததற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக் கப்பட்ட கி.பி.11ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசேந்திரசோழன் காலக் கல்வெட்டொன்று இங்கிருந்த ஆலயம் ஒன்றிற்குத் தானமளித்த செய்தியைக் கூறுகிறது (Indrapala 1971)இதில் ஆலயம் இருந்த இடத்தின் பெயருக்குரிய எழுத்துக்கள் சில அழிந்திருந்தாலும் பெயரின் இறுதியில் வரும் எழுத்துக்கள் "லூர்" என முடிவதால் நல்லூராக இருக்க வேண்டும் எனவும், அங்கிருந்த ஆலயம் தற்போதய நல்லூர் முருகன் ஆலயத்திற்கு முன்னோடியாக அமைக்கப்பட்டிருந்த முருகன் ஆலயமாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றன. கோட்டையில் சோழர் காலக் கல்வெட்டுக்கள் மட்டுமன்றி இதற்கு முற்பட்ட காலக் கல்வெட்டுக்களும் பிறதொல் பொருட் சின்னங்களும் காணப் படுகின்றன. பேராசிரியர் சிவசாமி கோட்டையின் மேற்குப் பக்க அரணில் பத்தாம் நூற்றாண் டுக்குரிய கிரந்தக் கல்வெட்டின் பாகம் வெளியே தெரிவதாகத் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஈழத்தில் கிடைத்த புராதன நாணயங்களில் சில இக்கோட்டைப் பகுதியில் இருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு இக்கோட்டை ஐரோப்பியரால் தற்போதைய நிலையில் அமைக்கப்பட்டபோது அதற்குத் தேவையான மூலப் பொருட்கள் ஏற்கனவே பிற இடங்களில் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களை இடித்து கொண்டுவரப்பட்ட போது அவற்றுடன் வரலாற்றுச் சின்னங்களும் கொண்டு வரப்பட்டதே காரணமாகும். இதற்கு அக்கால இந்து ஆலயங்களும் விதிவிலக்கல்ல. அதன் விளைவே இங்கு சோழக் கல்வெட்டுக் கிடைத்தமைக்குக் காரணமாகும். இதற்கு இக்கல் வெட்டில் வரும் இடப்பெயர் "லூர்" என முடிவது உறுதிப்படுத்தப்படுமானால் அந்த இடத்தை நல்லூர் எனக் கொள்வதில் தவறில்லை. நல்லூர் என்ற இடப்பெயர் இடைக் காலத்தில் ஆலயத்திற்கு நிவேதனமாகக் கொடுக்கப்பட்ட இடத்திற்குரிய பெயராக அழைக்கப்படுவது பொது வழக்காக இருந்ததைத் தமிழகத்தில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இதனால் கோட்டையில் கிடைத்த கல்வெட்டில் வரும் நல்லூர் என்ற இடம் தற்போதைய நல்லூரா அல்லது இவ் வட்டாரத்தில் சோழர் காலத்தில் நல்லூர் என்ற இன்னொரு இடம் இருந்ததா என்பது தெரிய வில்லை. ஆனால் கி.பி.13 ஆம் நூற் றாண்டிலிருந்து தற்போதைய நல்லூர் என்ற இடம் வரலாற்று மூலங்களில் குறிக்கப் படுவதோடு, அங்கிருந்த முருகன் ஆலயமும் குறிப்பிடப்படுவதால் சோழக் கல்வெட்டில் வரும் இடத்தை தற்போதைய நல்லூராகவும், அங்கிருந்த ஆலயத்தை தற்போதைய முருகன் ஆலயத்திற்கு முன்னோடியாக இருந்த ஆலயமாகவும் கொள்வது பெருமளவுக்குப் பொருத்தமாகும். இக்கல்வெட்டில் இருந்து நாம் அறியக் கூடிய இன்னொரு முக்கிய செய்தி ஈழத்தில் சோழர் ஆட்சி ஏற்பட முன்னரே யாழ்ப்பாணத்தில் முருகன் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தமையாகும்.

யாழ்ப்பாண அரசு காலத்தில் சிவ வழிபாடு போல் முருக வழிபாடும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதை இவ்வரசு காலத்தை ஒட்டித் தோன்றிய தமிழர் இலக்கியங்களும், தொல்பொருட் சின்னங்களும் உறுதி செய்கின்றன. அவற்றுள் ஏனைய சான்றாதாரங் களைக் காட்டிலும் இக்காலத்தில் வெளியிடப் பட்ட நாணயங்களில் வரும் பெயர்களும், சின்னங்களும் கூடிய அளவிற்கு நம்பகத் தன்மை வாய்ந்தவையாக உள்ளன. இம் மன்னர்களால் வெளியிடப்பட்ட சிவனுக்குரிய நந்தி வாகனம் பொறித்த அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்களையும் (எமக்கு கிடைத்தவை மட்டும்) தொகுத்து நோக்கும் போது அவற்றில் மூன்று அம்சங்களைச் சிறப்பாக அவதானிக்க முடிகின்றது. முதலா வது வகை நாணயத்தில் முன் புறத்தில் நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறம் பார்த்தி ருக்கும் நந்தியும் அதற்கு கீழே சேது என்ற வாசகமும் காணப் படுகிறது. இதில் அமர்ந்திருக்கும் நந்தியின் முகத்திற்கு முன்னால் வலப் புறமாக தண்டுடன் கூடிய விரிந்த தாமரை மலர் காணப் படுகிறது.

இரண்டாவது வகை நாண யத்தில் முன்புறத்தில் நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், நாணயத்தின் பின்புறத்தில் வலப் புறம் பார்த்திருக்கும் நந்தியும் அதற்கு கீழே சேது என்ற வாசகமும் காணப்படுகின்றன. இதில் அமர்ந்திருக்கும் நந்தியின் முகத்திற்கு முன்னால் தாமரை மலருக்குப் பதிலாக இடப்புறம் பார்த்த நிலையில் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட மயில் உருவம் காணப்படுகிறது (படம்–21). இதில் காணக் கூடிய முக்கிய அம்சம் நந்தியின் வயிற்றுப் பகுதியில் வரையப்பட்டுள்ள கட்டிடம் ஒன்றின் புற உருவத் தோற்றமாகும். இது யாழ்ப்பாண அரசு காலத்தில் இருந்த ஆலயத்தின் தோற்றமாகக் கருத இடமுண்டு.

மூன்றாவது வகை நாணயத்தில் முன்புறத்தின் நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறம் பார்த்திருக்கும் நந்தியும் அதற்கு கீழே சேது என்ற வாசகமும் காணப்படுகின்றன. இதில் வலப்புறம் பார்த்து அமர்ந்திருக்கும் நந்தியின் முகத்திற்கு முன்னால் மயில் சின்னத்திற்குப் பதிலாக இடப்புறமாகப் பார்க்கும் வகையில், நிற்கும் நிலையில் மனித உருவம் ஒன்று காணப்படுகிறது.

இதில் நந்திக்கு முன்னால் பொறிக்கப் பட்டுள்ள தாமரை, மயில் மனித உருவம் ஆகிய சின்னங்களுள் தாமரை மலர் பொதுவாக பல தெய்வங்களுடன் வருவதால் இதில் எந்த தெய்வத்தைக் குறிக்கிறது என்பதை நிச்சயப் படுத்திக் கூறமுடியவில்லை. ஆனால் மற்றைய நாணயங்களில் தாமரைக்குப் பதிலாக மயில் இடம்பெறுவதால் தாமரை மலர் முருகனைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதில் வரும் மயில் முருகனைக் குறித்த தென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இவ்வரசு காலத்தில் வெளியிடப்பட்ட சில நாணயங்களில் முருகனைக் குறிக்கும் பெயரோடு, மயில் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. அதேபோல் நந்திக்கு முன்னால் உள்ள மனித உருவத்தை முருகனின் வடிவமாகக் கருதலாம். ஏனெனில் இதில் மன்னனைக் குறிக்கும் உருவம் நாணயத்தின் முன்பக்கத்தில் பொறிக்கப் பட்டுள்ளது. மேலும் மன்னனைக் குறிக்கும் உருவம் பொதுவாக இலங்கை, தமிழக நாணயங்களில் கோட்டுருவமாகவே பொறிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதில் உள்ள மனித வடிவம் வார்ப்பு நிலையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் அம்மனித உருவம் நந்தியுடன் இணைந்த நிலையில் காட்டப் பட்டிருப்பது அதன் தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது. இம்மூன்று சின்னங்களையும் சிவனுக்குரிய நந்தியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இவை பண்டைய இலக்கியங் களில் சிவனுக்கும் முருகனுக்கும் இடையிலான தந்தை மகன் உறவு தொடர்பாக வரும் கதைகளை நினைவுபடுத்து வதாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் தமிழகத்திற்கு முன்னோடியாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் முருகன் உருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளமை சிறப்பாக நோக்கத் தக்கது.

யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள் பற்றி ஆராய்ந்த பலரும் அவர்கள் சேது என்ற வாசகம் பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் எமது அண்மைக் கால ஆய்வில் இருந்து அவர்கள் கந்தன், ஆறுமுகன் அல்லது ஆரியச் சக்கரவர்த்தி ஆகிய பெயர்கள் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. (2001:147 – 159) இக்கருத்தை பேராசிரியர் பத்மநாதன் அவர் களும் ஏற்றுள்ளார். அவற்றின் முக்கிய விபரங்கள் வருமாறு.

### முதலாவது வகை நாணயம்

இடம் : மண்ணித்தலை

உலோகம் : செப்பு

அளவு : 0.5 செ.மீ

எடை : 2.0 கிராம்ம(படம் –)

**முன்புறம் :-** விளிம்பைச் சுற்றி இருவட்டங்கள் இருவட்டத்திற்குள்ளும் தடித்தபுள்ளிகள் இரண்டாவது வட்டத்திற்குள் இடப்புறம் பார்த்த நிலையில் மயில் சின்னம். இதன் தோகைகள் சுருங்கிய நிலையில் அதன் கொண்டை மிக உயரமாக உள்ளது. ஏனைய நாணயங்களில் மயிலின் வாயில் பாம்புச் சின்னம் காணப்படுகிறது. ஆனால் இந்நாணயத்தில் உள்ள சின்னம் பாம்பு உருவத்திலிருந்து சற்று வேறுபட்ட உருவமாக உள்ளது. மயிலுக்கு மேலே விளிம்பை ஒட்டியவாறு பிறைச்சந்திரன், சூரியன் என்பன காணப்படுகின்றன.

**பின்புறம் :-** முன்புறம் போல் விளிம்பைச் சுற்றி இரு வட்டங்கள், வட்டத்திற்குள் தடித்த புள்ளிகள். இவை முத்தைக் குறிக்கும் சின்னங்களாகும். ஆனால் இவை விளிம்பிலிருந்து சற்று விலகி முடிவுறாத நிலையில் உள்ளன. இடப்புறமாக வேல். அதன் கீழ் பெட்டி வடிவில் சதுரக் கோடு. அதற்குள் "சக" அடையாளம். மையத்தில் மேற்புறமாக தமிழில் "கந்"என்ற பெயர் காணப்படுகிறது. இதன் கீழ் கால்களைக் குறிக்கும் இரு கோடுகள் காணப்படுகின்றன. இடப்புறமாக முக்கோண வடிவில் முடிவுறாத நிலையில் ஒரு வடிவம் உள்ளது. இது குறியீடாக இருக்கலாம். இச்சின்னங்களைச் சுற்றி வட்டமான சிறு புள்ளிகள் உள்ளன.

### இரண்டாவது வகை

இடம் : வீரபாண்டியன்முனை.

உலோகம்: செப்பு

அளவு : 1.3.செ.மீ

எடை : 1.9கிராம்

**முன்புறம் :-** முதலாவது நாணயத்தைப் போல் விளிம்பைச்சுற்றி இருவட்டங்கள். இருவட்டத்திற்குள்ளும் தடித்த புள்ளிகள். இதில் காணப்படும் மயில் உருவம் முதலாவது நாணயத்தில் காணப்படும் மயில் உருவத்தைப் பெருமளவு ஒத்திருந்தாலும் சில அம்சங்களில் வேறுபடுகின்றது. முதலாவது நாணயத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ள மயில் இந்நாணயத்தில் வலப்புறம் பார்த்த நிலையில் காணப்படுகிறது. அத்துடன் இதன் வாயில் காணப்படும் சின்னம் பாம்பு எனத் தெளிவாகத் தெரிகிறது. இந்நாணயத்தில் உள்ள பிறைச் சந்திரனும், சூரியனும் பெருமளவு தேய்வடைந்த நிலையில் உள்ளன.

**பின்புறம் :-** முதலாவது நாணயத்தில் வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வட்டம். இதில் வேல் சின்னம் காணப்படவில்லை. முதலாவது நாணயத்தில் "கந்" என எழுதப்பட்ட இடத்தில் இங்கு "ஆ" என்ற எழுத்துக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த நிலையில் முதலாவது நாணயத்தில் வருவது போல் மனித வடிவில் அமைந்த கால் உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு இடது, வலது புறமாக முதலாவது நாணயத்தில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களில் ஒன்றில் மயில், வேல் சின்னத்தோடு "கந்" என்ற பெயரும், மற்றையதில் இதே சின்னங்களுடன் "ஆ" என்ற எழுத்தும் இடம் பெற்றுள்ளன. இரு நாணயங்களிலும் உள்ள மயிலின் தோற்ற அமைப்பு, சின்னங் களிடையேயும் காணப்படும் ஒற்றுமைகள், நாணயங்களின் வடிவமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு வம்சத்தால் அல்லது மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பது தெரிகிறது. இரு நாணயங்களிலும் மயில், வேல் ஆகியவை முக்கிய சின்னங்களாக இடம் பெற்றிருப்பதைக் கொண்டு இந்நாணயங் களை வெளியிட்ட மன்னர்களும் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட மக்களும் முருகவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. சேது மொழி பொறித்த நந்திக்கு முன்னால் சிறு உருவமாக வடிவமைக்கப்பட்ட மயில் இவ்விரு நாணயங்களிலும் முக்கிய சின்னமாக அலங்கரிப்பது அந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்கள் முருகன் மீது அளவுகடந்த பக்தியுள்ளவர்களாக இருந்ததைக் காட்டுகிறது எனலாம். இது "கந்", "ஆ" என்ற பெயர்களை ஆராய்வதன் மூலம் மேலும் தெளிவாகிறது.

இடைக்காலத் தென்னிந்திய நாணயங் களை ஆராய்ந்தால் அவற்றுள் சில நாணயங்களில் இரு சிறப்பம்சங்களைக் காணலாம். ஒன்று மன்னன் பெயருக்குப் பதிலாக அவனது அல்லது அவனது வம்சத்தின் முதலெழுத்தை நாணயங்களில் பயன்படுத்தும் முறை காணப்பட்டது. இதற்கு சேரமன்னர் நாணயங்களில் பயன்படுத்தி "ச" என்ற எழுத்தையும் (Mitchiner 1998 : 160 - 1). மூன்றாம் பல்லளாமன்னன் தமிழகத்தில் கொங்கு நாட்டை ஆட்சி செய்த போது (கி.பி. 1292 – 1345) வெளியிட்ட நாணயங்களில் வரும் "ப" என்ற எழுத்தையும் குறிப்பிடலாம். இதேபோல் இக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணங்களில் மன்னனின் அல்லது வம்சத்தின் பெயருக்குரிய முதலெழுத்தை மன்னனின் தலையாகக் கொண்டு உடலின் கீழ்ப் பாகங்களை நாணயங்களில் பொறிக்கும் மரபு காணப்பட்டது. இதற்கு மூன்றாம் வல்லாளன் வெளியிட்ட நாணயங்களே சிறந்த சான்றாகும் (ஆறுமுக சீதாராமன் 1996 89 – 7 ). இங்கே "ஆ" என்ற எழுத்திற்கும், "கந்" என்ற எழுத்திற்கும் கீழே நடுவில் உள்ள பகுதி மனிதனின் இடுப்புடன் இணைந்த காற்பகுதியாகத் தோன்றுகிறது. இதை "ஆ" எழுத்துப் பொறித்த நாணயங்களில் தெளிவாகக் காணமுடிகிறது.

பேராசிரியர் பத்மநாதன் யாழ்ப்பாண மன்னர்கள் பயன்படுத்திய சேதுகாவலன் என்ற விருதுப் பெயரின் சுருக்கமே அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் வரும் "சேது" என்ற சொல்லின் வடிவம் எனக் குறிப்பிடுகிறார் (Pathmanathan 1980). அப்படியானால் நாணயத்தில் வரும் "கந்" என்ற சொல் எதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கிறது என்பது முக்கிய கேள்வியாகும். செகராசசேகரமாலை எனும் நூல் யாழ்ப்பாண மன்னர்களில் ஒரு வரான செகராசசேகரனை கந்த மலையாரியர்கோன் என வருணிக் கிறது (பத்மநாதன் 1992 317). கந்தமலை எனப்படுவது தென் னிந்தியாவின் தென்மூலையி லுள்ள கந்தமாதனம் என்பதாகும். சேது எனும் தலம் கந்தமாத னத்தில் உள்ளதாகச் சேது புராணம் கூறுகிறது. இது ஆரியச் சக்கரவர்த்திகளது பூர்வீக இடங் களில் ஒன்று. எனவே சேது காவலன் என்ற விருதுப் பெயரின் சுருக்கமே நாணயங்களில் வரும் "சேது"எனக் கொண்டால், செகராசசேகராமாலையில் வரும் கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப்பெயரின் சுருக்கமாக நாணயங்களில் வரும் "கந்" என்ற பெயரைக் கொள்வது முற்றிலும் பொருத்த மாகும். ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் சேது எனும் சொல்லைக் குலச்சின்னமாக, அரச சின்னமாகப் பயன்படுத்திய அதே வேளை அச் சொல்லை மங்கல மொழியாகவும், தெய்வீக மொழியாகவும் நாணயங்களில் பயன்படுத்தி யுள்ளனர் (Pathmanathan 1980). இதற்கு ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் சைவ சமயத்தின் மீது கொண்ட ஈடுபாடு காரண மாகும். அதேபோல் நாணயங்களில் வரும் "கந்" என்ற பெயரும் "கந்தமலையாரியர் கோன்" என்ற விருதுப் பெயரும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் முருகவழிபாட் டுடன் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகிறது எனக் கூறலாம். இங்கே "கந்" என்ற பெயரின் விரிந்த வடிவமே இலக்கியத்தில் வரும் "கந்தமலையாரியர்கோன்" எனக் கொள்ளும் போது நாணயத்தில் வரும் "கந்"என்ற எழுத்திற்குக் கீழேயுள்ள மனித உருவம் அப்பெயருக்குரிய மன்னனை அல்லது முருகனைக் குறித்ததெனக் கூறுவது மிகை யன்று.

அப்படியானால் நாணயத்தில் வரும் "ஆ" என்ற எழுத்து எதைக் குறிக்கிறது என்பது அடுத்து எழும் முக்கிய கேள்வியாகும். தமிழ்ப்பேரகராதியில் "ஆ" என்பதற்கு இடபம் என்ற பொருள் உண்டு (T.L.V.201). யாழ்ப்பாண, மன்னர்கள் இடபத்தை (நந்தியை) அரச இலட்சினையாக நாணயங்களில் பயன்படுத்திய தால் அவ்வாறு கொள்ள இடமுண்டு. ஆனால் "ஆ" என்ற எழுத்திற்கு கீழே உள்ள பாகம் ஒரு மனிதனுக்குரிய இரு கால்களை மட்டும் சுட்டிக் காட்டுவதால் இதை இடபமாகக் கொள்ளமுடிய வில்லை. மாறாக ஒரு மன்னனாக அல்லது தெய்வமாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது. "ஆ" என்ற எழுத்தை ஒரு மன்னனுடன் அல்லது வம்சத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் ஆரியச்சக்கர வர்த்திகள் என்ற வம்சப் பெயரால் இலக்கி யத்தில் அழைக்கப்படுகின்றனர். இதனால் நாணயத்தில் உள்ள "ஆ" என்ற எழுத்து அவ்வம்சத்தைக் குறிக்கும் முதலெழுத்தாக அமைய இடமுண்டு. அதேவேளை இவ் வெழுத்தைத் தெய்வப் பெயர்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது முருகனை ஆறுமுகன், ஆறுமுகக் கந்தன் என அழைக்கும் மரபு சங்ககாலம் தொட்டு தமிழரிடையே வழக்கில் உள்ளது (காந்திதாசன் 1988 :129–131). இதை கி.பி 7ஆம் நூற்றாண்டில் எழுந்த ஞானசம்பந்தர் தேவாரமும் உறுதிப்படுத்துகிறது (ஞானசம்பந்தர் தேவாரம் 1:19) இங்கே நாணயத்தில் "ஆ" என்ற எழுத்துடன் முருகனுக்குரிய வேலும், மயிலும் இடம் பெற்றிருப்பதை நோக்கும் போது இந்த "ஆ" என்ற எழுத்து ஆறுமுகனைக் குறித்ததெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எழுத்து ஆறுமுகனைக் குறித்ததெனக் கூறுவதே பெருமளவிற்குப் பொருத்தமாகத் தெரிகிறது.

இந்த இடத்தில் யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரில் அமைக்கப்பட்ட கந்தன் ஆலயம் தொடர்பாக கைலாயமாலையில் வரும் குறிப்பை மேற்கூறப்பட்ட நாணயங்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது இந் நாணயங்களை வெளியிட்ட மன்னன் யார் என்பது ஓரளவுக்குத் தெரியவரலாம். கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் நல்லூரில் கந்தன் ஆலயத்தையும், யாழ்ப் பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக் கூறுகிறது.

"இலக்கிய சகாப்த மெண்ணூற்
றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப
னாம்புவ னேக வாகு
நலம்மிகும் யாழ்ப்பாணத்து
நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக்
கோயிலும் கட்டுவித் தானே"

இச்செய்யுள் குறிக்கும் காலத்தைச் சகவருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக் கொண்டு பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் மந்திரி புவனேக பாகு காலத்தில் அரசும், கந்தன் ஆலயமும் தோன்றியதாகக் கூறுகின்றனர் (Rasanayagam 1928). ஆனால் இக்கூற்றை ஏற்கக் கூடிய அளவுக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கையில் புவனேகபாகு என்ற பெயரில் 7 மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் 6ஆம் பராக்கிரம பாகு தென்னிலங்கையில் ஆட்சி செய்த காலத்தில் அவன் வளர்ப்பு மகனாகிய சபுமால் குமர என்ற செண்பகப்பெருமாள் 1540 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 18ஆண்டுகள் புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சிபுரிந்துள் ளான். இதை யாழ்ப்பாணத்தில் கிடைத்த இவன்காலக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது (Indrapala 1971 : 29 - 31). இவனே மேற்படி செய்யுளில் வரும் புவனேகபாகு என்பதையும், அவனே ஏற்கனவே இருந்த கந்தன் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான் என்பதையும் பேராசிரியர்களான இந்திரபாலா, பத்மநாதன் போன்ற வரலாற்றறிஞர்கள் தக்கசான்றுகளுடன் நிறுவியுள்ளனர். இன்றும் நல்லூர் கட்டியத்தில் ஓதப்படும் சபுமால், ஸ்ரீசங்கபோதி, புவனேகபாகு போன்ற பெயர்கள் இவனையே குறிக்கிறது. இவன் கஜவல்லி, மகாவல்லி, சுப்பிரமணியர் (கந்தன்) போன்ற கடவுளரிடம் மிகுந்த பக்தியுடையவன் என்று அக்கட்டியம் மேலும் கூறுகிறது (பத்மநாதன் 1972 : 57).

ஆனால் நாணயங்களில் இடம் பெற்றுள்ள "கந்" என்ற பெயருக்கும், இரா சதானியின் தலைநகர் நல்லூரில் கந்தன் ஆலயத்தை அமைத்த மன்னனுக்கும் மற்றும் "கந்தமலையாரியர்கோன்" என்ற விருதுப் பெயரைத் தாங்கிய மன்னனுக்குமிடையே ஒருவித தொடர்பு இருப்பது போலக் காணப் படுகிறது. இதுவரை வரலாற்றறிஞர்கள் ஆய்வுக்கு உட்படுத்திய ஆரியச்சக்கரவர்த்திகள் கால நாணயங்கள் அனைத்திலும் நந்தியும், சேது என்ற மொழியும் முக்கிய சின்னங்களாகக் காணப்பட்டுள்ளன. ஆனால் எல்லா நாணயங் களிலும் இவை ஒரே முக்கியத்துவத்தைப பெற்றதாகக் கூறமுடியாது சில நாணயங்களில் வழக்கமாக நந்தி பொறிக்கப்பட்ட இடத்தில் அமர்ந்த அல்லது. நிற்கும் நிலையில் மன்னன் உருவமும், இதற்கு இடப்புறமாகப் பக்கவாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய நந்தி உருவமும் பொறிக்கப் பட்டுள்ளன. வேறு சில நாணயங்களில் சேது மொழி பொறிக்கப்பட்ட இடத்தில் அமர்ந்த அல்லது நிற்கும் நிலை யில் மன்னன் உருவமும், இதற்கு இடப்புறமாகப் பக்கவாட்டில் சேது மொழியும் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கு நாணயங்கள் வெளியிடப் பட்ட காலம் அல்லது அவற்றை வெளியிட்ட மன்னர்களுக்கிடையி லான வேறுபாடு காரணமாக இருக்கலாம். இந்த வேறுபாடு களின் இன்னொரு கட்டத்தைத் தான் கந்தன் வழிபாட்டுடன் தொடர்புடைய வேல், மயில் சின்னங்களுடன் "கந்" பெயர் பொறித்த நாணயங்கள் குறித்து நிற்கின்றன எனக் கூறலாம். இது ஒருவகையில் இந்நாணயங் களை வெளியிட்ட மன்னன் கந்தன் வழிபாட்டோடு தனக்குள்ள ஈடுபாட்டைக் காட்ட தான் வெளி யிட்டநாணயங்களிலும் அவற்றை வெளிப் படுத்தினான் எனக் கூறலாம். இதன் விளைவே ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களுள் ஒருவன் கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப் பெயரைப் பெறக் காரணம் எனக்கருதலாம்.

செகராசசேகரமாலை என்ற நூல் "கந்தமலையாரியர்கோன்" என்ற விருதுப் பெயரைத்தாங்கியவன் செகராசசேகர மன்னன் என்க் கூறுகிறது. செகராசசேகரம், பரராச சேகரம் என்பது யாழ்ப்பாண மன்னர்கள் மாறி மாறிச் சூடிக் கொண்ட சிம்மாசனப் பெயர் களாகும். இதில் கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப் பெயரைத் தாங்கிய செகராசசேகர மன்னன் யார் என்பது தெரியவில்லை. ஆனால் கந்தமலையாரியர் கோன் என்ற விருதுப் பெயர் பற்றிக் கூறும் செகராசசேகரமாலை என்ற நூல் 14ஆம் நூற்றாண்டில் வரோதய சிங்கையாரியன் காலத்தில் எழுதப்பட்டதாகும். இவன் செகராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரைப் பெற்றிருந்தான். இதனால் இவனும் "கந்த மலையாரியர்கோன்" என்ற விருதுப் பெயரையும் பெற்றிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவன் ஆட்சியில்தான் யாழ்ப்பாண இராச்சியம் உன்னத நிலையில் இருந்ததை பல்வேறு வரலாற்று மூலங்களில் இருந்து அறியமுடிகிறது. இவன் கச்சாயில் வடக்கரை வெற்றி கொண்ட மையும் (இந்தியப்படையெடுப்பாளர்களை வடக்கர் எனக்கூறுவது மரபு), தென்னிலங்கை மன்னர்களிடம் திறைபெற்றமையும், முஸ்லிம் படையெடுப்பால் பலவீனமுற்ற பாண்டியப் பேரரசுக்கு ஆதரவாகப் பொன்னையும், யானை களையும் கொடுத்தான் எனவும் வரலாற்றி லக்கியங்கள் கூறுவது இம்மன்னனின் ஆட்சிக்காலச் சிறப்பைக் காட்டுகிறது. இவன் தமிழையும் வடமொழியையும் வளர்க்க உள்ளூர் மற்றும் தமிழகத்திலிருந்து வந்த புலவர்களுக்குப் பொன்னாலான பல பொருட்களைப் பரிசாகக் கொடுத்தது பற்றி செகராசசேகரமாலை (1942 : 10) பின்வருமாறு கூறுகிறது.

"மன்னர் மன்று செகராசசேகரன்
மணவை யாரய வரோதயன்
பன்னு செந்தமிழ் வளம் பெறற்குதவு
பரிசிலங்கவர் சித்தியாம்
பொன்னின் மிஞ்சிய கெண்டிகை
பொலங் கலன் பிறவு மாம்பரிச்
சின்னமுள்ள தொகை யாவுமிவ்
விதிசிறந்த நிந்துரை சேயிழாய்"

இக்கூற்றிலிருந்து இவன் ஆட்சிக்கால செல்வநிலையை உணரமுடிகிறது. இதற்கு முத்துக்குளித்தல் சர்வதேச வர்த்தகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந் தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். இம்மன்னன் முத்துக் குளிப்புக்குப் பெயர்போன முத்துச்சிலாபத்தை தன்கட்டுப் பாட்டில் வைத்திருப் பதற்காகத் தென்னிலங்கை மன்னர்களுடன் பகைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் தெரிகிறது. மேற் கூறப்பட்ட இருவகை நாணயங் களிலும் முத்தைக் குறிக்கும் தடித்த புள்ளிகள் பொறிக்கப்பட்டுள்ளமை அக்கால வெளிநாட்டு வர்த்த கத்தில் முத்துப் பெற்ற முக்கியத் துவத்தைக் காட்டுகிறது. பேராசிரியர் பத்மநாதன் இம் மன்னன் பற்றி யாழ்ப்பாண அரசு கால இலக்கியங்கள் கூறுகின்ற வற்றைச் சிங்கள இலக்கியங் களுடனும், சமகால பாண்டிய, சிங்களக் கல்வெட்டுக்களுடனும் ஒப்பிட்டு இவனின் ஆட்சிக்காலம் 14ஆம் நூற்றாண்டெனக் கணித் துள்ளார் (197244 – 7). இங்கே "கந்" என்ற பெயர் பொறித்த நாணயம் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்குப் பின் வெளி யிடப்பட்டது என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிடமுடிகிறது. இச்சான்றுகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கந்தமலையாரியர்கோன் என்ற விருதுப்பெயர் பெற்ற வரோதய சிங்கையாரியன் காலத்திலேயே "கந்" "ஆ" என்ற பெயர் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டதெனக் கருத இட முண்டு. ஆயினும் இவை மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியவை.

ஈழத்தில் பண்டு தொட்டு வழிபடப்பட்ட முருகன் யாழ்ப்பாண அரசு காலத்திலும் செல்வாக்குப் பெற்றதை மேற்கூறப்பட்ட நாணயங்களில் வரும் முருகவழிபாட்டுடன் தொடர்புடைய சான்றுகள் எடுத்துக் காட்டு கின்றன. அதை அவ்வரசு காலத்திற்குரிய தென அடையாளம் காட்டப்பட்டுள்ள வள்ளி, தெய்வானையுடன் கூடிய முருகன் சிலைகளும் (சிவசாமி 1992:16) உறுதிப்படுத்துகின்றன. இம்முருகவழிபாடு இடத்திற்கு இடம் கந்தன், சுப்பிரமணியர், வேலாயுதன், முருகமூர்த்தி, முத்துக்குமாரசுவாமி, குமரன், தண்டாயுத பாணி, சண்முகசாமி, ஆறுமுகசாமி, சிவகுருநாத சுவாமி முதலான பெயர்களில் நடைபெற்று வருகிறது. இவற்றுள் கந்தன் வழிபாடே செல்வாக்குப் பெற்றுள்ளது. இன்று இலங்கை யிலுள்ள முருக ஆலயங்களில் மூன்றில் ஒரு பங்கு கந்தன் ஆலயங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் வரலாற் றுப் பழமைவாய்ந்த முருகன் ஆலயங்கள் உள்ள பழனி, திருச்செந்தூர் போன்ற இடங்கள் கந்தமலை என இலக்கியங்களில் அழைக்கப் பட்டாலும் நடைமுறையில் முருகன் ஆலயங்கள் என அழைக்கப்படும் மரபே பெரும்பாலும் காணப்படுகிறது. இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் கந்தன் வழிபாடு சிறப்புப் பெற்றதற்குக் கந்தபுராணமே உதவியிருக்க வேண்டும் எனக் கூறும் பேராசிரியர் வேலுப் பிள்ளை கந்தபுராணம் அருணகிரிநாதர் காலத்திற்கு முன்பாக கி.பி. 14ஆம் நூற்றாண்ட ளவில் காஞ்சியில் கச்சியப்ப சிவாச்சாரியரால் பாடப்பட்டது என்கிறாரர் (1985: 231). கி.பி. 15ஆம் நூற்றாண்டில் ஈழத்து முருக தலங்கள் பற்றிக் கூறும் அருணகிரிநாதரின் திருப்புகளில் கதிர்காமத்துடன் யாழ்ப்பாணமும் குறிப்பிடப் பட்டுள்ளமை அக்காலத்திலேயே கந்தன் ஆலயங்கள் சிறப்புற்றிருந்ததைக் காட்டுகிறது. இதை நிதர்சனமாகக் காட்டுவதில் மேற் கூறப்பட்ட நாணயங்களுக்கு மேலும் முக்கிய பங்குண்டு.

கலாநிதி ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருள் பாலிக்கும் ஆறுமுகப் பெருமானின் அழகிய தோற்றம்


மகா பூர்ணாகுதிக்குரிய பொருட்கள் வீதிவலம் காட்சி


மகா கும்பாபிஷேக பிரதம கும்பங்கள் வீதி வலம் வரும் காட்சி


பிரதான தூபி கும்பங்கள் வீதி வலம் வரும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகப் பெருமான் வீதி வலம் வரும் காட்சி



பிரதம சிவாச்சாரியார் யாகசாலையில்
தீபாராதனை செய்யும் காட்சி



பிரதான தூபியில் சிவாச்சாரியார்
நியாசங்கள் செய்யும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்களில் வேதம், ஆகமம், யாகம்

மூலமந்திரமான ஓம் என்னும் மந்திரத்தை சித்தரித்து நிற்கின்றது வேதாகமம். அது ஈஸ்வரனின் அருளையும், புருசர்களுக்கும் உலகத்திற்கும், உள்ள தொடர்பையும், தொடர் பினால் ஏற்படுகின்ற பாசத்தையும் விடுவிக்கின்ற முறையினையும், பாசத்தை விட்டதனால் மனிதன் (பசு) சர்வேஸ்வரனின் திரு வருளுக்குப் பாத்திரமாகின்றான் என் பதையும் விளக்குகின்றது. மேற்கண்ட கருத்தை விளக்க வந்ததுதான் நான்கு வேதங் களும், அதன் முடிவாக அமைந்த உபநிஷத்துக்களும், அதன் பிறகு வந்த ஆகமங்களும் ஆகும்.

### ஆகமத்தின் பொருள்

காமிகம் முதலிய சிவஞானம் ஊர்த்துவச் சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற் பிறந்தன. என்று காமிகாமம் கூறுகின்றது. வேதங்களான இருக்கு, யசுர் சாமம், அதர்வம் என்பது சிவனது மற்றைய முகங்களில் பிறந்தன.

இந்தச் சிவாகமங்கள் காமிகம் முதலான 28 ஆகமங்களாம்

1. ஆ– என்பது பாசம், க – என்பது பசு, ம – என்பது பதி (உலகம், ஆன்மா, கடவுள்) ஆகவே முப்பொருள் உண்மையை விளக்க வந்ததுதான் ஆகமம் என்று புலப் படுகின்றது.
2. ஆ – என்பது சிவஞானமும், க– என்பது மோட்சமும், ம – என்பது மல நாசமும் ஆகும். ஆன்மாக்களிடத்தில் இருக்கும் மும்மலத்தையும் நாசம் செய்து சிவஞானத்தைத் தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுக்கவல்லது ஆகமமேயாகும். இதனை மணிவாசகர் கூறுகையில் ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாழ்' வாழ்க என்று திருவாசகத்தில் கூறுகின்றார்.

### ஆகமங்கள்

1 காமிகம், 2. யோகசம், 3.சிந்தியம், 4.காரணம், 5. அசித்தம், 6. தீப்தம், 7. சூக்குமம், 8.சகச்சிரம், 9 அம்சுமான், 10 சுப்பிரபேதம், 11.விஜயம், 12. திக்வாசம், 13. சுவாயம்புவம், 14.ஆக்கினேயம், 15. வீரம், 16. ரௌவம், 17. மகுடம், 18. விமலம், 19.சந்திரஞானம், 20. முகவிம்பம், 21 புரோற்கீதம், 22. லளிதம், 23. சித்தம், 24 சந்தானம், 25. சர்வோக்தம், 26. பாரமேசுரம், 27. கிரணம், 28. வாதுளம், முதலியன. மேலும் இதனுள் 207 உபாகமங்களும் உள்ளன.

### ஆகமத்தினுள் இருக்கும் நாற்பாதங்கள்

இவ்வாகமங்கள் மந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தமெனவும் பெயர் பெறுகின்றன. இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் கோடி கிரந்தங்கள் உள்ளன. இவைகள் 1 ஞானபாதம், 2. யோகபாதம், 3. கிரியாபாதம், 4. சரியாபாதம், என்று நான்கு பாதங்களாக அமைந்துள்ளன. 1 பதி, பசு, பாசம் (கடவுள், ஆன்மா, உலகம்) என்னும் முப்பொருளின் உண்மையை ஞானபாதம் விளக்குகின்றது. 2.பிராணயம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தை யோகபாதம் விளக்குகின்றது. 3 மந்திரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம் என்பவைகளையும் விளக்கி, சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரியாபிஷேகம், முதலியவைகளைக் கிரியாபர்தம் விளக்குகின்றது.

4 சமயாசாரங்களையும் அதன் நுட்பங்களையும் தொண்டு செய்கின்ற வழிமுறைகளையும், சரியாபாதம் விளக்குகின்றது. இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் சிவபெருமானது ஒவ்வொரு அவயத்தையும் பொருந்துவது போல அமைந்துள்ளன. ஆகமங் களின் விஷயங்கள் வேதங்களில் நேரிடையாகக் கூறப்படாமல் சுலோகமாகச் சொல்லப்பட்டுள் ளன. மேலும் வேதச்சொற்கள் நுட்பமான சொற்களினாலும், ஆகமங்கள் எளிய சொற்களி னாலும் (விரிவுரை போன்று) அமைந்துள்ளன. வேதவாக்கியங்கள் சுலோக மாதலால் பல பொருளாகக் கொள்ளப்படும். ஆகமம் தெளிந்து உணர்த்தும் விரிவுரையாகப் பொருள் கொள்ளக் கூடியதாகும்.

### வேதாந்தம்

வேதங்களின் முடிவாக அமைந்த உபநிஷத் துக்கள் தான் வேதாந்தமாகும். வேதம் அந்தம் (முடிபு) வேதாந்தம் இந்த வேதாந்தத்திற்கு விளக்கம் அளித்தவர்கள் தாம் ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலியோர். பிறகு இவர்கள் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் செய்யும் போது தங்கள் விளக்கத்திற்கு அத்வைதம் விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று பெயர் சூட்டினர் .

### இருக்கு வேத உபநிக்ஷத்துக்கள்

இந்த இருக்கு வேதம் 21 சாகைகளைக் கொண்டது. 1 ஐத்ரேய, 2 கௌஷீதகீ, 3 நாதவிந்து, 4 ஆத்மப் பிரபோதம், 5 நிருவாண, 6 முத்கலை, 7 அட்சமாளிகை, 8 திரிபுரை, 9 சௌபாக்கியம், 10 வக்விருச்சானை, என்ற பத்து உபநிஷத்துக்கள் கொண்டதாகும்.

### யயுர் வேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது இதனுள் 51 உபநிஷத்துக்கள் உள்ளன. அவையாவன. கடவல்லி, தைத்திரியம், பிரமம், கைவல்யம், சுவேதாச் சுவதரம், கர்ப்பம்.

### யஜுர் வேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது. இதனுள் 51 உபநிஷத்துக்கள் உள்ளன. அவையாவன, 1. கடவல்லி, 2.தைத்திரியம், 3.பிரமம், 4. கைவல்லியம், 5. சுவேதாச்சுவதரம், 6. கர்ப்பம், 7. நாராயணம், 8. அமிர்தநாதம், 10.காலாக்கினிருத்ரம், 11. சுரிகை, 12. சர்வசாரம், 13. சுகரகசியம், 14. தேசோவிந்து, 15. தியாவிந்து, 16.பிரமவித்தியை,1.யோகதத்துவம், 18.தட்சணாமூர்த்தி, 19. கந்தம், 20. சாரீரகம், யோகசிகை, 22. ஏகாச்சரம், 23. அட்சியம், 24.அவதூதம், 25. கரம், 26. உருத்திரவிருதயம், 27. யோககுண்டலினி, 28. பஞ்சப்பிரமம், 29.பிரானாக்கினி, கோத்திரம், 30. வராகம், கலிசந்தரணம், 32. சரசுவதி, 33. ஈசாவாசியம், 34. பிருகதாரணியம், 35. சாபாலம், 36. அம்சம், 37. பரமஹம்சம், 38. சுபாலம், 39. மந்திரிகை, 40. நிராலம்பம், திரிசிகி, 42. மண்டலம், 43. அத்துவயதாரணியம், 44. பைங்கலம், 45. பிட்சு, 46. துரியாதீதம், 47. அத்தியாத்துமம், 48.தாரசரம், 49. யாக்ஞவல்கியம், 50.சாட்டியாயனி, 51. முத்திகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாம வேத உபநிஷத்துக்கள்

இந்த வேதம் 1000 சாகைகளைக் கொண்டது. இதனுள் 16 உப நிஷத்துக்கள் உள்ளன. 1.கேணம், 2. சாந்தோக்கியம், 3. ஆருணி, 4.மைத்திராயிணி, 5.மைத்திரேயி, 6.வச்சிர சூசிகம், 7.யோகசூடாமணி, 8.வாசுதேவம், 9.மகத்து, 10. சந்நியாசம், 11.அவ்வியக்தம், 12.குண்டிகை, 13. சாவித்திரி, உருத்திராக்க சாபாலம், 15. தரிசனம், 16. சாபாலம் முதலியன ஆகும்.

### அதர்வணவேத உபநிஷத் துக்கள்

இவ்வேதம் 50 சாகைகளைக் கொண்டது. இதனுள் 31 உபநிஷத்துக்கள் உள்ளன. 1. பிரச்சினம், 2. முண்டகம், 3. மாண்டுக்கியம், 4. அதர்வசிரசு, 5. அதர்வசிகை, 6. பிருகச்சாபலம், 7. நிருசிம்பதாபினி, 8. நாரதபரி, 9.விராசகம், 10.சீகை, 11. சரபம், 12. திரிபாத்வீயமகா நாராயணம், 13. இராமரகசியம், 14. இராம தாபினி, 15. சாண்டில்யம், 16. பரமஹம்சபரி விசாசகம், 17. அன்னபூரனை, 18. சூரியன், 19.ஆத்மம், 20. பாசுபதம், 21. பரப்பிரம்மம், 22.திரிபுராதபினி, 23. தேவி, 24. பாவனை, 25.பஸ்மசாபாலம், 26. கணபதி, 27.கோபால தபனம், 28. கிருஷ்ணம், 29. ஹயக்கிரீவம், 30.தத்தாத்ரேயம், 31. காருடம் முதலியன ஆகும்.

வேதத்தின்ஞானகாண்டமும் ஆகமத்தின் ஞானகாண்டமும் முப்பொருள் உண்மையை விளக்க வந்தவையாகும். சனகாதி முனிவர்கள் கூறுகையில் சித்தாந்தத்தின் கருத்துக்களை வேதமும், ஆகமங்களும் தன்னகத்தே நிறுத்தியும் பல்வேறு வழிகளைக் காட்டியும் உண்மைப் பொருளை உள்ளவாறு வேதாகமங்கள் விளக்குகின்றன என்று தெளிவு படுத்தியுள்ளனர். இவ்வாறான வேதங்கள் , ஆகமங்கள்; ஆகமங்களில் சொல்லப்பட்டவாறு அமைந்த கோயில்களில், விளங்கும் தெய்வத் திருமேனிகளுக்கு உரிய யாகங்கள் யாவும் இன்றைக்கும் திருக்கோயில்களில் நிகழ்த்தப் படுகின்றன. யாகசாலைகள், யாக மந்திரங்கள், யாக திரவியங்கள், அபிஷேகங்கள், உபசாரங்கள் யாவும் பல நிலைகளில் விரிவாகவும், சுருக்கமாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றதை யாவரும் அறிவர்.

யக்ஞம், யாகம், ஹோமம், வேள்வி, ஓமம் என்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும். கடமை என்ற சொல்லிற்கு நம் முன்னோர்கள் வகுத்த சொற்கள் ஆகும். இறைவனுக்கு யாகம் செய்து வழிபடுவதும் ஒரு நல்ல கடமை ஆகும். யாகத்தின் மூலமாக முழுமையான பலனை அடையலாம். யாகத்தின் ரூபமாக சிவன் விளங்குகின்றார். என்பதனை யக்ஞ ரூபய நம: என்ற பதம் விளக்குகின்றது.

### ஐவகை யாகம்

1. சிவனை எண்ணுதல், சிவபூசை செய்தல் கர்மயாகம் ஆகும். 2. உடம்பை வளர்க்காது விரதம் இருந்து ஐம்புலனை அடக்குதல் தவயாகமாகும்.3.சிவமூலமந்திரம் (பஞ்சாட்சரம்) ரூத்திரம் முதலான மந்திரங்களை ஜபித்தல், ஜபயாகம், 4.சதாகாலம் சதாசிவனை தியானித்தல் தியான யாகம் ஆகும். தியானதீதால் இறைவனது அருளால் ஞானத்தைப் பெற்று அந்த ஞானாதீதத்தில் திளைத்திருப்பது ஞானயாகம் என்று இவை ஐவகை யாகங்களாகும்.

### மற்றைய யாகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி முதலான அனைத்துத் தெய்வங்களுக்கும் யாகாதி விசேஷங்கள் உண்டு. இவை தவிர ஆன்மாக்களின் இஷ்ட காம்யங்களை பூர்த்தி செய்யும் யாகங்களும் உண்டு. சிறப்பாக ஏககாலத்தில் பிரதான மூர்த்தி யோடு இந்திராதி முதலான அனைத்து விசேஷ மூர்த்தி களுக்கு திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் என்ற முறையில் விஷேச யாகங்கள் பல காலங் களோடு அனுசரித்து செய்யப்படு வதாகும். இந்த யாகங்கள் சிறப்பினுள் சிறப்பாகும்.

யாகசாலா பதங்கள்

| | | |
|---|---|---|
| குக பதம் | – | 1 |
| சத்தி பதம் | – | 8 |
| நாத பதம் | – | 18 |
| பிந்து பதம் | – | 24 |
| சதாசிவ பதம் | – | 32 |
| மகேசுவர பதம் | – | 40 |
| சுத்தவித்யாபதம் | – | 48 |
| கலா பதம் | – | 56 |
| தத்துவ பதம் | – | 64 |
| புவன பதம் | – | 72 |
| மந்த்ர பதம் | – | 80 |
| பத பதம் | – | 88 |
| வர்ண பதம் | – | 96 |
| ருத்ர பதம் | – | 104 |
| விஷ்ணு பதம் | – | 112 |
| பிரம்ம பதம் | – | 120 |
| சுத்தமாயா பதம் | – | 128 |
| மிச்ரமாயா பதம் | – | 136 |
| கலா பதம் | – | 144 |
| காலம் பதம் | – | 152 |
| நியதி பதம் | – | 160 |
| வித்தியா பதம் | – | 168 |
| ராக பதம் | – | 176 |
| வேத பதம் | – | 184 |
| கண பதம் | – | 192 |
| சித்த பதம் | – | 200 |
| ஆர்ஷ பதம் | – | 208 |
| யஷ பதம் | – | 216 |
| கந்தர்வ பதம் | – | 224 |
| சுர பதம் | – | 232 |
| ரஷா பதம் | – | 240 |
| மாநவ பதம் | – | 248 |

யாகத்திற்கு தேவையான சமித்துக்கள்

1. வெள்ளெருக்கு
2. பலாசு
3. கருங்காலி
4. நாயுருவி
5. அரசு
6. மா
7. வில்வம்
8. வன்னி
9. அத்தி
10. ஆல்
11. பலா
12. புன்னை
13. மகிழ்
14. மூங்கில் (முள் நீக்கியது)
15. மாதுளை
16. கிளுவை
17. அறுகு
18. சந்தனக்கட்டை
19. வெள்ளெருக்கு
20. வெட்டிவேர்
21. விளாமிச்சவேர்
22. செஞ்சந்தனக்கட்டை
23. அகில்
24. தேவதாரு
25. பாதிரி
26. செண்பகம்
27. அசோகம்
28. குங்கிலியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. நெல்லி

30. மாவிற்கு 1 அடி நீளம் கைப் பருமன்

31. அரசு 1 அடி நீளம் கைப்பருமன்

(குறிப்பு : 1 முதல் 19 வரை சமித்துக்கள் 9 அங்குல நீளம் விரல் பருமனாகவும் 20 முதல் 29 முடிய 6 அங்குல நீள விரல் பருமனாகவும் இருக்க வேண்டும்.

நவயாக குண்டங்கள்

1. சதுர குண்டம்
2. யோனி குண்டம்
3. அர்த்த சந்திர குண்டம்
4. திரிகோண குண்டம்
5. ஷட்கோண குண்டம்
6. பத்ம குண்டம்
7. விருத்த குண்டம்
8. அஷ்டகோண குண்டம்
9. பிரதானமான விருத்த குண்டம்

குடத்திற்கு சுற்றப்படும் நூல்

குடத்தில் சுற்றப்பட்டுள்ள நூல் மூன்று உள்ளதாக இருக்க வேண்டும் இந்த சுற்றுக்கள் உத்தமம், மத்திமம், அதமம் எனப்படும்.

1. உத்தமம் : நூல் சுற்றப்பட்டுள்ள இடைவெளி எள் அளவு இருப்பது.
2. மத்திமம் : நெல் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.
3. அதமம் : யானையின் கண் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.

அஷ்டபந்தனத்திற்கு தேவையான திரவியங்கள்

1. சுக்கான்கல்
2. குங்கிலியம்
3. கொம்பரக்கு
4. தேன்மெழுகு
5. நற்காவி
6. செம்பஞ்சு
7. சாதிலிங்கம்
8. எருமை வெண்ணெய்

கணபதிக்கு ஹோமத்திற்கு திரவியங்கள்

அறுகு, மோதகம், அவல், நெற்பொரி, சத்துமா, கருப்பங்கழி, தேங்காய்க்கீற்று, சுத்தமான எள், வாழைப்பழம் இவைகளில் தேன், நெய், பால், வெல்லம் இவைகளைச் சேர்த்து ஹோமம் செய்யவேண்டும்.

கடஸ்தாபனத்திற்கு தேவையான தீர்த்தங்கள்

திருக்குடங்களில் சேர்க்கப்படும் தீர்த்தங்கள் – கங்கை, யமுனை, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சரஸ்வதி, குமரி, பயோஷ்ணி, சரயு, மற்றும் அவ்வத் தலங்களில் பிரதானமாக விளங்கும் தீர்த்தத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வாசனைப் பொருட்கள்

கொட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்

எட்டுவகைத் தானியங்கள்

நெல், கம்பு, வரகு, தினை, சாமை, சோளம் துவரை, மூங்கில்நெல்

யாகசாலையில் பஞ்சகுண்ட விபரம்

1. கிழக்கில் – அஹவனியாக்கினி – சதுர குண்டம்
2. தெற்கில் – தஷினாக்கினி – அர்த்தச்சந்திர குண்டம்
3. மேற்கில் – கார்ஹபத்யம் – விருத்த குண்டம்
4. வடக்கில் – கேவலாக்கினி – பத்ம குண்டம்
5. வடகிழக்கில் – சிவாக்கினி – விருத்த குண்டம்

யாகசாலையில் நவகுண்டம் விபரம்

1. கிழக்கு – அஹவனியாக்னி – சதுரகுண்டம்
2. தென்கிழக்கு விருத்தாக்கினி – யோனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டம்

3. தெற்கு – தஷிணாக்கினி – அர்த்தசந்திர குண்டம்

4. தென்மேற்கு– யௌவனாக்கினி – திரிகோண குண்டம்

5. மேற்கு – கார்ஹபத்யாக்கினி – விருத்த குண்டம்

6. வடமேற்கு – பாலாக்னி – அறுகோண குண்டம்

7. வடக்கு – கேவலாக்னி – பத்ம குண்டம்

8. வடகிழக்கு – சாமான்யாக்னி – எண்கோண குண்டம்

9. ஈசான்யம் – சிவாக்னி – விருத்தகுண்டம்.

கலசாபிஷேக எண்ணிக்கை (கும்பங்கள்)

1. நவகலச ஸ்நபனம்
2. சப்த தச கலசஸ்நபனம்
3. பஞ்சவிம்சதி கலச ஸ்நபனம்
4. ஏகோநபஞ்சாத் கலச ஸ்நபனம்
5. ஏகாசீதி கலச ஸ்நபனம்
6. நவோத்ரசத கலச ஸ்நபனம்
7. நவோத்ர சதுர்வித கலச ஸ்நபனம்
8. நவோத்ர சகஸ்ர சகல ஸ்நபனம்
9. சகஸ்ர சங்க மகா ஸ்நபனம்

உதக திரவியங்கள்

1. ரத்தினோதகம்
2. லோகோதகம்
3. தாதூதகம்
4. பீஜோதகம்
5. சுத்தோதகம்
6. மிருதூதகம்
7. மார்ஜன உதகம்
8. பத்திரோதகம்
9. பரிமார்ஜன உதகம்
10. புஷ்போதகம்
11. மான்யோதகம்
12. அஸ்திரோதகம்

ஆசனம்

1. பிருதுவித்துவம் – கூர்மாசனமும்
2. உபவேதிகை – அனந்தாசனமும்
3. நெல் – யோகாசனமும்
4. அரிசி – பதுமாசனமும்
5. எள் – விமலாசனமும்
6. நெல் மற்றும் மலர் – சத்தியாசனமுமாகப் பிருதுவி முதற் குடிலையீறாகிய 36 தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன

மந்திர வகைகள் (பொது)

1. மூலமந்திரம்
2. பீஜ மந்திரம்
3. பஞ்ச மந்திரம்
4. சடங்க மந்திரம்
5. சம்ஹிதா மந்திரம்
6. பத மந்திரம்
7. மாலா மந்திரம்
8. சம்மேளன மந்திரம்
9. காயத்திரி மந்திரம்
10. அபசா மந்திரம்
11. பிராண பிரதிட்டா மந்திரம்
12. மாத்ருகா மந்திரம்
13. மோன மந்திரம்
14. சாத்ய மந்திரம்
15. நாம மந்திரம்
16. பிரயோக மந்திரம்
17. அத்திர மந்திரம்
18. விஞசன மந்திரம்
19. பசிநீக்கு மந்திரம்
20. விண்ணியக்க மந்திரம்
21. வேற்றுரு மந்திரம்
22. துயில் மந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. திரஸ்கரிணி மந்திரம்
24. சட்கர் மந்திரம்
25. அஷ்டகர்ம மந்திரம்
26. பஞ்சகிருத்திய மந்திரம்
27. அகமருடண மந்திரம்
28. ஏகாஷர மந்திரம்
29. திரியஷரி மந்திரம்
30. பஞ்சாஷர மந்திரம்
31. சடாஷர மந்திரம்
32. அஷ்டாஷர மந்திரம்
33. நவாக்கரி மந்திரம்
34. தசாஷர மந்திரம்
35. துவாதச நாமமந்திரம்

சப்தகோடி(முடிவு) மகா மந்திரங்களின் விளக்கம்

1. நம

வணக்கம், தம்பனம் – நிலை நிறுத்தல் இறைத் திருவருள் தன்னில் நிலைக்க வேண்டல். இது மூல மந்திரங் களின் முடிவில் வைக்கப்படும்.

2. ஸ்வாஹா

இது பெரும்பாலும் ஓமித்தலில் பயன் படுகின்றது. ஒரு மந்திரத்தின் உபாசனா தேவதைக்கு ஓமத்தில் அளிக்கப்படும் பொருள் கொண்டு அத் தேவதை திருப்தியுற வேண்டும் என வேண்டுதல் ஆகும்.

3. வஷட்

இதன் மூலம் நம விழைவு எதையும் தன் வயப்படுதல் (வசியம்) என்பது உணர்த்தப் படுகிறது.

4. வௌஷட்

இது நமது விருப்பம் எப்பொருளையும் தன் அருகாமையில் ஈர்த்துக் கொள்ளல் (ஆகர்ஷணம்) ஆகும்.

5. ஸ்வதா

இது எரியிலிடாது தேவர்கட்கும், இருடிகட்கும், முனிவர்கட்கும், பிதிரர்கட்கும், கணங்கட்கும், உலகிலுள்ள ஆன்ம கோடிகட்கும் பொருள்கள் அவ்வப் பிரிவினர்க்கு மகிழ்வு ( துஷ்டி) அளிக்க வேண்டுதலாம்.

6. க்ஷூம்

இது மந்திரஃஅணுஸ்திர தேவதைகள் தன் பகைவரை அச்சுறுத்தி அவர்களைத் தனக்குப் பணிய வைப்பதை வேண்டுவதாம்.

7. பட்

ஏவிய காரியத்தை உடன் முடிக்க வேண்டுதல் (விஜர்ஜனம்) இதன் குறிகோள் ஆகும்.

8. ஹை ஹை

இதன் பயன் தன் பகைவன் முற்றிலும் செயலற்ற நிலை (மரணம்) பெற உந்துவதாகும். இவ்வாறு இக்கோடி மந்திரங்களை தனித்தனியாகவும் இரண்டு அல்லது மூன்றினைக் கூட்டியும் பயன்படுத்துவது மந்திர சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விசேஷ யாக திரவியங்களின் பலன்கள்

| | | |
|---|---|---|
| பலாசு | – | ப்ரஜாவிருத்தி |
| கருங்காலி | – | விஜாயம் |
| அரசு | – | தனாதிக்யம் |
| இத்தி (இச்சில்) | – | சௌக்கியம் |
| அத்தி | – | போகம் |
| சந்தனம் | – | சாந்தி |
| ஆல் | – | ஆரோக்கியம் |
| வன்னி | – | வசியம் |
| வில்வம் | – | இஷ்டசித்தி |
| வெள்ளெருக்கு | – | ரோகநாசம் |
| நாயுருவி | – | விஷநாசம் |
| மா | – | ஐஸ்வர்ஜம் |
| பாதிரி | – | சத்ருக்ஷயம் |
| மூங்கில் | – | சாந்தி |
| பலா | – | கீர்த்தி |
| அறுகம்புல் | – | தரித்திரநாசம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தர்ப்பை | – | ஞானசித்தி |
| நெய் | – | ரோகநாசம் |
| ஹவிஸ்(சுத்தான்னம்) | – | பவிருத்தி |
| பாலன்னம் | – | ஆயுள் |
| எள்ளன்னம் | – | பாபநாசம் |
| மிளகன்னம் | – | சத்துருநாசம் |
| தயிரன்னம் | – | ஆரோக்கியம் |
| பருப்பன்னம் | – | வித்யாலாபம் |
| தேனன்னம் | – | சந்தோஷம் |
| கடுகு அன்னம் | – | பயநாசம் |
| தேங்காய்சாதம் | – | புஷ்டி |
| எலுமிச்சைசாதம் | – | வசியம் |
| பாயாசான்னம் | – | திருப்தி |
| உளுந்தன்னம் | – | க்ரோதசமனம் |
| வெண்கடுகு | – | க்கிரோதசமனம் |
| உளுந்து | – | பசுவிருத்தி |
| நெல்பொரி | – | சாயுஜ்யம் |
| சத்துமாவு (ரிபுநாகம்) | – | கடன் – நீக்கம் |
| பால் | – | சௌபாக்கியம் |
| தயிர் | – | சுகம் |
| வெல்லம் | – | செல்வப்பேறு |
| வாழைப்பழம் | – | துக்கநாசம் |
| மாம்பழம் | – | ரோகநிவர்த்தி |
| பலாப்பழம் | – | சுபம் |
| விளாம்பழம் | – | புத்திரலாபம் |
| மாதுழம்பழம் | – | புத்திரலாபம் |
| பேரிச்சம்பழம் | – | வலிமை |
| நாரத்தம்பழம் | – | சோகநாசம் |
| எலுமிச்சம்பழம் | – | வசியம் |
| திராட்சைப்பழம் | – | இஷ்டசித்தி |
| தேங்காய் | – | சர்வானுகூலம் |
| பயறு | – | ஆயுள் |
| கொண்டக்கடலை | – | சிரேயசு |
| கோதுமை | – | ஸாதிகாரம் |
| குளச்சல்நெய் | – | வீர்யம் |
| வவைநெல் | – | இராஜவசியம் |

| | | |
|---|---|---|
| மூங்கில் அரிசி | – | தேக காந்தி |
| கொள்ளு | – | தேகபலம் |
| கருமொச்சை | – | வம்சவிருத்தி |
| துவரை | – | வீர்யம் |
| தினை | – | இஷ்டசித்தி |
| வெள்ளை எள் | – | சோகநாசம் |
| அவரை | – | பந்துலாபம் |
| நெல் | – | சுபிட்சம் |
| பெற்சம்பா நெல் | | |
| செம்பாளைநெல் | | |
| வெள்ளை சம்பா நெல் | | |
| சிவப்பு சம்பா நெல் | | |
| புனுகு சம்பா நெல் | | |
| செம்பவள நெல் | | |
| பன்றி நெல் | | |
| கூர் நெல் | | |
| முத்துசம்பா நெல் | | |
| சாமை | – | மழை |
| வரகு | – | மலநாசம் |
| கரும்பு | – | பிராணிசுகம் |
| வெள்ளரிக்காய் | – | விருத்தி |
| தேன் | – | சந்தோஷம் |
| சர்க்கரை | – | சத்ருநாசம் |
| அவல் | – | இஷ்டசித்தி |
| லட்டுகம்(இட்லி) | – | சுபிட்சம் |
| மாஷாபூகம் | – | யட்சு |
| அப்பம் | – | சந்தோஷம் |
| நீர்க்கொளுக்கட்டை | – | இஷ்டசித்தி |
| திலாபூபம் (எள்கொழுக்கட்டை) | – | பாபநாசம் |
| திலகண்டம் (எள் உருண்டை) | – | ஆயுள் |
| மோதகம் | – | ஆனந்தம் |
| அகில் | – | வலிமை |
| தேவதாரு | – | சுகம் |
| வெண்மொச்சை | – | சௌந்தர்யம் |
| கிழங்குகள் | – | பூமிலாபம் |
| வெட்டிவேர் | – | லாபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலாமிச்சைவேர் – மோகம்
மருக்கொழுந்து – விருத்தி
குங்குலியம் – சாதுர்யம்
சிற்றேனம் – ப்ரீதி
கிராம்பு – பயநாசம்
ஜாதிக்காய் – விரோதசமனம்
ஜாதிபத்திரி – அனுகூலம்
பன்னீர் – பிரியம்
குங்குமப்பூ – ப்ரீதி
பச்சைக் கற்பூரம் –ப்ரீதி
சந்தனக்கட்டை – ப்ரீதி
கஸ்தூரி – ப்ரீதி
புனுகு – ப்ரீதி
கோரோஜனை – ப்ரீதி
செஞ்சந்தனம் – ப்ரீதி
தாமரை முதலான
புஷ்பங்கள் – செல்வம்
பத்திரங்கள்
(தளிர்கள்) – ஆரோக்கியம்
வில்வம் – பாபநாசம்
நீலோத்பலம் – அருள்
வாசனைத் திரவியங்களுடன் கூடிய
தாம்பூலம் – இஷ்டசித்தி

அபிஷேகப் பலன்

கந்த தைலம் – இன்பம்
மாப்பொடி – கடன் தீரும்
மஞ்சட்பொடி – அரசுவசீயம்
செல்லிப் பருப்புப் பொடி – பிணிநீக்கம்
பஞ்சகவ்வியம் – சுத்தம், பாபநீக்கம்
பஞ்சாமிர்தம் – முத்தி
பழ பஞ்சாமிர்தம் – முத்தி
பால் – ஆயுள்விருத்தி

தயிர் – ப்ரஜா விருத்தி (குழந்தைப்பேறு)
நெய், இளவெந்நீர் – முத்தி
தேன் – சுகம், சங்கீத குரல்வளம்
இளநீர் – இராஜபோகம்
சர்க்கரைச் சாறு – சத்ரு நாசம்
கரும்புச் சாறு – ஆரோக்கியம்
தமரத்தம் பழச்சாறு – மகிழ்ச்சி
எலுமிச்சம்பழச் சாறு – பயம் போக்கும்
நாரத்தம்பழச் சாறு – மந்திர சித்தி
கொழஞ்சிப்பழச் சாறு– சோகம் போக்கும்
மாதுளம்பழச் சாறு – பகைமை அகற்றல்
அன்னாபிஷேகம் – விளைநிலங்கள் நலந்தரும்
வில்வோதகம் (வில்வம் கலந்த நீர்) – மகப்பேறு
குசோதகம் (தருப்பை கலந்த நீர்) – ஞானம்
பன்னீர் – குளிர்ச்சி
வீபூதி – சகல ஐஸ்வரியம்
ஸ்வர்ணோதகம் – சகல சௌபாக்கியம்
ரத்னோதகம் (ரத்னம் கலந்த நீர்) – அரசாட்சி பெருஞ்செல்வம்
கோரோசனை –சகல ஆரோக்கியம் மிக்க புகழ்
சகஸ்ரதாரை –சகல ஆரோக்கியம் மிக்க புகழ்
ஜவ்வாது – சகல ஆரோக்கியம் மிக்க புகழ்
புனுகு – சகல ஆரோக்கியம் மிக்க புகழ்
குங்குமப்பூ – சகல ஆரோக்கியம் மிக்க புகழ்
சங்காபிஷேகம் – சகல பாபாரிஷ்டம்
ஸ்நபன கும்பாபிஷேகம் – சித்த சுத்தியடைந்து சிவதரிசனம் ஒவ்வொரு அபிஷேகத்தின் பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்ய பரம் சாந்தம் உண்டாகும்.

வ. உமாசுதசர்மா,
மயிலணி, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாணிக்கம்

## எமது ஆலயப் பிரதமகுரு அமரர்.சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் வரதராஜேஸ்வரக்குருக்கள்.

அண்மைக் காலத்தில் நம் கண் முன்பாக வாழ்ந்து முருகபதம் எய்தியவர். மயிலணி சர்வேஸ்வரக்குருக்கள் வரத ராஜேஸ்வரக் குருக்கள் அவர்கள். குரு பாரம்பரியத்தின் கொடியாக, மரபுவழித் தொடர்பின் பாலமாகத் திகழ்ந்தவர் அவர். மயிலணிக்கே யுரிய தனித்துவமான, பழமையான, நெறிமுறைகளை வழுவாது பாது காத்து, மயிலணிக் கந்தசுவாமி கோவிலின் பிரதமகுருவாக விளங்கியவர்.

மயிலணிக் கந்தசுவாமி கோவிலில் குருத்துவம் செய்து வந்த கார்த்திகேயக் குருக்கள், ஸ்ரீநிவாஸக் குருக்கள், சிவசுப்பிரமணியக் குருக்கள், சர்வேஸ்வரக் குருக்கள் பரம்பரையில் நெறிமுறை தவறாது, தந்தையார் காட்டிய சீரிய முறைகளைப் பின்பற்றி, நித்திய நைமித்தியக் கிரியைகளைப் பக்திபூர்வமாக நடாத்தி வந்தவர் எமது குருக்கள்.

சிவாச்சாரியார் ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்ததுடன், அதற்கான முன்மாதிரியாகவும் விளங்கினார். மேனியிலே துலங்கும் வெண்ணீற்றுப் பூச்சும் சந்தனத் திலகமும் வெண்கலக் குரலில் வேதபாராயணமும் ஸ்தோத்திர கானங்களும் ஆகம நெறி பற்றிய நிறைவான ஆராய்ச்சிகளும் அவற்றின் வழியே நிகழ்த்துகின்ற கிரியாமுறைகளும் புராண இதிகாசங்களில் கொண்டிருந்த நல்லறிவும் ஜோதிட வல்லமையும் இன்சொல்லும் கோபமில்லாத் தன்மையும் வரதராஜேஸ்வரக் குருக்களிடம் ஒருங்கே குவிந்திருந்த தனிச் சிறப்புகளாகும்.

ஜோதிடத்தில் நிபுணத்துவங் கொண்ட எமது குருக்கள் அவர்கள் முகூர்த்தங் கணித்து, தோஷங்கள் விலக்கி, சுபநேரங்கள் கணித்துக் கிரியைகளை நிறைவேற்றுவதில் மிகப்பெரும் வல்லமை கொண்டிருந்தார்.

தமது தந்தையாரிடமும் தமது குருநாதர் களிடமும் தமது தேடல்கள் மூலமும் இயல்பாகவே கைவரப் பெற்றிருந்த ஞானத்தி னாலும் வேத சிவாகம அறிவு நிரம்பப் பெற்றுத் தலை சிறந்த சிவாச்சார்யப் பெருந்தகையாகத் திகழ்ந்தமையால் இலங்கையின் பலபகுதி களிலும், குறிப்பாக யாழ் மண்ணில் அருளாட்சி பொழிந்து கொண்டிருக்கின்ற அனேகமான ஆலயங்களில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக மஹோற்சவங்கள், சங்காபிஷேகங்கள் முதலிய பல கிரியைகளையும் முன்னின்று நிகழ்த்தியவர். வைதிகக் கிரியைகளை மந்திர சுத்தியுடனும் கிரியா சுத்தியுடனும் நிகழ்த்துவித்ததுடன் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சந்தேகங்களுக்கான விளக்கங்களையும் தெரிவித்து, சிறந்ததொரு வழிகாட்டியாக விளங்கினார். திருமணம், உபநயனம், சீமந்தம் போன்றவற்றையும் முறைப்படி நடாத்துவிப்பதால் ஊர் மக்க டையே மட்டுமன்றி, அந்தணர்களி டையேயும் சிறந்த வரவேற்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார்.

தமது குல தெய்வமாகிய மயிலணி முருகனிடத்து மிகுந்த அபிமானம் பூண்டிருந்தார். நித்திய நைமித்திய கிரியைகளை மனப் பக்குவத்துடனும் ஆசார சுத்தியு டனும் நெறிமுறை தவறாது ஆற்றி வந்தமையால் முருகனடியார்களின் அளவற்ற மதிப்புக்கும் விசுவா சத்திற்கும் ஆளாகியிருந்தார்.

முருகப் பெருமானின் ஆலயத்தை முருகனடியவர்களின் ஒத்துழைப்புடன் புதுப் பொலிவு துலங்க, ஆகம விதிப்படி அமைத்து மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற பெருவிருப்புடன், பாலஸ்தாபனம் செய்து, திருப்பணி வேலைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வந்தவேளையில் திடீரென அவர் எமை விட்டுப் பிரிந்தமை எமது ஆலயத்துக்கு நிவர்த்தி செய்ய முடியாத பேரிழப்பாகி விட்டது.

எமது குருக்கள் அவர்கள் காட்டிய அறநெறியில் எமது கடமைகளைச் சிரமேற் கொண்டு செய்வதே அவருக்கு நாம் மேற்கொள்கின்ற அஞ்சலியாகும் எனத் தெரிவித்து அவரின் நிர்மலமான புனித ஆத்மா கந்தக் கடவுளின் கருணானந்தப் பேறடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருப்பணிச் சபையினர்.

## வைகாசி விசாகம்

இது முருகப் பெருமான் வழிபாட்டுக்கு உகந்த தினம். சிவனாரின் ஐம்பொறிகளிலிருந்து ஐந்து ஒளிப்பிளம்புகளும் மனதிலிருந்து மற்றொரு ஒளிப்பிளம்புமாக ஆறு ஒளிப் பிளம்புகள் தோன்றி கங்கை மூலம் சரவண காட்டில் உள்ள சரவணப் பொய்கையில் வீழ்ந்தன. ஒளிப்பிளம்புகள் ஆறு தெய்வக் குழந்தைகளாகி கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு பின் ஆறு குழந்தைகளும் ஒன்றாகி சண்முகராகிய தினமே வைகாசி விசாகம் ஆகும். இத் தினத்தில் விரதம் அனுட்டித்து முருகனுக்கு உகந்த கடம்ப மலரால் அர்ச்சித்து வழிபாடு செய்தால், திருமணம், குழந்தைப் பேறு பாக்கியம் கிட்டும். தீராத பிணிகள் தீரும்.

◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈◈

## ஐப்பசி வெள்ளி

ஒவ்வொரு மாதத்திலும் வரும் வெள்ளிக் கிழமைகளிலும் மேலானது ஐப்பசி வெள்ளி. முருகனை நினைத்துப் பூசை வழிபாடுகள் செய்வதனால் செல்வம் நீண்ட. ஆயுள் .ஆரோக்கியம் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலணிக் கந்தசுவாமி கோவில்
# திருப்பணிச் சபை

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | :- | (1) சிவஸ்ரீ ச.சண்முகானந்தக்குருக்கள் |
| | | (2) திருமதி.மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் |
| தலைவர் | :- | திரு.ம.சத்தியபாலன் |
| உபதலைவர்கள் | :- | (1) பிரம்மஸ்ரீ.ச.பிரணதார்த்திஹரசர்மா |
| | | (2) திரு.மா.இராமலிங்கம் |
| செயலாளர் | :- | திரு.தி.சிவகுமார் |
| உபசெயலாளர் | :- | திரு.து.ஜெயஆனந்தராசா |
| பொருளாளர் | :- | பிரம்மஸ்ரீ. கா.ஸ்ரீநிவாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | :- | 1. திரு.சு.துரைசிங்கம் |
| | | 2. திரு.பொ.செல்வரத்தினம் |
| | | 3. திரு.அ.கணநாதன் |
| | | 4. திரு.அ.சுந்தரலிங்கம் |
| | | 5. திரு.ச.கந்தசாமி |
| | | 6. திருமதி.புஸ்பமலர் சந்திரசேகரம் |
| | | 7. திரு.கு.வரதராஜா |
| | | 8. திரு.சி.மகேசன் |
| | | 9. திரு.வே.தம்பிரத்தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிச் சபையினரின் குறிப்பு

எமது காலப்பகுதிக்கு முன் தனி அன்பர்களினால் உபயமாகச் செய்து முடிக்கப்பட்ட திருப்பணி வேலைகளின் விபரங்களை அவற்றுடன் தொடர்புடைய குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து பெறப்பட்டு முருகன் அடியார்களின் தகவலுக்காக வெளியிடப்படும் அதே நேரம் 24.01.2004க்கு முற்பட்ட காலப் பகுதியில் செய்து முடிக்கப்பட்ட இதர திருப்பணி வேலைகளின் சரியான விபரங்கள் அன்பளிப்புக்கள் செலவீனங்கள் எமக்குக் கிடைக்கப் பெறாமையால் வெளியிட முடியாத நிலையில் உள்ளோம் என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. பிள்ளையார் மண்டப வேலைகள்

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் குடும்பத்தவர்கள் – அன்பளிப்பு | 275000.00 |
| செலவீனங்கள் | |
| 1.1. கட்டிட அமைப்பு வேலைகள் | 138600.00 |
| 1.2. கூரைவேலைகள் | 123550.00 |
| 1.3. பொதுச் செலவீனம் | 12850.00 |
| | 275000.00 |

2. மஹாவிஷ்ணு கோயில் மண்டப வேலைகள்

அன்பளிப்பு.

| | |
|---|---|
| திரு.அ.சிவயோகநாதன் குடும்பத்தவர்கள்<br>திரு.அ.வரதராசா குடும்பத்தவர்கள்<br>திரு.மா.தேவராசா குடும்பத்தவர்கள்<br>திருமதி.குணதேவி தம்பிராசா<br>திருமதி. அம்பிகா வாமதேவன் | 200000/= |
| செலவீனங்கள் | |
| மஹாவிஷ்ணு கோயில் மண்டபம்<br>முன்மண்டபக் கூரை வேலைகள் | 200000/= |

3. வசந்த மண்டபம் பண்டிகை வேலைகள்

அன்பளிப்பு

| | |
|---|---|
| 1. திரு.குழந்தைவேலு குடும்பம்<br>2. திரு.முத்துவடிவேலு குடும்பம் | 223000/= |
| செலவீனங்கள் | |
| 1. கட்டிட அமைப்பு | 100000.00 |
| 2. சிற்ப வேலைகள் | 43000.00 |
| 3. கட்டிட அமைப்பாளர் கூலி | 80000.00 |
| | 223000.00 |

திருப்பணிச்சபை நிர்வாகத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணி வேலைகள் குறித்து அன்பளிப்புச் செய்த

# முருகன் அடியார்கள்

1. பிள்ளையார் :- பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் குடும்பத்தினர்
2. சிவன் :- திருமதி. திலகவதி கனகசபாபதி, திரு.பொ.செல்வரத்தினம் குடும்பம்
3. அம்மன் :- திரு.தம்பையா திருநாவுக்கரசு குடும்பம்
4. ஆதிமூலம் :- வைத்திய கலாநிதி. சீ.இராமநாதன் குடும்பம்
5. ஆறுமுகசுவாமி :- திருமதி.சரஸ்வதி முருகனேசன், திருப்பணிச் சபை
6. மஹாவிஷ்ணு கோவில் :- திரு.அ.சிவயோகநாதன் குடும்பம், திரு.அ.வரதராசா குடும்பம்
7. மஹாலஷ்மி கோவில் :- திரு.சி.சுந்தரமூர்த்தி குடும்பம்
8. சனீஸ்வரன் :- திருமதி. சீதாலக்குமி முருகசோதிராசா, திரு.து.சிவகுமார்.
9. சண்டேஸ்வரர் :- செல்வி.இராஜராஜேஸ்வரி இராமநாதன், திரு.சி.நன்னித்தம்பி குடும்பம்
10. வைரவர் கோவில் :- திரு.சங்கரப்பிள்ளை குடும்பம், திருப்பணிச்சபை
11. நவக்கிரகம் :- திரு.மாரிமுத்து சிங்கராசா குடும்பம்
12. மயூரம், பலிபீடம் :- திரு.க.கதிர்காமநாதன் குடும்பம், திரு.ஆ.விஸ்வலிங்கம் குடும்பம்,
13. வசந்த மண்டபம் :- திருமதி.ருக்மணி சுப்பிரமணியம், திருப்பணிச் சபை
    (வர்ணம் + நிலவேலை)
14. மஹாமண்டபம் :- திரு.ம.சத்தியபாலன், திருப்பணிச் சபை
    (வண்ணம் + நில வேலை) திருமதி.இந்திரா செல்வராசா, திரு.செ.மஹாதேவன்
15. தர்சன மண்டபம் :- திரு.வை.மு.கிரிதரன், திருப்பணிச் சபை
    (வர்ணம் + நில வேலை)
16. கோபுரம் (வர்ணம்) :- திரு.பொ.அனுரா குடும்பம்
17. வெளி மண்டபம் :- திரு கந்தையா நகுலேஸ்வரன்
    (முகப்பு – முருகன், வள்ளி, தெய்வானை)
18. மின்னிணைப்பு வேலைகள் :- திரு.ஐயம்பிள்ளை இரவீந்திரன் குடும்பம்
19. தெற்குப் புறக் கொட்டகை :- திரு. சண்முகம் குடும்பம், கோவிலில் இருந்த கட்டிடப் பொருட்கள்
20. ஒலிபெருக்கிச் சாதனம் :- பிரம்மஸ்ரீ.க.மோகன் சர்மா
21. கைலாய வாகனத் தரிப்பிடம் :- திரு.சரவணை கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய விஷேட உற்சவங்களும் உபயகாரர்களும்

சித்திரை மாதம்

1. வருஷப்பிறப்பு – திரு.பொ.அனீரா குடும்பம்
2. கார்த்திகை உற்சவம் – திருமதி.தங்கம்மா குமாரசாமி குடும்பம்
3. வெள்ளிக்கிழமை உற்சவம்
   1. திரு.ம. சிற்றம்பலம் குடும்பம்
   2. திரு.பொ.பாலகுமாரன் குடும்பம்
   3. திரு.ஆ.விசுவலிங்கம் குடும்பம்

வைகாசி மாதம்

1. கார்த்திகை உற்சவம் – திருமதி. அரியமலர் குடும்பம்
2. வைகாசி விசாக உற்சவம் – திரு. தம்பிராசா குடும்பம்
3. வெள்ளிக்கிழமை உற்சவம்
   1. திரு. திருஞானசம்பந்தர் குடும்பம்

ஆனி மாதம்

ஆனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு மகோற்சவம்

| | | |
|---|---|---|
| 1. கொடியோற்றம் | – | திரு.சு.கதிர்காமநாதன் குடும்பம் |
| 2. 2ம் திருவிழா | – | திரு.ஆ.சந்திரசேகரம் குடும்பம் |
| 3. 3ம் திருவிழா | – | கோவில் உபயம் |
| 4. 4ம் திருவிழா | – | திரு.சி.க.திருச்சிற்றம்பலம் குடும்பம் |
| 5. 5ம் திருவிழா | – | திரு.பொ.செல்வரத்தினம் குடும்பம் |
| 6. 6ம் திருவிழா | – | திரு.கு.சேனாதிராசா குடும்பம் |
| 7. 7ம் திருவிழா | – | மயிலணி வடக்கு அடியார்கள் |
| 8. 8ம் திருவிழா | – | திரு.மயில்வாகனம் குடும்பம், திரு.சிவதாசன் குடும்பம் |
| 9. 9ம் திருவிழா | – | திருமதி. இரத்தினானந்தன் குடும்பம் |
| 10. சப்பறம் | – | திரு.சி.சுப்பிரமணியம் குடும்பம் |
| திருக்கல்யாணம் | – | திரு.இ.திருநாவுக்கரசுகுடும்பம், |
| 11. தேர்த்திருவிழா | – | Dr.இராமநாதன் குடும்பம் |
| 12. தீர்த்தோற்சவம் | – | திரு.இ.ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம் |
| கொடியிறக்கம் | – | திரு.த.திருநாவுக்கரசு குடும்பம் |
| வைரவர் மடை | | திரு. சங்கரப்பிள்ளை குடும்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திரு.மா.சிவகுமார் குடும்பம்

2. திரு.சி.இராசதுரை குடும்பம்

ஆடி மாதம்

ஆடிக் கார்த்திகை உற்சவம் – திரு.சி.சுந்தரமூர்த்தி குடும்பம்

வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திருமதி. மாரிமுத்து குடும்பம்

2. திருமதி. ஆ. நாகேந்திரம் குடும்பம்

3. திரு. துரைராசசிங்கம் குடும்பம்

4. திருமதி.ந.குணமணி குடும்பம்

ஆவணி

1. கார்த்திகை உற்சவம் – திரு.இரத்தினசிங்கம் குடும்பம்

2. கிருஷ்ணஜெயந்தி உற்சவம்– திரு.மா.தேவராசா குடும்பம்

திரு.அ.சிவயோகநாதன் குடும்பம்

3. வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திரு.தி.சிவகுமார் குடும்பம்

2. திரு.நவரத்தினம் குடும்பம்

3. திரு.நேசன் குடும்பம்

4.

4. ஆவணி உத்தர மகாசங்காபிசேகம்

திரு.கு.வரதராசா குடும்பம்

5. வரலட்சுமி பூசை திரு.அ.கணநாதன் குடும்பம்

6. விநாயகர் சதுர்த்தி திரு.சு.சிவஞானம் குடும்பம்

புரட்டாதி

1. கார்த்திகை உற்சவம் திரு.அ.செல்வராசா குடும்பம்

2. நவராத்திரி . மானம்பூ உற்சவம் கோவில் உபயம்

3. நான்கு சனிக்கிழமைகளிலும் சனீஸ்வர விசேட வழிபாடு

4. வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திரு.அ.சுந்தரலிங்கம் குடும்பம்

2. திரு.செ.சிவயோகம் குடும்பம்

3. திருமதி. தம்பிநாயகம் பேபி குடும்பம்

4. திரு.தே.சுவாஸ்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி

1. கார்த்திகை உற்சவம் – திரு.சி.யோகநாதன் குடும்பம்

2. வெள்ளிக்கிழமை உற்சவம்:–

1. திரு.சி.மகேசன் குடும்பம்
2. திருமதி. இரத்தினம் அன்னலட்சுமி குடும்பம்
3. திருமதி ருக்மணி சுப்பிரமணியம்

3. தீபாவளி அபிஷேகம் – கோவில் உபயம்

4. கேதாரகௌரி பூசை – கோவில் உபயம்

5. கந்தசஷ்டி :–

1. திரு.சூரியகுமார் குடும்பம்
2. திருமதி.தி. கனகசபாபதி குடும்பம்
3. Dr. சுப்பிரமணியம் குடும்பம்
4. திரு.சுந்தரலிங்கம் குடும்பம்
5. திரு.சு.பாலந்திரா குடும்பம்
6. சூரசம்ஹாரம் – திரு.சங்கரப்பிள்ளை குடும்பம்
   திரு.சி.தனேஸ்வரன் குரும்பம்
7. திருக்கல்யாணம் – திரு.செ.ஈஸ்வரானந்தன் குடும்பம்

6. பௌர்ணமி அபிஷேகம் – கோவில் உபயம்

கார்த்திகை

1. திருக்கார்த்திகை உற்சவம்

காலை – செல்வி.இ.இராமநாதன் குடும்பம்

மாலை – திரு.குமார்சாமி குடும்பம்

2. வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திரு.வே.தம்பிரட்ணம் குடும்பம்
2. திரு.தேவராசா குடும்பம்
3. திரு.வை.சூரியமூர்த்தி குடும்பம்
4. திரு. செந்தூர்ச் செல்வன் குடும்பம்

3. விநாயகர் ஷஷ்டி விரதம் 21 நாட்கள் விநாயகர் விஷேட அபிஷேகம், வழிபாடு

மார்கழி

1. விநாயகர் சஷ்டி – பிரம்மஸ்ரீ கார்த்திகேய ஐயர் குடும்பம்

2. கார்த்திகை உற்சவம் – திருமதி.கனகரட்ணம் மங்களநாய்கி குடும்பம்

3. வெள்ளிக்கிழமை உற்சவம்

1. திரு.ம.சத்தியபாலர் குடும்பம்
2. திரு.வ.சற்குணசிங்கம் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. திரு.சி.பராசக்தி குடும்பம்

4. திருவெம்பாவை

1. திரு.க.செல்வக்குமாரன் குடும்பம்
2. திரு. ஆசைப்பிள்ளை குடும்பம்
3. திருமதி.க.சிவசுப்பிரமணியம் குடும்பம்
4. கோவில் உபயம்
5. திருமதி.வாமதேவன் அம்பிகா குடும்பம்
6. திரு.ஆ.நாகேந்திரம் குடும்பம்
7. திரு.க.திருநாவுக்கரசு குடும்பம்
8. திரு.கா.கனகசபை குடும்பம்
9. திரு.கு.சேனாதிராசா குடும்பம்
10. திருமதி.ச.இராசரத்தினம் குடும்பம்

5. வைகுண்ட ஏகாதசி — திரு.சி.தேவதாசன் குடும்பம்

தை

1. தை மகரசங்கிராந்தி அபிஷேகம்– திரு.ச.விமலகாந்தன் குடும்பம்
2. தைப்பூசம்
   - காலை – திரு.மு.குமாரசாமி குடும்பம்
   - மாலை – திருமதி.பூ.செல்லப்பா குடும்பம்
3. கார்த்திகை உற்சவம் – திரு.கா.ஐயம்பிள்ளை குடும்பம்
4. வெள்ளிக்கிழமை உற்சவம்–

மாசி

1. மாசி மக அபிஷேகம் – திரு.சோ.அருணகிரிநாதன் குடும்பம்
2. கார்த்திகை உற்சவம் – திருமதி.ந.அன்னபாக்கியம் குடும்பம்
3. சிவராத்திரி – திரு.முருகேசு குடும்பம்
4. வெள்ளிக்கிழமை உற்சவம் :–
   1. திரு.ந.சண்முகவேல் குடும்பம்

பங்குனி

1. பங்குனி உத்தர அபிஷேகம் – திரு.இ.உதயகுமார் குடும்பம்
2. கார்த்திகை உற்சவம் – திரு.சி. நன்னித்தம்பி குடும்பம்
3. வெள்ளிக்கிழமை உற்சவம் :–
   1. திரு.வே.வாரித்தம்பி குடும்பம்
   2. திரு.தங்கராசா குடும்பம்
   3. திரு.து.ஜெயஆனந்தராசா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிக்குரியோர்

எமது ஆலயத்தின் துரிதமான வளர்ச்சிக்குப் பங்காற்றிக் கொண்டிருக்கின்ற முருகனடியார்களே!

31.05.2004இல் நடைபெற்ற முருகப் பெருமானின் மஹாகும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மயிலணி முருகனின் அருட்கடாட்சம் என்றென்றுங் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

* மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தையும், சர்வபோதகாச்சாரியார்களாக இருந்து நெறிப்படுத்திய, பெருமதிப்பிற்குரிய சுன்னாகம் மயிலணி, சிவஸ்ரீ.ச. சோமாஸ்கந்தக் குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ.தா. மகாதேவக் குருக்கள், வட கோவை சிவஸ்ரீ. மு.பரமசாமிக் குருக்கள் ஆகியோருக்கும்,

* மஹா கும்பாபிஷேகத்தைப் பிரதம குருவாக இருந்து, கிரியைகள் அனைத்தையும் சிறப்பாக நடாத்திய சுன்னாகம் மயிலணி சிவஸ்ரீ.ச. ஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் அவர்களுக்கும்,

* மஹாகும்பாபிஷேகம் மற்றும் திருப்பணி வேலைகள் அனைத்துக்கும் வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கிய அமரர்.சிவஸ்ரீ.ச.வரதராஜேஸ்வரக் குருக்கள் குடும்பத்தவர்கள், குறிப்பாகத் தற்போது நித்திய நைமித்தியப் பூஜைகளைப் பரம்பரையாகச் செய்து வரும் பிரம்மஸ்ரீ.வ. உமாசுதசர்மா அவர்களுக்கும்,

* கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்குபற்றி, கிரியைகளை மிகவும் பக்தி பூர்வமாக நடாத்தி வைத்த சிவாச்சாரியப் பெருமக்கள், சர்வசாதகாச்சாரியார்கள் மற்றும் அந்தணப் பெருமக்களுக்கும், மேலும்,

* மஹா கும்பாபிஷேகத்துக்கு மற்றும் திருப்பணி வேலைகளுக்கும் வெளி நாடுகளிலிருந்தும் உள்நாட்டில் இருந்தும் அறக்கொடைகள் வழங்கிய அடியார்கள்,

* திருப்பணி வேலைகளைப் பொறுப்பேற்று அவற்றுக்கான நிதியுதவிகளை வழங்கிய அடியார்கள்,

* வர்ணப் பூச்சுவேலைகள், திருத்த வேலைகளை அழகுறநிறைவேற்றிய அராலியூர் சிவா குழுவினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* யந்திர வடிவமைப்பு மற்றும் அஷ்டபந்தன வேலைகளைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த யாழ்ப்பாணம் பாஸ்கரன் ஆசாரியார் அவர்கள்,

* கட்டிட அமைப்புக்கள், திருத்த வேலைகள் மேற்கொண்ட மயிலணி வடக்கைச் சேர்ந்த திரு.மகேந்திரம் குழுவினர் மற்றும் கட்டிட ஒப்பந்தகாரர்,

* மின்னிணைப்பு வேலைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றிய திரு.த.தயானந்தன் அவர்கள்,

* மங்கள வாத்தியத்தால் இசையர்ப்பணஞ்செய்த நாதஸ்வரவித்வான் மல்லாகம் இ.இந்திரகுமார் குழுவினர்,

* பூமாலை, மற்றும் சமித்து வகைகளை நிறைவாக வழங்கிய திரு.கந்தசாமி அவர்கள்.

* கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய தொண்டுகள் ஆற்றிய ஆலய தொண்டர்சபை உறுப்பினர்கள்.

* கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய அனைத்து விதமான உதவிகளை வழங்கிய மயிலணி சைவமகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்.

* திருப்பணி வேலைகளுக்கு வேண்டிய சரீர உதவி வழங்கிய
  1. ஐயனார் சனசமூகநிலையம்
  2. சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம்
  3. ஜன சக்தி சனசமூக நிலையம்

  ஆகியவற்றின் உறுப்பினர்கள்,

* ஆலய மண்டலாபிஷேக உபயகாரர்கள்,

* கும்பாபிஷேக விழாவின் சிறப்புக்கும் சான்றுக்குமான வரலாற்றுப் பதிவான கும்பாபிஷேகச் சிறப்பு மலருக்குச் சிறப்பையும் பெறுமதியையும் நல்கும்வகையில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், மற்றும் கட்டுரைகள் வழங்கிச் சிறப்பித்த அந்தண சிரேஷ்டர்கள், அறிஞப் பெருமக்கள்,

* இம்மலரினைக் கவர்ச்சியாகவும் செம்மை யாகவும் அச்சேற்றி உதவிய யாழ் கரிகணன் பிறிண்டேர்ஸ்,

* கும்பாபிஷேக விழா தொடர்பான விளம்பரங்கள், அறிவித்தல்களை வெளி யிட்டு உதவிய 'உதயன்' மற்றும் 'வலம்புரி' பத்திரிகை நிறுவனங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கும்பாபிஷேக தினத்தன்று 'உதயன்' பத்திரிகை மூலம் கும்பாபிஷேகச் சிறப்பு மலர் வெளியிட்ட சுன்னாகம் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் உரிமையாளர்,

* ஆலயத் திருப்பணி வேலைகளும் கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெறு வதற்கு வேண்டிய நிதி சேகரிப்பு உதவிகள் ஒத்துழைப்புக்கள் வழங்கிய அனைத்து திருப்பணிச்சபை உறுப்பினர்கள்,

* நிதி தொடர்பான விடயங்களை மிகத் திறம்படவும் சிறப்பாகவும் நடைமுறைப் படுத்திய திருப்பணிச் சபைப் பொருளாளர் பிரம்மஸ்ரீ.கா.ஸ்ரீநிவாசன் அவர்கள்,

* திருப்பணிச் சபை ஆரம்பிக்கப்படுவதற்கும் திருப்பணி வேலைகள், மஹா கும்பாபிஷேகம் முதலியன சிறப்பாக நடைபெறுவதற்கும் வேண்டிய ஆலோசனைகள், ஒத்துழைப்பு க்கள் வழங்கிய கோவில் முன்னாள் தர்மகர்த்தா வைத்திய கலாநிதி இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் திரு.சி.யோக நாதன் அவர்கள்,

ஆகிய அனைவருக்கும் திருப்பணிச் சபையினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

திருப்பணிச்சபை,<br>
மயிலணிக் கந்தசுவாமி கோவில்,<br>
சுன்னாகம்.

---

## ஸ்ரீ வரலட்சுமி விரதம்

இந்த விரதம் ஆடிமாதம் சுக்கில பட்சத்தில் 2வது வெள்ளிக்கிழமை அன்று அனுட்டிக்கப் படுகின்றது. முன்பு பார்வதி அம்மையார் ஸத்புத்திர்னை வேண்டி இவ் விரதத்தை அனுட்டித்ததனால் இவ் விரத மகிமையால் ஷண்முகன் தோன்றினான். வரலட்சுமியை மகிழ்விக்கக்கூடிய இவ்விரதம் அனுட்டிக்கும் பெண்கள் வாழ்வில் சகல போகங்களையும் அனுபவித்து பின் கைந்தம் சேருவாள். இவ்விரதம் அனுட்டிக்கும் பெண்கள் ஒன்பது முடிச்சிட்ட மஞ்சள் காப்பை வலது கையில் கட்டவேண்டும் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுத்து அவர்களிடம் ஆசி பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ், 424 காங்கேசன்துறை சாலை. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2717,4590123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org